அடிமை அமரன்

(அங்கில் டாம்'ஸ் கேபினைத் தழுவியது)

எழுதியவர் :

தே. வீரராகவன், M.A.,

தமிழாசிரியர், போர்டு ஹைஸ்கூல், இடைப்பாடி,
சேலம் ஜில்லா ;

[பார்வதிபாய், வீரன், வருணன், விடுதலை நல்கிய வீரர்
நாடு போற்றும் நால்வர் முதலிய நூல்களின்
ஆசிரியர்]

எஸ். வாஸன் கம்பெனி,

மயிலாப்பூர் : : மதராஸ்.

 1956 [விலை அணா 14

Approved by the Madras Text-Book Committee for class use, vide Supplement to Fort St. George Gazette dated 4th May 1955—page 28.

ராஜா பவர் பிரஸ், சென்னை-14.

முன்னுரை

உலகத்தில் சமயப்புரட்சி, அரசியற்புரட்சி முதலிய எத்தனையோ புரட்சிகள் நிகழ்ந்துள்ளன. எல்லாவிதப் புரட்சிகட்கும் பின்னணியில் நின்று அவ்வவ் வியக்க வீரர்களை முன்னணிக்குக் கொண்டுவந்து வெற்றிகாணச் செய்தது, வன்மை படைத்த எழுத்துவீரர்களது மழுங்காத பேனாவின் கூர்முனைதான் என்பது அனைவரும் அறிந்த உண்மை. அத்தகைய எழுத்துவீரர்களுள் ஒருவரான ஹாரியட் பீச்சர் ஸ்டோவ் (Mrs. Harriet Beecher Stowe) என்பவர் எழுதிய 'அங்கில் டாம்'ஸ் காபின்' (Uncle Tom's Cabin) என்னும் நூல், பொதுவாக உலகமக்கள்உள்ளத்திலும், சிறப்பாக வடஅமெரிக்கர் சமுதாயத்திலும் செய்த மாபெரும் புரட்சியால் 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் மனிதவர்க்கத்தின் வரலாற்றினை மாசுபடுத்திவந்த, அநாகரிகப்பழக்கமான, அடிமைவாணிகத்தை அடியோடு அழித்தற்குக் காரணமாயிருந்தது. ஆபிரகாம் லிங்கன் அடிமைகள்விடுதலைச்சட்டத்தை இயற்றி வெற்றிகாணச் செய்வதற்குப் பக்கத்துணையாயிருந்து உதவியது இந்நூலே. இதுகாறும் எழுதப்பெற்ற ஆங்கிலநூல்களுள், இந்நூலைப்போல் அவ்வளவு பெருகிய அளவில்—பல கோடிக்கணக்கில்—விற்பனையான நூல் வேறொன்று இல்லை. இதிலிருந்தே இதன் ஏற்றத்தை நன்கு உணரலாகும். இந்நூலினை அடியாகக்கொண்டு வெளிவரும் "அடிமை அமரன்" இன்றும் பலவித அடிமைத்தளங்களுக்கு ஆக்கங் கொடுத்துவரும் தமிழ்மக்களது நற்சிந்தனையைத் தூண்டாமலிராது. இது மாணாக்கர்கள் மட்டுமன்றி ஏனையோரும் படிக்கவேண்டிய முதன்மையான நூல்களுளொன்றாகும்.

'முழுமணிப் பூணுக்குப் பூண் வேண்டா.'

டும்
வட்டப்பாடி,
-9- 54.

தே. வீரராகவன்

உள்ளுறை

அடிமை அமரன்

1. நன்னெஞ்சனும் கன்னெஞ்சனும்

“இந்த வியாபாரத்தை இப்படித்தான் யான் முடிக்க விரும்புகிறேன்.”

“நீங்கள் சொல்வதை என்னால் ஏற்க முடியாது; முடியவே முடியாது,” என்று தன் விருப்பம் இன்மையை அழுத்தமாகத் தெரிவித்துக்கொண்டே நன்னன், தன் கையில் வைத்திருந்த கலத்தின் நீரைப் பருகினான்.

“யான் கூறுவதை நீங்கள் சிறிது பொறுமையுடன் கேட்கவேண்டும். நல்லானை மற்ற அடிமைகளுடன் ஒருவனாகக் கருதக்கூடாது. பிறப்பினால் அவன் ஓர் அடிமையென்பதில் ஐயமின்று; பார்வையிலும் அப்படியே. ஆனால் அவன், பண்பிலே ஓர் அமரன்; நன்மக்களுக்கு வரம்பா யிருப்பவன். நான் சொல்லும் விலைக்கு அவனை மகிழ்வுடன் வாங்க அடிமை வணிகர்கள் ‘நான் முந்தி, நான் முந்தி’ என்று போட்டி போட்டுக்கொண்டு வருவார்கள். அவன் கைப்பட்ட எப்பணியும் கண்ணாடிபோல் ஒளிரும். உயர்ந்த மக்களென உயர்வாகப் பே...ளுள் கொள்ளும் நாம்கூட அவன்பால் உள்ள உ...லென வொழுக்கத்தைக் கண்டு நாணித் தலை குனிய...வண்டும். ...டும். அவன் உள்ளம் பளிங்கினும் தூயது. வஞ்சனையும் அவன் அறியாதவை. ஒரு...

நூறு ஆடுகளை நல்லானிடம் ஒப்படைத்து, ஐம்பது கல் தொலைவுக் கப்பாலுள்ள பனங்காட்டுச் சந்தையில் அவற்றினை விற்றுவர அவனை அனுப்பினேன்.

"அப்போது அவனுடன் சென்றிருந்த, என் பக்கத்துப் பண்ணைக்காரனை, முடியழகன் அவனிடம், 'நல்லான்! உனக்கு இப்போது நல்ல வாய்ப்பு வந்துளது. இந்த நூறு ஆடுகளையும் விற்று வரும் பணத்தை எடுத்துக்கொண்டு, அடிமைகளுக்கு விடுதலை யளித்துள்ள தென்றல்நாட்டுக்கு ஓடிவிடு. உன் விடுதலை இப்போது உன் காலடிகளில் வீழ்ந்து கெஞ்சுகிறது. உன்னைப் பீடிக்குந் தொல்லைகளுக்கு நீ எல்லை காணலாம். வானில் பறக்கும் இன்பப் பறவைபோல் கட்டுப்பாடற்று நீ வாழலாம்' என்றனும். 'ஐயா, கண்ணினும் இனிய விடுதலைக்காக உயிரினும் இனிய உண்மையைப் புறக்கணிக்குங் கீழ்மக னாகமாட்டேன். தன் தலைவனை வஞ்சித்த தன்னலப் பேயன் என்று தரணியில் இகழப்படுவதினும், உண்மையைப் போற்றும் அடிமையாய் வாழ்ந்து உயிர்விடுவதை வரவேற்கின்றேன். ஆதலால், எனக்கு நல்லுரை பகர்வதை அருள் கூர்ந்து இதனோடு நிறுத்திக்கொள்ளுங்கள். உங்கள் அன்பிற்கு நன்றி,' என்று திட்டமாகக் கூறிவிட்டானும்!

"இதனை முடியழகனே என்னிடம் கூறி நல்லானைப் பாராட்டினான். அன்றியும், தன் கடமையைச்

21. ·தில் மதியும் பரிதியும்கூட அவனுடன்

22. ழிட முடியாது. என் வீடு மாடு, தனம்

23. கன

தானியம், நிலம் புலம், யாவும் அவன் மேற்பார்வையில்தான் இருக்கின்றன. இவை யனைத்துக்கும் மேலாக, அவன் இறைவனிடம் மாறு அன்பு பூண்டவன். இவ்வளவு அரும் பண்புகள் நிறைந்த நல்லானை யான் விற்கத் துணிகின்றேனென்றால் அதற்குக் காரணம், எவ்வாற்றானும் தங்கள் கடனைத் தீர்த்துவிட வேண்டும் என்ற ஒரே நினைப்புத்தான்."

சந்தனப்பண்ணை முதலாளியான சொக்கனும் கன்னல்நாட்டைச் சார்ந்த நன்னனும், முன்னவரது மாளிகை முன்புறத்து அறை யொன்றில் அமர்ந்து மேற்கண்டவாறு உரையாடிக்கொண்டிருந்தனர். அப்போது அவ்வறையின் கதவினைத் திறந்துகொண்டு, நான்கு ஆண்டுகட்கு மேற்படாத குழந்தை ஒன்று உள்ளே நுழைந்து, நன்னன் அமர்ந்திருந்த நாற்காலியின் கீழே கிடந்த பழத் தோல்களை எடுத்துக் கடித்தது.

குழந்தையின் குறுநகை தவழும் முகத்தையும், ஒளிவீசும் இரு கண்களையும், சுறுசுறுப்பான நடையையும் கண்ட நன்னன்,

" சொக்கனாரே ! இச் சிறுவனையும் நல்லானுடன் கொடுத்துவிடும். நீர் எனக்குத் தரவேண்டிய கடன் தீர்ந்துவிட்டதாகப் பற்றுச்சீட்டுத் தந்து விடுகின்றேன். இதுவே இறுதியான பேச்சு " என்று கூறி, மேலும் பேசத் தொடர்ந்தபோது, அவ்வறையினுள் எழில் பூத்த இளநங்கை யொருத்தி மெல்லென நுழைந்து, " தலைவ! மன்னித்தருள வேண்டும்.

அமுதனை எடுத்துப்போக வந்தேன். துடுக்குப்பையன் உள்ளே ஓடி வந்துவிட்டான்," என்று சொல்லிக்கொண்டே அவனை எடுத்து மார்போடு அணைத்துக்கொண்டு வெளியே சென்றாள்.

அவள் யார்?

அவ்வளவு அன்புடன் அமுதனை எடுத்து அணைத்துக்கொள்பவர் அவன் அன்னையைத் தவிர வேறு யாராயிருக்கக்கூடும்?

"பிஞ்சினைக் காம்பினின்றும் கொய்வது தீது, பெரும் பாதகம். அமுதனை அவன் அன்னையிடமிருந்து பிரிக்கமாட்டேன்," என்று உரத்த குரலில் கூறினார் சொக்கனார். அவருடைய சொற்களில் உறுதி ஒலித்தது.

"நம்மைப்போன்று அன்புணர்ச்சி இந்த அடிமைகளுக்குக் கிடையாது. தாய் சேய், கணவன் மனைவி, என்னுங் கட்டுக்கள் அவர்கள் கற்பனைக்கு அப்பாற்பட்டவை," என்று சிரித்துக்கொண்டே பதிலளித்தான் நன்னன்.

"உங்களிடத் திருக்கும் அடிமைகள் ஒருகால் அவ்வா றிருக்கலாம். ஆனல், என் அடிமைகள் மனிதப்பண்பு படைத்தவர்கள்."

"வாடைநாட்டாராகிய உங்களிடமுள்ள பெருங் குற்றம் இதுதான். நீங்கள் அடிமைகளை அடிமைகளாக நடத்துவதில்லை. நாகரிகம் வாய்ந்த நம்மோடு ஒத்த மக்களைப்போன்று நடத்துகிறீர்கள். அதனல் அவர்கள் ஆணவம் மிக்கு, அடிமை

வணிகர்களாகிய எம்மை அசட்டை செய்கின்றனர். தம்மை விற்பனைப்பொரு ளென்று அவர்கள் நினைப்பதில்லை.

"சரி! உங்கள் முடிவுதான் யாது? எனக்கு நேரமாகிறது" என்று வினவிக்கொண்டே நன்-லன் தான் அமர்ந்திருந்த இருக்கையைவிட்டு எழுந்தான்.

"இன்று மாலை வாருங்கள். என் முடிவைத் தெரிவித்துவிடுகின்றேன்," என்று சொக்கனார் சொல்லவும் மாலையில் வருவதாகக் கூறிவிட்டு நன்னலன் அகன்றான்.

சந்தனப்பண்ணையின் உரிமைக்கார ராகிய சொக்கனார் அருள் உள்ளம் படைத்தவர். அவர் பண்ணை ஆயிரங்காணிப் பரப்பு உடையது. பல அடிமைகள் அவருடைய பண்ணையில் வேலை செய்து-வந்தனர். தாங்கள் நாகரிக மக்களினின்று வேறு-பட்டவர்க ளென்பதையும், அடிமைகளாக வாழ்ந்து மடிவதற்கே பிறந்தவர்க ளென்பதையும் மறந்து, தலைமைமக்களுடன் ஒக்க வாழும் உயர்நிலையைச் சொக்கனாரும் அவர் இல்லாள் முழுமதியாரும் தம் அடிமைகளுக்கு அளித்திருந்தனர். அடிமைமக்களை உயர்மக்களாகக் கருதவேண்டியதில்லை யென்றும், அஃறிணைப்பொருள்களைப் போன்று நடத்துதலே சாலு மென்றும் வாடைநாட்டுச்சட்டம் விதித்திருந்-தும், சந்தனப்பண்ணையில் அடிமைகளின் வாழ்வு உயர்திணை மக்களின் வாழ்வாகவே திகழ்ந்தது. அங்குத் தங்கள் தங்கள் கருத்துக் கியைந்த ஆண்க-

ளுடன் பெண்களும், பெண்களுடன் ஆண்களும் கூடி, இல்லறத்தை மேற்கொண்டு நன்மக்களைப் பெற்று உவப்புடன் வாழ்ந்துவந்தனர்.

சொக்கனுர் ஒரு பெருவணிகத்தி வீடுபட்டுப் பொருளை யிழந்து, கன்னல்நாட்டைச் சார்ந்த நன்னனுக்குக் கடனளி யானுர். அந்தக் கடனைத் தீர்க்கச் செய்த முயற்சியின் விளைவாகத்தான் சொக்கனுர் நல்லானை விற்க நேர்ந்தது. நல்லானை விற்கச் சொக்கனுருக்குச் சிறிதும் விருப்பமில்லை. எனினும், நன்னனது வெருட்டல் உருட்டல்களுக்குப் பணியவேண்டிய நிலை வரவே, நல்லானின் நல்விதி-யும் மாறுபட வேண்டியதாயிற்று.

அமுதனை எடுத்துச் செல்ல அறையுட் புகுந்த எழிலி, தன் காதுகளில் வீழ்ந்த இரண்டொரு சொற்களினுல் ஐயங் கொண்டு அறைக்கு வெளியே நின்று, தன் தலைவனுக்கும் வணிகனுக்கும் நடந்து-கொண்டிருந்த உரையாடலை மந்தணமாகக் கேட்-டாள். தன் அரும்பு—அமுதன்—தன்பாலிருந்து பிரிக்கப்படவிருப்பதை அறிந்துகொள்ள அவளுக்கு அதிக நேரம் செல்லவில்லை. மேலும் தொடர்ந்து அவர்கள் பேச்சினைக் கேட்பதற்குள் தலைவி விளிக்கவே அங்குச் செல்ல நேர்ந்தது.

எழிலியின் முகத்தில் சோகச்சாயல் அடர்ந்-திருப்பதையும், கண்கள் கலங்கியிருப்பதையும், நடை-யிலும் பேச்சிலும் தளர்ச்சியும் தடுமாற்றமும் இருப்-பதையும் குறிப்பினு லுணர்ந்த முழுமதியம்மை "என்ன எழிலி! உன் கண்களில் நீர் தத்தளிக்-

கின்றது; தோற்றத்தில் ஒருவிதப் படபடப்புத் தெரிகின்றது. என்ன செய்தி?" என்று வினவினள்.

"ஒரு வணிகர் வந்து ஐயாஅவர்களுடன் பேசிக்கொண்டிருக்கிருர். உயிரினை உடலினின்றும் பிரிக்கமாட்டீர்களே, அம்மா! என் அமுதை என்னை விட்டு......?"

"போடி! பிச்சி! நம் ஐயாஅவர்களின் பண்பு உனக்குத் தெரியாதா? அதுவும் நம் அமுதனையா விற்க அவர் நினைப்பார்! நிகழக்கூடாததை நினைத்து நிலைகுலையாதே."

"இல்லையம்மா! அமுதன் விலைகூறப்படுவதை நான் என் காதுகளால் கேட்டேன்."

"எழிலி! வருந்தாதே! அமுதனை விற்க யான் உடம்படமாட்டேன் — இருந்தாலும் இவ்வளவு பாசத்தை நீ அவனிடம் வைத்தல் கூடாது. எப்பொழுதும் எப்பொருளையும் இழக்க நம் உள்ளத்தைப் பக்குவப்படுத்திக்கொள்ளவேண்டும். நம் வீட்டுக்கு வருவோரெல்லாம் அமுதனை விலை பேச வருவதாக நீ நினைப்பது அந்த உளவுரன் இல்லாமையினு லாகும்."

"அது இல்லாதது தவருக இருக்கலாம். அத்தவற்றுக்குக் காரணம் தாயுள்ளம் அம்மா."

"அறிந்தேன். போய் மோர் கொண்டு வா. அதற்குத்தான் அழைத்தேன்."

முழுமதி அறிவுடைய ஒரு நங்கை. கணவன் கருத்தறிந்து நடக்குங் காரிகை. அதனால் சொக்கனுருக்குத் தம் மனைவியிடம் அன்பும் மரியாதையும் உண்டு. இறையன்பும் சமயப்பற்று முடைய தம் மனையாளைப்பற்றிச் சொக்கனுருக்கு அடங்காத பெருமை. ஆனல், தன் கணவரது நல்லுள்ளத்தையும் அறிவுடைமையையும்பற்றி முழுமதி நன்கறிந்திருந்ததுபோல் அவருடைய செல்வநிலையைப்பற்றி அறிந்திருக்கவில்லை. கணவனுகச் சொன்னலன்றித் தானுக முற்பட்டு எதனையும் கேட்கமாட்டாள். பணத்தட்டின் விளைவாக நல்லானையும் அமுதனையும் விற்க வேண்டிய அவலநிலை தமக்கு வந்துவிட்டதை எப்படித் தம் மனைவிக்குத் தெரிவிப்பது என்ற கவலை சொக்கனுரின் உள்ளத்தை உடைத்தது. தன் கொழுநரின் அருளுள்ளத்தை நன்கறிந்திருந்ததனலேயே முழுமதி எழிலிக்கு அவ்வளவு உறுதியாக ஆறுதல் கூறினுள். தானும் அவ்வாறே உறுதியுட னிருந்தாள்.

---

2. மலரும் மணமும்

இருபது ஆண்டுகட்கு முன்னர் மூன்றுண்டுகள் நிரம்பாத குழவியாகவிருந்த எழிலியைச் சொக்கனர் பனங்காட்டுச் சந்தையில் விலைக்கு வாங்கினர். தாயினின்றும் பிரித்து விற்கப்பட்ட அத் தனியிளங்கொழுந்துக்கு முழுமதி அன்னையாயும் சொக்கனர் அத்தனுயும் அமைந்தனர். இவர்கள் இருவரது

கண்காணிப்பில் எழிலி அருமையாக வளர்ந்தாள். பிறப்பினால் அடிமையாயினும் வளர்ப்பினால் செல்வமகள்போல் வாழ்ந்தாள். வயது வந்ததும் எழிலி தன் பிறப்பினை யுணர்ந்து, அதனுக்கேற்ப, தன் தலைவன் தலைவி ஆகிய இருவரிடத்தும் செய்ந்நன்றி மறவாச் சீலத்துடன் ஒழுகினாள்; முழுமதியின் தனியுரிமைப் பணிப்பெண்ணா யமர்ந்து வேலை செய்துவந்தாள். சொக்கனார் வயது வந்த எழிலியைத் தம் பண்ணைக் கடுத்திருந்த மருதப்பண்ணையில் வேலை பார்த்துவந்த, கட்டழகும் கடமை உணர்ச்சியும் மிகுந்த, சின்னான் என்ற இளைஞனுக்கு வாழ்க்கைத் துணைவி யாக்கினார். கூரிய மதியும் சீரிய ஒழுக்கமும் சாதாரண மக்களினும் மீறிய செயற்றிறனும் படைத்தவன் சின்னான். எழிலி, சின்னான் ஆகிய இருவரின் இல்லறவாழ்க்கைக் கொடியில் பூத்த மூன்றாம் நறுமலர்தான் அமுதன். அமுதனுக்கு முன் தோன்றிய இரு ஆன்மாக்களும் மொட்டிலேயே கருகின.

சின்னானின் முதலாளி அழுக்காறு உடையவன். தன் அடிமையான சின்னான் தன்னினும் அறிவும் ஆற்றலு முடையவ னென்று பிறர் புகழ்வதைக் கேட்க அவன் சிறுநெஞ்சம் பொறுக்கவில்லை. ஆதலால் அமயம் வாய்த்தபோதெல்லாம், ஏதேனும் ஒரு காரணங்காட்டிச் சின்னான்மீது தனக்கிருந்த வஞ்சத்தைத் தீர்த்துவந்தான். சின்னானின் பொறுமையும் திறமையும் நாள்தோறும் மிகுவது, தன்னை அதிகமாகப் பழிப்பதாகவே அவன் புன்மதி

புகன்றது. அதனல் சின்னனுக்கு அவன் இழைத்த கொடுமைகள் மிகுந்தன. எடுத்ததற்கெல்லாம் வசைமாரி; கற்பனைக் குற்றங்களுக்கெல்லாம் கசையடி; சின்னன் அழுவதைக் காண்பதில் அவனுக்கு ஓர் ஆனந்தம்; அவன் துன்பக்கண்ணீரைக் காண்பது அவனுக்கு ஓர் இன்பக்காட்சி.

முழுமதியின் சொற்களினல் சிறிது ஆறுதல் பெற்ற எழிலி பகல்வேலைகளை முடித்துக்கொண்டு தன் அறைக்குச் சென்று படுத்துக் களையாறினள். அண்டையில் அமுதன் அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்தான். களைப்பு கண்களை மூட, எழிலி அப்படியே உறங்கிவிட்டாள்.

"எழிலி! எழிலி!!" என்ற ஓர் இன்குரல் அவளை எழுப்பியபோதுதான் எழிலி தன்னை உணர்ந்தாள்.

"அன்பே! எப்போது வந்தீர்கள்? வந்து நீண்ட நேரமாகிவிட்டதா?"

"இப்போதுதான் வந்தேன் எழிலி."

"இந்த வேளையில் நீங்கள் இங்கு வந்ததில் எனக்கு எவ்வளவோ ஆறுதல்."

"உனக்கோ ஆறுதல்; எனக்கோ இனி வாழ்க்கை மாறுதல். நான் பிறக்காமலிருந்திருந்தால் எவ்வளவோ நன்ருயிருக்கும்; உன்னைக் காணுமலிருந்திருந்தால் அதனினும் மிக நன்ருயிருக்கும்."

"ஏன் இப்படிச் சொல்லுகின்றீர்கள்?"

"ஏனு? நான் ஓர் அடிமையாகப் பிறந்தது முதற்குற்றம். என் பண்ணைமுதலாளியைவிட யான் அறிவும் ஆற்றலும் உடையவனுயிருப்பது இரண்டாவது குற்றம். என் தலைவன் தற்குறியாயிருக்க, நான் படித்தவனுயிருப்பது மன்னிக்க முடியாத மூன்ருவது குற்றம். படிப்பாளிகள்தாம் அவன் பகைவர்கள்; அறிவு அவனுல் நுகர முடியாத உணவு. என்னைப்போன்ற மற்ற அடிமைகளுக்கு, யான், அவர்கள் தொழில்களை அழகாகவும் விரைவாகவும் செய்துமுடிக்கக் கற்பிப்பதற்குப் பரிசு சவுக்கடிகள். எழிலி! இந்த நிலைக்கு இனி இறுதி தேடியாக வேண்டும்."

"நீங்கள் கூறுவதைப் பார்த்தால், ஏதோவொரு முடிவுக்கு வந்துவிட்டதாகவே தோன்றுகிறது. உணர்ச்சி வேகத்தில் எதையேனும் செய்துவிடுவீர்களோ என்று அஞ்சுகின்றேன்."

"ஆம்! உணர்ச்சிதான் முன்னேற்றத்துக்கு அடிகோலி; வெற்றிக்கு வழிகாட்டி; வாழ்க்கைவீரர்களின் கவசம். அதன் கைப்பாவையாக நான் இப்போது மாறிவிட்டேன். முன்னுல் என்னிடமிருந்த பொறுமை இப்போது பின்னடைந்துவிட்டது. இன்று என்ன நிகழ்ந்தது தெரியுமா? என் பண்ணையாடியின் மகன் ஒரு பசுவின் அருகிற் சென்ருன். அது அவனை முட்டிக் கீழே தள்ளிவிட்டது. பசு செய்த குற்றத்துக்காக அவன் என்னை மரத்தில் கட்டி அப் பையனைக்கொண்டு அடிப்பித்-

தான். இந்த அவமானத்துக்குப்பின்னும் நான் உயிர்வாழ வேண்டுமா?"

மேற்குறித்த செய்தியைச் சின்னன் அறிவித்து வந்தபோது அவன்முகம் சீற்றத்தினால் சிவந்தது; கண்கள் சுழன்றன; உதடுகள் துடித்தன. உடல் ஆடியது. அமைதியற்ற ஒருநிலை அவன்பால் காணப்பட்டது.

"எழிலி! அடிமையாகப் பிறந்த என்னை நீதான் நாகரிகமனிதனைப்போன்று வாழச் செய்துவிட்டாயாம். நான் அடிமையினத்தைச் சார்ந்தவன். சேற்றில் உழன்று, விலங்குகளுடன் ஒக்க வுண்டு வாழ்ந்துவரவேண்டிய எனக்கு, உயர்மக்களுக்குரிய, என் தலைவன் பிறந்த இனத்தாருக்கே உரிய, உயர்ஒழுக்கங்களை நீ அன்புடன் ஊட்டிவிட்டாயாம்! நீ செய்துவிட்ட அக் குற்றங்களுக்காக யான் உன்னை நீத்துவிட்டு, அவன் பண்ணையில் வேலை பார்க்கும் 'அஞ்சி' என்ற வோர் அடிமைப்பெண்ணை மணந்துகொண்டு அங்கேயேயிருக்கவேண்டுமாம். நீ இருக்குந் திக்கையும் நோக்கக் கூடாதாம். இந்தக் கட்டுப்பாட்டை யான் மீற முயற்சி செய்தால், என்னைச் சங்கிலியால் பிணித்து நாய்போ விழுத்துச் சென்று சந்தையில் விற்றுவிடுவானும்."

"தலைவ! நாம் அடிமைகளாகவிருந்தாலும் நம் திருமணம் இறைவன் திருமுன் நடந்ததென்பதை மறந்துவிடப் போகிறீர்களா?"

"எழிலி! இன்னும் நீ உலகம் அறியாத சிறு-பெண்ணைப்போலவே பேசுகின்றாய். இந்த வாடை-நாட்டிலும் இதனைச் சார்ந்துள்ள வேறு சில நாடு-களிலும் அடிமைகளுக்குத் திருமணமென்ற சடங்கும் கட்டுப்பாடும் இல்லையென்பதை நீ அறியாயா? நீயும் நானும் உயர்மக்களைப்போலப் பேச்சிலும் உணர்-விலும் வாழ்விலும் வாழ்ந்தாலும், நம் பிணைப்பினை அவர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமன்றோ? அவர்கள் விருப்பமே நம்மை ஆட்டுவிக்கும் சட்டம். அவர்கள் உள்ளப்போக்கின்படிதான் நமது வாழ்வு தாழ்வுகள் நிகழும். அதனாற்றான், தொடக்கத்-தில், 'நான் ஏன் உன்னைப் பார்த்தேன்' என்று வெறுத்துச்சொன்னேன். பணமுள்ளவர்களுக்குத்-தான் சலுகைகளும் சமூகவாழ்வும். அடிமைக்-கென்றால் சட்டங்களின் பொருளே மாறுபட்டு விடும். நம் எஜமானன் வீட்டுத் துரும்பும் இரும்பாக மாறி நமது மார்பில் பாயும். இன்று பச்சிளம்-பாலகனாயிருந்து நம் சிறுகுடிலில் இன்பவொளி வீசி, மழலைமழை பொழிந்து, இட்டும் தொட்டும் விளை-யாடி நம்மை மகிழ்விக்கும் அமுதனும் நாளை என்-னிலையை யேற்றுத்தா னாகவேண்டும். அவன் ஓர் அடிமையின் மகனல்லவா?

சின்னஞ்னின் மொழிகள் எழிலியின் இளகிய நெஞ்சத்தினைச் சம்மட்டிகொண்டு தாக்கியதுபோல் தாக்கின. அதனோடு அதுவரையில் மறைந்திருந்த அந்தக் கன்னெஞ்சமுடைய அடிமைவணிகனின் கொடிய தோற்றமும் அவள் மனக்கண்முன் எழுந்-

தது. அன்று காலையில் அவள் கண்டதையும் கேட்டதையும் தன் காதலனுக்கு அறிவிக்க அவள் உதடுகள் துடித்தன. இயல்பாகவே தன் தலைவன் இழைத்த கொடுமைகளால் வாடிக்கிடக்குஞ் சின்னனது உள்ளத்தை மேலும் சிதைக்க விரும்பாதவளாய் எழிலி பேச்சற்று ஊமையாய் உட்கார்ந்திருந்தாள். அப்போது சின்னன்,

"என் இதயவிளக்கே! நான் உன்னிடம் என் அன்பினைத் தெரிவித்துவிட்டு இறுதியாக விடைபெற்றுப்போகவே வந்துள்ளேன். இன்றிரவு, யானே என் விடுதலையைத் தேடிக்கொள்ளும் வகையில் இவ்விடத்தினின்று ஓடிவிடப் போகின்றேன்," என்று கூறிய சொற்கள் அசைக்கமுடியாத அவனது உறுதியைப் புலப்படுத்தின. இடியோசை கேட்ட நாகம்போன்று சின்னன்சொற்களைக் கேட்டதனால் தாக்குண்ட எழிலியின் கண்களில் 'குப்' என்று கண்ணீர் ஊறிக் கன்னங்களில் பாய்ந்தது. எழிலி கண்ணீரைப் பெருக்கிக்கொண்டே,

"எவ்விடத்துக்கு ஓடிவிடக் கருத்தோ?" என்று வினவினாள்.

"அடிமைகளுக்கு அரணளிப்பதும், மனிதப்பண்பற்ற விலங்குச்சட்டங்களுக்கு விலக்களித்து இறைவன்படைப்பில் அனைவரையும் ஒன்றெனக் கருதும் உயர்நீதிமான்கள் வாழ்வதும் ஆன தென்றல் நாட்டுக்கு."

"அப்படியானால் எங்கள் கதி........?"

"நிதி திரட்டி உங்களை மீட்பேன். அது கூட-வில்லையானால் உங்கள் நினைவிலே மாள்வேன். மாண்டபிறகு கட்டுப்பாடற்ற, அச்சமற்ற, மறுமையுலகிலே நாம் கூடிவாழ்வதைத் தடுக்க யாரால் இயலும்?"

"தப்பி யோடும்போது அகப்பட்டுக்கொண்-டால்?"

"வீரப்போர் செய்து விடுதலை பெறுவேன். இன்றேல், விழுப்புண் பட்டு வீரசுவர்க்கம் உறு-வேன். இப்போது யான் செய்துவிட்ட முடிவினைத் தடுக்க எவராலும் ஆகாது. மாடாய் மடிந்துபோவ-தினும் மனிதனாய் நிமிர்ந்து வாழ முயல்வேன்."

"அன்ப! எங்கள்பொருட்டு நீங்கள் உயிர் வாழத்தான் வேண்டும். தப்பமுடியவில்லையானால் தற்கொலை செய்துகொள்ளக்கூடாது. பேடிகளின் கை ஆயுதம் தற்கொலை; வாழ்க்கைப்போரில் வெற்றி காண முடியாத கோழைகளின் கருந்திரை தற்கொலை; உழைப்பின் உயர்வை உணராத சோம்பேறி-களுக்குப் பொய்விடுதலை காட்டுங் குறுக்குப்பாதை தற்கொலை; படைத்தவனின் கருத்தினைப் பாழாக்கி, உள்ளத்தே மறைந்தொளிரும் ஆற்றலை வீணாக்கி, தேன்பொழியுங் கனிமலர்ச்சோலை யாக்க வேண்டிய வாழ்வினை வெறும் பாலை யாக்குவது தற்கொலை. எவருக்கும் தீங்கு நினைக்காத, தீங்கு செய்யாத, நமக்கு இறைவன் திருவருள் துணை செய்யும். நீங்கள்

தப்பித்தான் ஆகவேண்டுமென்பதை நானும் உணர்கிறேன்."

"எழிலி! எனக்கு விடை கொடு. நாழிகை கடந்துவிட்டது; நான் வருகின்றேன். அன்பின் வடிவான, அருளின் உறைவிடமான, அனைவருக்கும் அன்னையும் அத்தனுமான, ஆண்டவன்பால் உங்களை ஒப்படைத்துவிட்டு, ஏதிலன்போற் செல்லுகின்றேன். தங்களுக்குத்தான் நுண்ணுணர்வு உண்டு; அன்பின் ஆற்றலைத் தாங்களே உணர முடியும் என்று செருக்குக் கொண்டுள்ள நம் தலைமையினத்தவர் நம்மைப் பிணைத்துநிற்கும் பாசத்தினைப் பார்ப்பார்களாயின், பொறாமையால் வெறி கொள்வர். உயிர்களுக்குள் அன்பெனும் அமரப்பண்பைப் படைத்த ஆண்டவன் அதை ஓர் இனத்தாருக்குமட்டும் உரிமையாக்கிவிடவில்லை. அந்த அன்பு உலகத்தில் இருக்கும்வரையிலும் நாம் ஒருவர்உள்ளத்தில் மற்றொருவர் இடம்பெற்றிருப்போம். அந்தக் கூட்டுறவைத் தடுக்க நம் வணிக முதலாளிகளுடைய சட்டங்களால் முடியாது. நான் நரம்பு, நீ நாதம்; நான் சொல், நீ பொருள். உடலால் பிரிக்கப்பட்டாலும் உள்ளத்தால் நாம் ஒன்றுபட்டு வாழ்வோம்," என்று தன்னுள் அடைபட்டுக் கிடந்த உணர்ச்சியைச் சின்னன் வெளிக்கொட்டிக் கொண்டிருந்தபோது, அமுதன் எழுந்து அவன் அருகிற் சென்றான்.

"அமுதா! இங்கே வா! என் கண்ணே! அடிமைக்கும் அன்பு உண்டடா! ஓர் அடிமைத்

தந்தை தன் அடிமை மைந்தனுக்கு அளிக்கும் இந்த இன்பப் பரிசு முத்தங்களுக்கு விலைகொடுக்க எந்த வணிகமுதலாளியிடமும் பணம் இராது. என்பாலன்றி இவற்றை நீ எங்கும் பெறமுடியாது," என்று சின்னன் கூறிக்கொண்டே அமுதனை எடுத்துத் தன் மார்போடணைத்துக்கொண்டான். அன்பு தொண்டையை அடைக்க, சொற்கள் நாவில் தடைப்பட, எஃகினும் வலிய அவனுடல் நடுங்கியது. அப்போது அவன் கடைக்கண்களில் திரண்டுநின்ற கண்ணீர்முத்துக்கள் உடைந்துபோன அவன் உள்ளத்தை எடுத்துக்காட்டின. பிரியும் நேரம் வந்துவிட்டதைக் காட்டுங் குறிப்பாகச் சின்னன் எழுந்திருக்கவே, எழிலி அவன் இருகைகளையும் பற்றித் தன்கண்களில் ஒற்றிக்கொண்டாள்; பின்னர் அவனை மும்முறை வலம்வந்து வணங்கி நின்றாள். அப்போது ஒருவர்கண்களினின்று பெருகிய பிரிவுக்கண்ணீர் மற்றொருவரை மஞ்சனமாட்டியது. அடிமைகளாகப் பிறந்த இரண்டுயிர்கள் அன்புப்பாதையிற் கூடி, சிறிதுகாலம் கைகோத்துச் சென்று பிரிவுவழியில் விலகின. கூடினவர்கள் பிரிந்தார்கள். உணர்ச்சியின் உச்சநிலையில் பேச்சு இருபாலும் நின்றது. மனிதர்மொழிகளைக் கொண்ட அகராதியில் காணப்படாத, செவியிற்படாத, இதய மொழிகள்தாம் பேசிக்கொண்டன. மின்னலைவிட்டு மேகம் மறைந்தது.

3. அமைதியில் புயல்

சந்தனப்பண்ணை சுமார் ஆயிரங்காணிப் பரப்புக் கொண்டதென்று முன்னரே கூறப்பட்டுளது. அடிமைகளின் கைவன்மைக்கும் பண்ணைமுதலாளியின் மதிவன்மைக்கும் எடுத்துக்காட்டாய் அப் பண்ணை இலங்கிற்று. கன்னலும் செந்நெலும் ஒருபால்; கமுகும் கதலியும் மற்றொருபால்; இஞ்சியும் மஞ்சளும் வேறொருபால்; மலர் தாங்குங் கொடிகளும் காய் தாங்குஞ் செடிகளும் கனி தாங்கும் மரங்களும் இடையிடையே தழைத்து நின்றன; மானும் மாடும், மயிலும் மந்தியும் தம்முள் மாறுபா டின்றி உறவு கொண்டாடுங் காட்சியானது அப் பண்ணைத்தலைவன் தன் பெருமையை மறந்து ஒருமையுணர்வுடன் தன் பண்ணையில் பணிபுரியும் அடிமைகளோடு பழகுவதை எடுத்துக்காட்டும் அளவில் இருந்தது.

சந்தனப்பண்ணையின் வடகோடி யெல்லையில் ஒரு சிறு குடிசை அமைந்திருந்தது. காட்சியில் அது ஓர் எளிய குடிசைதான்; எனினும், அதனுட் சென்று அதனைப் பார்த்தவர்கள்கருத்தில் அது ஒரு கலைக்கோயில். தென்றலில் ஒசிந்தாடும் பொன்றளிர்க் கொடிகளும், பன்மலர்ப் பாத்திகளும், காய் கனி மரங்களும் அக் குடிலின் புறவழகினைக் காட்டின. தாய்மையும் எளிமையும், பண்டங்களையும் பாத்திரங்களையும் அழகுபட அமைத்திருக்கும் ஒழுங்குமுறையும், குடிலின் அகவழகினை அணி செய்தன.

நல்லானும் அவன் இல்லாளுமே அக் கலைக்-கோயிலின் கடவுள்கள். சந்தனப்பண்ணையில் வேலைபார்த்து வந்த அடிமைகளின் கண்காணி நல்லான். பண்ணைமுதலாளியின் வீட்டுச் சமையற்காரி வல்லி. சமையல் வேலையில் வல்லியுடன் போட்டியிடக் கூடியவர் வாடைநாட்டில் எவருமேயில்லை. சமையற்றொழில் ஒரு கலையாக மாறியது வல்லியால். எஜமானர்கள் குறிப்பறிந்தொழுகுங் கூர்த்த மதியினள் அவள். உண்மையை உரைக்க வேண்டுமானால், கண்களிரண்டையும் இமை காப்பதுபோல் தம் முதலாளியின் குடும்பத்தினை நல்லானும் வல்லியும் காத்துவந்தனர் என்றே சொல்லவேண்டும்.

நல்லான் அடிமைகள் திரியும் நாடான பாலை வெளியிலிருந்து ஓர் அடிமைவணிகனால் வேறு பல அடிமைகளுடன் வேட்டையாடிக் கவரப்பட்டு, பனங்காட்டுச்சந்தையில் சொக்கனால் இரண்டாயிரம் வெள்ளிக்கு வாங்கப்பட்டவன். கருநிறத் தழகனான நல்லானுக்குக் கட்டமைந்த உடல் உண்டு; வேனிலிலும் கானலிலும் வேலை செய்து உரத்துப்போன அவன்காருடலுள், தும்பைமலரினும் தூய் தான வொரு பேருள்ளம் கட்டுண்டு கிடந்தது. அன்புக்கும் அருளுக்கும், உண்மைக்கும் ஒழுங்குக்கும் புறம்பான அடிமையினத்திற் பிறந்த நல்லான் இரக்கத்துக்கும் இணக்கத்துக்கும் எல்லைக்கோடாக அமைந்திருந்தது இயற்கையின்போக்கு ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்டது என்ற உண்மையைக் காட்டியது. நல்லான் அறிவிலும் ஆற்றலிலும் தலைமை

யினைத்தவரையும் தாண்டியவன்; செய்ந்நன்றி மறவாச் செம்மையான்; நீதியின் நிலையம். மற்றவர்களிடம் மதிப்பற்றுக்கிடந்த வாய்மையும் தூய்மையும் நல்லானிடம் புதுமெருகு பெற்று எளிமைக்கும் தாழ்மைக்கும் எடுத்துக்காட்டாக இலங்கின. அவனுடன் உரையாடுவது கடுங்கோடையில் தண்புனற் பொய்கையில் குடைந்தாடும் இன்பம் பயக்கும். அவனுடன் பழகுவது அமரருடன் கலந்துறைவதை யாளும். கல்லாத அவனது வாய்மொழி சொல்லாய்ந்த தொல்லோர்களுக்கும் கட்டளைக்கல். வாழ்வுப்பாதையில் முப்பதாண்டுகள் கடந்தபின்னர்த்தான் நல்லான் எழுத்துக் கூட்டிப் படிக்கத் தன் தலைவனின் மகனை அன்பனிடம் கற்றுக்கொண்டான். அறிஞனாகிவிடவேண்டுமென்ற அவாவினாலல்ல, ஆண்டவன் அருள்வாக்குக்கள் பொதிந்த திருமறையை யோதுவதற்காக. அன்பன்பால் பெற்றுக்கொண்ட அறிவினைக்கொண்டு நல்லான் நாடோறும் காலையிலும் மாலையிலும் திருமறையினை யோதுவான். கண் ஒன்று பார்க்க, கருத்து ஒன்று எண்ண, வாய் ஒன்று பேசும் கபடநாடக பக்தர்கூட்டத்தைச் சேர்ந்தவனல்லன் நல்லான்; காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நாதன் நாமத்தில் ஈடுபட்டுத் தன்னை மறந்து வழிபாடு செய்யுந் திருத்தொண்டன். மாலை வந்ததும் தினமும் நல்லான் சந்தனப்பண்ணையில் இருக்கும் அடிமைகளை ஒன்றுகூட்டுவான்; ஆண்டவனின் கருணையைப்பற்றி அவர்களுக்கு எடுத்துரைப்பான்; இறைவன்புகழை நெஞ்சார நினைத்து வாயாரப் பாடுமாறு போதிப்பான்;

அன்பின் உயர்வை அறிவிப்பான்; கடமையின் சிறப்பினை யெடுத்துக் கட்டுரைப்பான். அறிவின் கூர்மையைக்காட்டிலும் அனுபவவொளியே அவன் மொழிகளில் வில்லிடும். அங்கிருந்த அடிமைகளுக்கெல்லாம் நல்லானே ஞானத்தந்தையா யிருந்தான். அவர்கள் கவலையால் நலிவுற்றபோது நல்லான் ஆறுதல் கூறித் துன்பம் மாறுதல் செய்வான்; பெற்ற தாயினும் உற்ற தாயா யிருந்து சந்தனப்பண்ணை அடிமைகளுக்குப் பரிவுரை பகர்ந்து வருவான்.

ஆன்றோர்களினும் சான்றோனான நல்லானின் எதிர்கால வாழ்வு இன்று அடிமைவாணிகத் துலையில் மீட்டும் ஏற்றப்பட்டுவிட்டது. மீண்டும் மாலையில் வருவதாகச் சொல்லிச் சென்ற நன்னன் வந்தான்; தான் போட்ட திட்டப்படியே வியாபாரத்தை முடித்துக்கொண்டான். கடன்விலங்கில் மாட்டிக்கொண்ட சொக்கனும் நன்னன் இழுத்த வழியெல்லாம் செல்லவேண்டியவரானார். விற்பனை முறி வரையப்பெற்று விற்பவர் வாங்குபவர் ஆகிய இருவரும் அதிற் கையொப்பமிட்டனர். பச்சைப் பாலகனான அமுதனும், எல்லாரினும் மிக்கவனான நல்லானும் நன்னன் உடைமைகளாக்கப் பெற்றனர். பொற்கலத்துப் பெய்து பூசை செய்வதற்குரிய அமுதத்தை நாய் கவ்வியது!

---

4. பறவை பறந்தது

"இன்று காலை உங்களுடன் உரையாடிக்கொண்டிருந்த அந்த ஆசாமியைக் கண்டு நம் எழிலி மருண்டுபோயிருக்கின்றாள். அவன் அமுதனை வாங்க வந்திருக்கும் அடிமைவணிகன் என்று அவள் ஐயப்படுகின்றாள். நம் பால் உள்ள அடிமைகள் விற்கப்படமாட்டார்களென்று யான் எவ்வளவு எடுத்துக்கூறியும் அவள் அமைதி பெறவில்லை. வந்த அந்த மனிதர் யார்?" என்று முழுமதி அன்று மாலை தன் அறைக்கு வந்த சொக்கனாரை வினவினாள்.

"கன்னல்நாட்டு நன்னனிடம் யான் பட்ட கடன் நஞ்சுபோல் மிஞ்சிவிட்டது. கழுத்தின்மீது கத்தியை வைத்துக் கடனைத் தீர்க்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தினான். பிறவழிகளில் பணம் திரட்டி அவன்கடனைத் தீர்க்க எவ்வளவு முயன்றும் பலன் பெறவில்லை. நல்லானையும் அமுதனையும் அவனுக்கு விற்றால், கடனில் ஒரு பகுதியைத் தள்ளிவிடுவதாக அவன் கூறவே, அவ்விருவரையும் விற்க முடிவு செய்துவிட்டேன்.

"இத்தனை நாட்களாக அவர்களைப் பேணி வளர்த்த யான் இன்று அவர்களை விற்கவும் துணிந்துவிட்டேனென்றால் அதற்குக் காரணம் தாங்க முடியாத கடன்சுமைதான். அவர்களைப் பிரிவதில் என் உள்ளம் அடைந்துள்ள வேதனையை யான் எடுத்துக்கூற முடியாமலிருக்கின்றேன்."

"தன் வாழ்வையே நம்நலம் என்னும் பலிபீடத்தில் அர்ப்பணித்துக்கொண்ட நல்லானையா

விற்கத் துணிந்தீர்கள்? நானிலம் முற்றும் தேடினும் நல்லானைப்போன்ற வொரு மனிதனைக் காண முடியுமா? நல்லானுக்கு விடுதலை நல்கப்போவதாக உங்கள்நாவினால் ஒருமுறை யல்ல, ஓர் ஆயிரம்முறை உரைத்ததை மறந்துவிட்டீர்களா? உண்மை-யும் ஒழுக்கமும் ஏழைகளுக்குத்தானா? அதுதான் போகட்டும். அமுதனையும் விற்க உடன்பட்டீர்களே! அமுதன் என் மகன் இல்லைதான். ஆனாலும் யான் ஒருபெண். மக்களைப் பெற்ற தாய்க்குத்தான் தெரி-யும் மக்களைப் பிரிவதிலுள்ள துன்பம். ஒரு தாயுள்-ளம் தன் தனயன் உயிருடன் பறிகொடுக்கப்படும் வேதனையை ஓர் ஆணினால் உள்ளபடி அறிய முடி-யாது. இருக்க இடங் கொடுத்த ஓர் அன்னையின் வயிற்றின் எரிச்சலை அணைக்கக் கருணைத்தண்-ணீருக்குத் தவிர வேறெந்தத் தண்ணீருக்கும் ஆற்றல் இல்லை. எழிலியின் எதிர்காலம் அமுதன் என்னும் பாசக்கயிற்றில் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. அமு-தன் பிரிக்கப்பட்டால் எழிலியின் உயிரும் அவள் உடலினின்று பிரியும் என்பதை அறிந்துகொள்-ளுங்கள்."

"முழுமதி! உன் இளகிய நெஞ்சத்தை யான் இன்றுதானா காண்கிறேன்! என்றோ கண்டிருக்-கின்றேன். கருணையற்ற கன்னெஞ்சனாக என்னைக் கருதாதே. மலைப்பாறையினிடையேயும் தண்ணீர்ச் சுனை உண்டு. வடிவில் யான் ஆணயினும், வாழ்வில் பெண்மை மிக்கவ னல்லவா? தாங்க முடியாத கடன்சுமை காரணமாகத்தான் விற்கிறேன்."

“அவர்கள் இருவரையும் நாம் இழப்பதைவிடப் பிறபொருள்களை யிழக்கலாம். என் அணியாடைகளையும் மணியாரங்களையும் உங்கள்கடனை ஈடுகட்ட யான் உதவத் தயாராயிருக்கின்றேன். இப்பொழுதே பெற்றுக்கொள்ளலாம். ‘மனிதஉயிர் ஏனைய உயிர்களினும் உயர்வுடையது. அதன் புனிதத்தன்மை போற்றற் குரியது. மக்களாய்ப் பிறந்தோர் இறைவனொருவன் உளன் என்று உணர்ந்து அவனை யடையும் நெறியில் முற்படுவதனாலேயே விலங்குகளினின்று வேறுபட்டுள்ளனர்,’ என்றெல்லாம் கூறி, அறியாமையில் உழன்றுகொண்டிருந்த அந்த மாக்களை மக்களாக்கின என் உரைகள் இப்பொழுது என்னாகும்? ‘எஜமானர்கள் என்றால் இரக்கமற்றவர்கள்! சமயம் வாய்த்தால் பழிவாங்கப் பின்வாங்கமாட்டார்கள்’ என்ற எண்ணமன்றோ உங்கள்செயலால் அவர்கள் உள்ளத்தில் உண்டாகும். அமுதனையும் நல்லானையும் விற்குங் கருத்தினை அகற்றிவிட்டு வேறுவழியில் கடனைத் தீர்க்கச் சிந்தனை செய்யுங்கள்.”

“பேதாய்! யான் அன்பற்றவன் என்ற நினைப்பிலேயே நீ இவ்வாறு உணர்ச்சி பொங்க உரைக்கின்றாய். நல்லானையும் அமுதனையும் விற்க யான் இசையவில்லையாயின், நாளைத்தினமே, நம் முழுப் பண்ணையையும் பிற அடிமைகளையும் மற்றுமுள்ள உடைமைகளையும் நாம் இழக்கத் தயாராயிருக்கவேண்டும். நல்லானையும் அமுதனையும் வைத்துக்கொண்டு, நாமும் அவர்களைப்போன்று பிறப்பால்

இல்லாவிடினும் வாழ்வால் அடிமைகளாக வாழ்வதை விரும்புகின்றாயா? அல்லது அவ்விருவரையும் விற்றுவிட்டு நம் பண்ணையையும் பிற அடிமைகளையும் பொருள்களையும் மிச்சமாகக்கொண்டு வாழ்வை நாணயமாக நடத்த நாடுகிறாயா?"

முழுமதி அதற்குமேல் பேச விரும்பவில்லை. தன்னலம் என்னும் தீயில் கருணை என்னும் மலர் எரிக்கப்பட்டது. முழுமதியம்மையின் வாய் அடைக்கப்பெற்றது. அவள் கண்கள் அப்போது சிந்திய கண்ணீர் பயனற்றதாயிற்று.

"மதி! கைநழுவிப்போன கனியைப்பற்றிக் கரைவதில் பயனில்லை. எங்கள் இருவருக்குள் உடம்பாடு ஏற்பட்டு, விற்பனைமுறியும் எழுதப்பட்டுவிட்டது. நல்லானையும் அமுதனையும் கூட்டிச் செல்ல நன்னன் நாளை இங்கு வருவான். அவர்கள் இருவரையும் நன்னன் அழைத்துச்செல்லும் அந்த அவலக்காட்சியைக் காண யான் இங்கிருக்கப்போவதில்லை. நீயும் எழிலியை ஒரு போக்குக் காட்டி அழைத்துக்கொண்டு வெளியே சென்றுவிடு," என்று தம் பேச்சை மீண்டும் தொடர்ந்தார் சொக்கனார்.

"நீங்கள் வெளியே போகலாம்; ஆனால் நான் போகமாட்டேன். தங்கள் தலைவரைப்போல் தலைவி அன்பற்றவள் அல்லள் என்பதை அந்தத் துரதிர்ஷ்ட அடிமைகள் தெரிந்துகொள்ளட்டும். அவர்கள் சொரியுங் கண்ணீரை யானும் பகிர்ந்துகொள்-

கின்றேன். அவர்கள்பிரிவினைக் கண்டு என் நெஞ்சம் பிளக்கட்டும். அதற்காக இறைவன் என்னைத் தண்டித்தால் தண்டிக்கட்டும்; மன்னித்தால் மன்னிக்கட்டும்," என்று அழுத்தமாய்ப் பேசினாள் முழுமதி.

கணவனுக்கும் மனைவிக்குமிடையே நிகழ்ந்த இந்த உரையாடலை மறைவாக நின்று கேட்டுக்கொண்டிருந்த எழிலி நடக்கவிருப்பதை உணர்ந்துகொண்டாள். ஒருகணத்தில், தன் இளகிய நெஞ்சத்தைக் கல்லாக்கிக்கொண்டு, விரைவாகத் தன் அறையுட் புகுந்தாள். தன் தலையில் விழவிருக்கும் பேரிடியினை உணராது, இவ்வுலகனைத்தையும் துரும்பெனக் கருதும் ஓர் அலட்சியத்தன்மையுடன், செவ்விதழ்களில் குறுநகை தவழ, அமைதியாக உறங்கிக்கொண்டிருந்த அமுதனருகிற் சென்றாள்.

" என் செல்வமே! உன்னை நம் தலைவர் விற்றுவிட்டார். ஆனால், இந்த அன்னையிருக்கும்வரையில் உன்னை யாரும் தீண்ட விடமாட்டாள். உன்னைக் காக்கும் முயற்சியில் பெருமலைகளான நம் தலைமையினத்தவர்களையும் தகர்த்தெறியுஞ் சிற்றுளியாக யான் மாறுவேன். வானளாவிய வைக்கோற்போருக்கு சிறு தீப்பொறியாக வீறுகொண்டெழுவேன். சாகத் துணிந்துவிட்டவருக்குச் சமுத்திரம் முழங்காலளவு. இனி எந்தத் தியாகமும் எனக்குப் பெரிதல்ல! மகன்பாசத்தில் நன்றியறிதல், கடமையுணர்ச்சி, நேர்மை, யாவற்றையும் எரித்துவிட்டேன். தன் உயிரிருக்கும்போதே தன் தனயன் விற்கப்-

படுவதைப் பார்த்துக்கொண்டிருந்த பாவி என்று இவ்வுலகம் என்னை ஏசுவதைவிட எஜமானத் துரோகி என்று இவ்வுலகம் என்னை இகழட்டும். மக்கள் பெருத மலடுகளும், தாய்மையின் பொறுப்பினை யுணராத தறுகணர்களுந்தான் என்னைப் பழிப்பார்கள்," என்று கூறிக்கொண்டே எழிலி ஓர் ஓட்டையும் எழுத்தாணியையும் எடுத்துப் பின்வருமாறு எழுதினாள் :

" தாயினும் சாலப் பரிந்து என்னை வளர்த்த தாயே !

" தங்களுக்கும் தங்கள் நாயகருக்கும் சற்றுமுன் நிகழ்ந்த உரையாடலைக் கேட்டேன். என் அமுதனை அடுத்துநிற்கும் பேராபத்தினின்றும் அவனைக் காக்க உறுதி கொண்டுவிட்டேன். மக்களை ஈன்றுள்ள மாதாவாகிய உங்களுக்கு மற்றோர் மாதாவின் உள்ளத்தினைப் புரிந்துகொள்வது எளிது. அன்னையின் பாசம் அடிமையின் அச்சத்தையும் வென்றுவிட்டது. என் தனயனைக் காக்கத் தப்பிச் செல்வது ஒன்றுதான் என்முன் உள்ள வழி. நன்றி கெட்டவளாக என்னை மதிக்காதீர்கள். அடிமைகளாகிற எங்கள்பால் நீங்கள் காட்டிய கருணைக்கு நன்றி.

இங்ஙனம்,
தாழ்மையுள்ள,
எழிலி.

எழிலி மேற்கண்ட முடங்கலை எழுதி முழுமதியின் அறையினுள் எறிந்துவிட்டு, கையிற் கிடைத்த சில தேவைப்பொருள்களை அவசரம் அவசரமாக எடுத்துக்கொண்டாள்; உறங்கிக்கொண்டிருந்த சிறுவனை வாரியெடுத்து மார்பில் இறுக அணைத்துக்கொண்டு மரங்களிடையே துள்ளி மறையும் மான்போல், ஒருவர் கண்ணிலும் படாமல், தோட்டத்து மரங்களிடையே மறைந்தாள். மாலையிருட்டும் அவளுக்குத் துணை செய்தது. மறைந்த சில நொடிகளுக்குள் சந்தனப்பண்ணையின் வடகோடியிலிருந்த நல்லான் குடிசைக்குள் பாய்ந்தாள். நல்லான் ஒரு விளக்கருகில் அமர்ந்து திருமறை யோதிக்கொண்டிருந்தான். அப்போது எழிலியின் முகத்தில் தாண்டவமாடிய அச்சம் கலந்த ஆவேசமும், உடலில் காணப்பட்ட நடுக்கமும் எதிர்பாராத விபரீதமொன்று நிகழ்ந்திருக்க வேண்டுமென்று நல்லானுக்குக் காட்டின.

“எழிலி! எதிர்பாராத இந்த வேளையில்........”

“ஆமாம். அண்ணு! வந்து விட்டது ஆபத்து உங்களுக்கும் என் அருமைஅமுதனுக்கும். உங்களிருவரையும் நம் தலைவர் ஒரு கன்னெஞ்சினனுக்கு இன்று விற்றுவிட்டார். நாளைக் காலையில் உங்களை இருப்புச்சங்கிலியால் பிணைத்து இழுத்துக்கொண்டுபோக அவன் வருவான். தாயுள்ளம் அடங்கியிருக்கும் ஓர் எரிமலையென்பது தங்களுக்குத் தெரியும். அது குமுறத் தொடங்கிவிட்டால், உலகினை யழித்தபின்னர்த்தான் ஓயும். அமுதனை எவ்வாற்றானும் காக்கத் துணிந்துவிட்டேன். அந்த

முயற்சிக்கு இடையே வரும் எந்தத் தடையையும் பொடியாக்கி விடுவேன். இதோ, இவ்விடத்தினின்-றும் ஓடிவிடப் போகின்றேன்."

எதனையும் அமைதியாக வரவேற்கும் நல்லானது தணிந்த உள்ளமும் எழிலியின் சொற்களால் கலக்கமுற்றது. தான் மேற்கொண்டுள்ள வெறி-முயற்சியினால் எழிலிக்கு என்ன நேருமோ என்ற அச்சத்தால் நல்லான் சில விநாடிகள் பேச்சில்லா-திருந்தான்; பின்னர் ஒருவாறு தெளிந்து,

"இதுவும் இறைவன் சோதனைதான்" என்றான்.

"உங்களைத் தலைவர் இப்போது விற்கவேண்டிய காரணம் என்ன?" என்று கேட்டுக்கொண்டே குறுக்கிட்டாள் வல்லி.

"நன்னன் என்னும் வணிகனொருவனிடம் நம் தலைவர் பெருந்தொகையைக் கடனாக வாங்கியிருந்-தாராம். அத்தொகை இப்போது வட்டியும் கூடி மிகுந்துவிட்டதாம். கடன்காரன் கிட்டிபோட்-டுக் கேட்கவே இவர்கள் இருவரையும் விற்றுவிட்டார். சுருக்கமாக விஷயம் இவ்வளவுதான்," என்றாள் எழிலி.

"அன்பரே! நீரும் எழிலியின் வழியைப் பின்-பற்றலாமே. நீங்கள் எங்கிருப்பினும் உயிருடன் இருந்தால் போதும். அடிமைகளுக்கு நிலையான வாழ்வு ஏது?" என்று வல்லி தன் கருத்தினைக் கூறினாள்.

"எழிலி தப்பி ஓடி விடலாம். அவள்நிலையில் இருப்பவர்கள் அச்செயலை மேற்கொள்ளுதல் சரி-யாகலாம். ஆனால், யான் அவ்வாறு செய்யேன். என்னை விற்பதனால் நம் முதலாளியினுடைய உடை-மைகள் காப்பாற்றப்படுமானால், அந்த விற்பனையை யான் வரவேற்கின்றேன். என்பால் அவர் காட்டி-வரும் அன்புக் கீடாக யான் எவ்விதத் தியாகமும் செய்யலாம். அவர் என்மீது கொண்டுள்ள நம்பிக்கை-யைச் சிதைக்கமாட்டேன். வல்லி! உன்னை நம் தலைவர் கைவிடமாட்டார். இறைவன்திருவருள் எளியவர்களை எப்போதும் அரண் செய்யும்."

"அண்ணு! அவர்—அவர் தாம் என்கொழுநர்—இன்றுபகல் என்னிடம் வந்தார். தாம் தப்பித் தென்றல்நாட்டுக்கு ஓடிவிடப் போவதாகச் சொல்-லிச் சென்றார். அவர் ஏகுமுன் எனக்கும் இக் கதி வந்தது. அவரை நீங்கள் எங்கேனும் காண நேரின், என் முடிவினைச் சொல்லித் தென்றல்நாட்டில் என்னைத் தேடுமாறு கூறுங்கள். வருகிறேன். வணக்கம்."

அப்போதிருந்த உளநிலையில், எழிலி அதிகம் பேசித் தன் அரிய நேரத்தை வீணுக்க விரும்ப-வில்லை. தோளில் சார்த்தப்பட்டிருந்த அமுதனைச் சுமந்துகொண்டு, நின்றுகொண்டிருந்த நிலத்தைக் கண்ணீர் கழுவக் குடிசையைவிட்டு வெளியேறி எங்குஞ் சூழ்ந்திருந்த இருளில் மறைந்தாள்.

---

5. ஊர்தேடு படலம்

மறுநாள் பொழுது விடிந்தது. முழுமதி 'சிட்டு' என்னும் ஓர் அடிமைஇளைஞனை அழைத்து,

"நான், பல்விளக்கத் தண்ணீர் கொண்டுவரச் சொன்னதாக எழிலியிடம் கூறிவிட்டு வா" என்று பணித்தாள்.

எழிலியைத் தேடிச் சென்ற சிட்டு சிறிது நேரத்தில் பரபரப்புடன் திரும்பி ஓடி வந்து,

"அம்மா! எழிலியை எங்கும் காணேன். அவள் அறை திறந்துகிடக்கிறது. பேய் விளையாடிய இடம்போல், அறையில் பொருள்கள் தாறுமாறாகக் கிடக்கின்றன. அமுதனும் காணப்படவில்லை," என்று படபடப்புடன் கூறினான். அப்போது அங்கு வந்து நின்ற சொக்கனுருக்கும் முழுமதியம்மைக்கும் விஷயம் விளங்கி விட்டது.

"இறைவன்கருணை! எழிலி தப்பிவிட்டாள்" என்று முழுமதியின் உதடுகள் இசைத்தன. அச் சொற்களினூடே ஒருவித ஆறுதலும் தொனித்தது. ஆனால், சொக்கனுருக்கு அச் சொற்கள் சிறிது சங்கடத்தை விளைவித்தன. எழிலி தப்பிவிட்டதனால் ஏற்பட்ட ஏமாற்றத்தாலல்ல, எழிலி தப்பிச்செல்லத் தான் உடந்தையாயிருந்திருக்கக் கூடுமென்று நன்னன் எண்ணிக்கொள்வானோ என்ற காரணத்தால்.

எழிலி தப்பி யோடிவிட்ட செய்தி விரைவில் பண்ணை முழுதும் பரவிவிட்டது. ஆங்காங்கே, அடிமைகள் கூடிக்கூடித் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். அப்போது அங்கு வந்த நன்னன்

காதுகளிலும் அச்செய்தி விழுந்தது. அவன் சிற்றத்துடன் சொக்கனாிருந்த சூழலை யடைந்து தான் விலைக்குப் பெற்றுவிட்ட அமுதனைப்பற்றி வினவினான். அமுதனை எடுத்துக்கொண்டு அவன் தாய் ஓடிவிட்டதற்குத் தாம் பொறுப்பாளியல்லரென்றும், விற்பனைமுறி முதல்நாளே எழுதப்பெற்று இருவர் கையொப்பமும் இடப்பெற்றுவிட்டதென்றும், அதற்குமேல் நன்னன்பொறுப்புத்தானென்றும், அவர் (நன்னன்) விரும்பினால் எழிலியைத் தேடுதற்குத் தம் அடிமைகளில் 'சிட்டு,' 'கட்டை' என்ற இருவரை அவருடன் அனுப்பக்கூடும் என்றும் சொக்கனார் கூறிவிட்டார்.

தப்பி யோடிவிட்ட எழிலியைத் தேடிப்பிடிப்பதில் தலைவருக்கோ, தலைவிக்கோ, அடிமைகளுக்கோ, யாருக்கும் விருப்பமில்லை. ஒருவேளை எழிலி அகப்பட்டாலும் அவளை நன்னன் கண்களில் விழாதவாறு பாதுகாக்க எண்ணமே தவிர, காட்டிக்கொடுக்க அவ் விருஅடிமைகளும் விரும்பவில்லை. தம்மோடொத்தவரிடத்து அன்பும், தமக்குத் தீங்கிழைப்பவரிடத்து வெறுப்பும் காட்டுவது மனிதஇயல்புதானே? உமி குற்றிக் கைவலி ஏற்கத் தயாராயிருப்பவர்களைப்போல் பயனற்ற வேலையில் ஈடுபடச் சிட்டுவும் கட்டையும் உடம்பட்டனர். நன்னன் ஏவற்படி அப்போது அங்குக் கொணரப்பட்ட குதிரைகள்மீ தேறிக்கொண்டு மூவரும் சந்தனப்பண்ணையினின்று புறப்பட்டனர். அமுதனையும் அவன் அன்னையையும் தேடும் படலம் ஆரம்பமாயிற்று.

6. சாவா, வாழ்வா ?

மையிருட்டால் உலகு விழுங்கப்பட்டிருந்தது. வாடைக்காற்று 'உஸ்' 'உஸ்' என்று சீறி வீசியது. காற்றில் சாலைமரங்களின் இலைகள் சலசலத்தன. சாலையில் விட்டுவிட்டு நின்றுகொண்டிருந்த பட்டுப்போன மொட்டைமரங்கள் தம் அசுரக்கரங்களை அகல விரித்துக்கொண்டு, வருவார்போவார்களை வெருட்டும் பேய்கள்போன்று காட்சியளித்தன. இரவும் தனிமையும் எழிலிக்கு அச்சத்தை உண்டாக்கவில்லை. உள்ளத்திலுள்ள அன்பு வழிகாட்ட, தான் மேற்கொண்டுள்ள குறிக்கோள் முன்னே உந்த, எவ்வாற்றானும் தன் செல்வமகனைக் காக்க வேண்டும் என்னும் உறுதி மெய்காப்ப, மார்பிடையே உறங்கும் மகனைச் சுமந்துகொண்டு, நள்ளிரவில் தனியே எழிலி சாலையில் விரைந்து சென்றுகொண்டிருந்தாள். மறுநாள் மாலைக்குள் தேனூற்றினைத் தாண்டிவிட வேண்டுமென்பது எழலியின் முதல் திட்டம். இரவெல்லாம் நடந்த எழிலி பொழுது விடிந்து சிலநாழிகை யாவதற்குள் இடையே யிருந்தவொரு சிற்றூரைச் சார்ந்தாள். அங்கிருந்தவொரு சோற்றுக்கடையில் தனக்கும் அமுதனுக்கும் உணவு வாங்கினாள். உண்டபின்னர், கடையின் ஒரு புறத்தே படுத்து உறங்கினாள். அமுதனுக்குத் தன் அன்னையின் போக்கு ஆச்சரியத்தை விளைவித்திருக்கவேண்டு மென்பதை அப்போது அவன் பார்த்த வெருண்ட பார்வை வெளியிட்டது. தாயினும் பொருள் அறிந்துகொள்ள முடியாத சில

மழைச்சொற்களையும் இடையிடையே மொழிந்தான். நடுப்பகலுக்குப்பின் எழிலி தன் வழிச் செலவை மேற்கொண்டு எவர்கண்களிலும் படாதவாறு மறைந்து மறைந்து மாலை வருவதற்குச் சில நாழிகைகளுக்குமுன்பே தேனாற்றின் கரையினை அடைந்தாள்.

தேனாறு ஒரு காட்டாறு. மின்னல் தோன்றி மறையுங் காலத்துக்குள் அதில் வெள்ளம் தோன்றி மறையும். எழிலி தேனாற்றின் கரையை யடைந்த போது, முதல்நாள் பெய்த கனமழையின் காரணமாகக் கரைகாணாவாறு அதில் வெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது. வெள்ளத்தில் மிதந்து சென்ற துரைமலைகளும், யானைகளையும் ஈர்த்துச் செல்லக்கூடிய நீர்ச்சுழிகளும், பேரிரைச்சலும், தறுகண் மிகுந்த போர்வீரனையும் கலங்கச் செய்யும். அந்தப் பெருவெள்ளத்தில் எந்தப் படகோட்டியும் படகைச் செலுத்தித் தன் விதியைச் சோதனை செய்துகொள்ளத் துணியமாட்டானென்பதை எழிலி அறிந்துகொண்டாள். அதுவரையில் தனக்குத் துணைசெய்த தன் நல்லூழ் அதற்குமேல் உதவ மறுத்துவிட்டமையை நினைந்து வருந்திக்கொண்டே ஆற்றின் கரையில் இருந்தவொரு சத்திரத்தினுள் புகுந்தாள்.

இரக்கவுள்ளம் படைத்த சத்திரக்காரன் மனைவி, காலியறை யொன்றினைக் காட்டி அதில் தங்க எழிலிக்கு வசதி செய்துகொடுத்தாள். உணவு உண்டபின், எழிலி ஒரு துணியை விரித்து அதில்

அழகனை உறங்கச்செய்தாள். அதன் பிறகு தனக்கும் தன் எதிர்காலவாழ்வுக்கும் இடையே தடையாகப் பாய்ந்தோடும் அந்த இரக்கமற்ற ஆற்றைப் பார்த்துக்கொண்டே அறையின் பலகணி யருகில் நின்றுகொண்டிருந்தாள்.

இங்குச் சிறிதுநேரம் எழிலியைத் தனியே விட்டுவிட்டு, அவளைக் கைப்பற்றப் புறப்பட்ட வீரர்களைத் தொடர்வோம்.

'முதற்கோணல் முற்றும் கோணல்' என்ற முதுரைக் கிணங்க, நன்னன் குதிரைமீது ஏறும் போது கலனை புரண்டதனால் கீழே விழ, அதனால் வெருண்ட குதிரை அவனைக் காலால் உதைத்து விட்டுப் பாய்ந்தோட, அதனைக் கண்ட மற்ற இரு குதிரைகளும் தம் இனவிலங்கு சென்ற வழியே ஓடி விட்டன. ஓடிப்போன குதிரைகளைத் தேடிச் சென்ற ஆட்கள் கிட்டத்தட்ட நடுப்பகல் வேளையில் குதிரைகளுடன் திரும்பிவந்தனர். பின்னர், முன் சொன்ன மூவரும் குதிரைகள்மீது இவர்ந்து தம் பிரயாணத்தைத் தொடங்கிச் சில கல் தொலைவு கடந்து, பாதை இருபிரிவுகளாகப் பிரியும் இடத்துக்குப் போய் நின்றனர். நன்னனைப் பழிவாங்க வாய்த்த சமயத்தை நழுவவிடாமல், சிட்டு தவறான பாதையை வேண்டுமென்றே சரியானதாகக் காட்டி நன்னனுடன் அவ் வழிபற்றிச் சென்றான். பத்துக் கல் தொலைவு கடந்தபின்னர், நன்னன் வழியில் எதிர்ப்பட்ட ஒருவனை நோக்கி, "தேனாற்றுக்குச் செல்லும் பாதை இதுதானா?" என்று வினவி,

அது அன்று என்று அறிந்ததும் அவனுக்கு ஆடக்கொணுச் சீற்றம் உண்டாயிற்று. சிட்டினைத் திட்டிவிட்டு, அவனுக்கு உடந்தையாயிருந்த கட்டை-யைக் கடிந்துகொண்டு, சென்றவழியே மீண்டு, பாதை பிரியும் இடத்தை யடைந்து சரியான சாலை-யைப் பின்பற்றி, மாலை வரும் நேரத்தில் தேனாற்றங் கரைக்கண் இருந்த சத்திரத்தை அணுகினான்.

பலகணி வழியாகப் பார்த்துக்கொண்டிருந்த எழிலி குதிரைமேல் வந்த மூவர் சத்திரத்தை நோக்கி நெருங்குவதைக் கண்டாள். அவள்ஐயம் மெய்யா-யிற்று. தன்னைத் தேடிக்கொண்டு நன்னன் வாராம லிரான் என்று எழிலி எண்ணியது உண்மையாக நடந்துவிட்டது. முதலில் சிட்டும், நடுவில் நன்ன-னும், கடைசியில் கட்டையுமாக மூவரும் சத்திர வாயிலை எட்டிவிட்டதைக் கண்டாள். அச்சத்தால் ஒரு கணநேரம் அவள் இதயத்துடிப்பே நின்று விட்டது. தன்னை எதிர்த்துநிற்கும் பேராபத்தினை நினைவுபடுத்திக்கொண்டு, உறங்கிக்கொண்டிருந்த அமுதனை வாரியணைத்தாள். சத்திரத்தின் புறங்-கடைக்கதவு நல்லவேளையாகத் திறந்துகிடந்தது; யாரும் வழியில் இல்லை. கதவினைக் கடந்து ஆற்றின் பக்கமாய்ப் பாய்ந்தோடினாள். தன்பால் வருவாரை விழுங்கி ஏப்பம்விடக் காத்திருப்பதுபோன்று, இரைந்துகொண்டு விரைந்தோடும் தேனாற்றின் வெள்ளம் தடுக்க, ஒரு நொடிப்பொழுது கரைமீது நின்று திரும்பிப்பார்த்தாள். ஆபத்தின் கைப்பிடி-யில் தான் அகப்பட்டுவிட்டதாகவே அவளுக்கும்.

பட்டது. குதிரைமீதேறி வந்த மூவரும் எழிலி நின்றுகொண்டிருந்த இடத்துக்கு வெகு அண்மை-யில் வந்துவிட்டனர். சிந்திக்க நேரமில்லை; சிந்-தனையும் ஓடவில்லை. வணிகன்கையில் அகப்பட்டு, மீளாத கொடுமைகளுக்கு ஆளாகி, ஒவ்வொரு கணமும் தானும் தன் மகனும் வதைக்கப்பட்டு, தடுக்க முடியாத துர்ப்பாக்கியசாலியாய் வாழ்-வதைவிட, இருவருக்கும் ஒரே சமயத்தில், உடனே விடுதலை நல்கும் மரணத்தை வரவேற்க உறுதி கொண்டு, மார்பி லணைத்திருந்த மகனுடன் எழிலி வெள்ளத்தில் குதித்தாள். அதற்குள் ஆற்றின் கரையினை யடைந்துவிட்ட மூவரும் அச்சத்தால் கூச்சலிட்டனர். மரணத்தேவனின் அழைப்பொலி வழிகாட்ட ஆற்றின் போக்கிலே, வெள்ளநீரில் நீந்திக்கொண்டு சென்ற எலிழியை ஒரு சுழல் வளைத்தது. எரியும் நெருப்பினின்று கொதிக்கும் எண்ணெயில் குதித்ததுபோ லாயிற்று எழிலியின் நிலை. தன் இறுதிமூச்சு இருக்கும்வரை சாவுடன் போராடி வெற்றிபெற வேண்டுமென்னும் உறுதி யுடன் அமுதனைத் தோளில் உட்காரச்செய்து-கொண்டு, வெள்ளத்தின் போக்கிலேயே மிதந்தாள். மாலைத்தேவி தன் கருப்புப்போர்வையை விரித்துக் குளிரினைத் தடுக்கத் தன்னுடலை மூடிக்கொண்டது-போல் அதற்குள் உலகினை மையிருள் சூழ்ந்து கொண்டது; சுழித்தோடுந் தேனாற்றின் சீற்றம் அச்-சுறுத்தியது. எழிலியைக் கைப்பற்றவும் முடியாமல், இழக்கவும் துணியாமல், தன் கையிலிருந் தவடையைக் காக்கை கொத்திக்கொண்டு செல்லக் கதியற்றுக்

கரையுஞ் சிறுவன்போல், நன்னன் வாயில் வந்தவாறெல்லாம் எழிலியைத் திட்டிக்கொண்டே சிறிது நேரம் அங்கே நின்றுகொண்டிருந்தான். வேறு என் செய்வான்? பேடிகளின் ஆயுதம் வசவும் அழுகையும்தானே! சிறிது நேரம் கழிந்தபின், நன்னன் சிட்டுவுடனும் கட்டையுடனும் அவ்விடத்தினின்று அகன்றான்.

முன்னவனே முன்னின்றால் முடியாத தொன்று உளதோ? மரணத்தின் வாயிலுக்கு அழைத்துச் சென்று பின் வாழ்வின் கோட்டைக்குள் எழிலியைச் செலுத்த இறைவன் விரும்பினான்போலும்! எழிலியையும் அவள்மகனையும் ஏப்பம் விட்டுவிட விருந்த தேனாற்றின் அலைகள் அவளைச் சுமந்து சென்று எதிர்க்கரையில் ஒதுக்கின. எழிலியின் உள்ளத்தை வாட்டிய அச்சம் இன்னும் ஒழியவில்லை. அந்த அடிமைவணிகன் எவ்வாற்றானும் அங்கு வந்து தோன்றினும் தோன்றலாமல்லவா? குளிரின் மிகுதியால் குறைந்துவிட்ட குருதியோட்டம் அவள் பலவீனத்தை மிகுவித்தது. ஆயினும், வெல்ல முடியாது உள்ளத்தில் மறைந்துகிடக்கும் அந்த உறுதி ஊக்கமூட்ட, சற்றுத் தொலைவில் விளக்குக்கள் எரிந்துகொண்டிருந்த ஓர் ஊரினை நோக்கி நடந்தாள்.

7. கருமேகத்தினிடையே ஒளிமின்னல்

அன்று மாலைதான் வளவர் கானல்நாட்டுச் சுற்றுச்செலவினை முடித்துக்கொண்டு வீடு திரும்பி-

ஞர். விரைவில் இராவுணவினை முடித்துக்கொண்டு கூடத்தில் அமர்ந்து தம் மனைவி கோதையிடம் பொழுதுபோக்காக, தாம் செய்த சுற்றுச்செலவினைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். பேச்சினிடையே கோதை, 'மனிதவுணர்ச்சியை மதிக்காத, இப்படிப்பட்ட விலங்குச்சட்டத்தை எப்படி உங்கள் கானல்நாட்டுச் சட்டமன்றம் நிறைவேற்றியதென்பது எனக்கு விளங்கவில்லை. வாடை நாட்டாரின் கொடுமைகளினின்று தப்பி நம் நாட்டில் தஞ்சம் புகும் அடிமைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பது சட்டத்துக்கு எதிராகுமாமே! அகதிகளுக்கு ஆதர வளிப்பது அநீதியா! இறைமைக்குணமாகிய இரக்கக்குணத்துக்கும் தடையா!" என்று சற்று வெறுப்புடன் வினவினள்.

"அடிமைவாணிகத்தை நாம் ஆதரிக்காமலிருப்பதனாலும், அடிமைகளுக்கு அரணளிப்பதனாலும், நம் அண்டைநாட்டாராகிய வாடை நாட்டார் நம்மீது அளவுகடந்த சீற்றம் கொண்டுள்ளனர்."

"பிறருக்கு நாம் உதவுவதை அவர்கள் இயற்றும் சட்டம் எங்ஙனம் தடுக்க இயலும்?"

"அப்படியில்லை, கோதாய்! நம் வாடைநாடும் கானல்நாடும் இன்னும் நமக்கு அணித்தேயுள்ள வேறு சில நாடுகளும் ஒன்று கூடிக் கூட்டரசியல் நடத்துகின்றனவன்றோ? ஆதலால், அங்கு இயற்றப்படும் சட்டம் நம்மையும் கட்டுப்படுத்தும்."

மேற்கண்டவாறு கணவனும் மனைவியும் பேசிக்கொண்டிருந்தபோது, 'தாய்' என்னும் வேலைக்காரி ஓடி வந்து, “அம்மா! நம் புறங்கடைவாயிலில் ஒரு புதுமை. நீங்களும் ஐயாவும் வந்து பார்க்கவேண்டும்” என்று பரபரப்புடன் கூறினாள். வளவரும் கோதையும் புறங்கடைக்குச் சென்று, அங்கு ஓர் இளநங்கை புறங்கடைவாயிற்படியின் மீது தலையை வைத்துக்கொண்டு தன்னை மறந்து உறங்குவதையும், அவளருகில் குளிரால் விறைத்துப்போய், மெல்லிய இழைபோல் மூச்சோடிக்கொண்டிருக்கும் ஓர் ஆண்குழந்தை அவள் அணைப்பில் கிடப்பதையும் கண்டனர். தாயும் கோதையும் அவ் விளநங்கையைத் தாங்கிச்செல்ல, வளவனார் அச் சிறுவனை எடுத்துக்கொண்டு கூடத்துக்குச் சென்று, அவளையும் சேயையும் கட்டிலிற் படுக்கவைத்தனர். தாய் விரைந்தோடிச் சூடான பானம் தயாரித்துக் கொணர்ந்து இருவருக்கும் கொடுத்தாள். வளவனார் சிறுவனைக் கணப்பருகே வைத்துக்கொண்டு சிறிது சிறிதாக உடலிற் சூடேற்றினார். சூடான பானத்தைப் பருகியதனாலும், உடலில் சூடேறியதனாலும் நினைவு வரப்பெற்ற எழிலி,

“அமுதன் எங்கே! எங்கே என் அமுதன்! அந்தப் பாவிகள் என் கண்ணைப் பறித்துக்கொண்டு போய்விட்டார்களோ!” என்று அலறவே, அருகில் நின்றுகொண்டிருந்த வளவனார்,

“இதோ உன் குழந்தை இருக்கிறான் அம்மா! அமைதியாக இரு; உடம்பை அலட்டிக்கொள்-

ளாதே" என்று சொல்லிக்கொண்டே அமுதனை அவள் பக்கத்தில் படுக்கவைத்தார்.

"அம்மா! தாயே!! அவர்கள் அமுதனை அபகரித்துக்கொண்டுபோக விடமாட்டீர்களே?" என்று கெஞ்சிக்கொண்டே தன் மகனை எடுத்துத் தன் மார்மீது படுக்கவைத்தாள் எழிலி.

"நீங்கள் இங்கிருக்கும்வரையில் உங்கள் இருவருக்கும் எவ்வித இன்னலும் நிகழாது. அஞ்ச வேண்டாம்" என்று ஆறுதல் கூறிவிட்டு, வளவனார் படுக்கச் சென்றார். அந்த அகதிகளுக்கு உணவு அளிக்குமாறு தாயிடம் சொல்லிவிட்டுக் கோதையும் தன் அறைக்குப் போனாள்.

படுக்கச்சென்ற வளவனாருக்கு உறக்கம் வரவில்லை. தம்பால் அடைக்கலம் அடைந்தவர்களைப்பற்றி நினைக்க நினைக்க அவர்உள்ளத்தில் சிறிது சிறிதாகப் புயல் வீசத் தொடங்கியது. அவர்களைக் காக்கவும் துணிவில்லை; கைவிடவும் மனமில்லை. கருணைக்கும் கடமைக்கும் ஒரு பெரும் போராட்டம் அவர்உள்ளத்தில் நிகழலாயிற்று. ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொன்று வெல்வதுபோல் அவருக்குப்பட்டது. இதனிடையே இரண்டு மூன்று நாழிகைகள் கழிந்தன. வளவனார் படுக்கையினின்று எழுந்து கோதையருகு சென்று அவளையும் அழைத்துக்கொண்டு எழிலி யிருக்கு மிடத்துக்கு வந்தார். எழிலி கணப்பருகில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். அப்போது எதிர்கால மென்னும்

இருட்டுக்குகையில் எழிலியின் சிந்தனைகள் வழி தேடிக்கொண்டிருந்தன.

" உன் பெயர் என்னம்மா?" என்று பேச்சைத் தொடங்கினார் வளவனார்.

" எழிலி! "

"நாங்கள் உங்கள் அன்பர்கள். எங்களால் உங்களுக்கு நன்மை யுண்டாகுமேயன்றி, தீமை ஏற்படாது. ஆதலால், அஞ்சாமல் உன் வரலாற்றினைச் சொல்" என்று தம்பேச்சைத் தொடர்ந்தார் வளவர்.

"நான் ஓர் அடிமை" என்று எழிலி தன் வரலாற்றினைக் கூறத்தொடங்கினாள். அதற்குமேல் பேசவிடாமல் துக்கம் அவள்தொண்டையை அடைத்தது. கண்ணீர் கண்களை மூடியது.

"அடிமையாயிருப்பது குற்றமில்லை, வருந்தாதே. நீ இப்போது எங்கிருந்து வருகிறாய்?" என்று இடைமறித்துக் கேட்டாள் கோதை. "வாடைநாட்டிலிருந்து வருகிறேன்" என்றாள் எழிலி.

" எந்த வழியாய்?"

" தேனாற்றைக் கடந்து. "

" தேனாற்றைக் கடந்தா? அந்த முரட்டு வெள்ளத்துக்கும் யானைச்சுழிகளுக்கும் இரையாகாமலா! என்ன துணிவு உனக்கு!" என்று வியப்புக் கலந்த வினாவை விடுத்தார் வளவனார்.

" ஆம், வேறு வழியில்லாமையால். எப்படி அந்த வெள்ளத்தைக் கடந்தேன் என்று இப்போது

எனக்கு வியப்பாயிருக்கிறது. தலைமேலிருந்து ஆபத்துத்தான் என்னைத் தாண்டச் செய்திருக்க வேண்டும்.''

"அப்புறம்.........''

"வாடைநாட்டிலிருக்கும் ஒரு பண்ணை முதலாளிக்கு உரிமையானவள் யான்.''

"அவர் உன்னைத் துன்புறுத்தினாரா?'' என்று குறுக்கிட்டுக் கேட்டாள் கோதை.

"இல்லை; இல்லை!! அவரும் அவர் இல்லாளும் அன்புள்ளம் படைத்த பண்பாளர்கள்.''

"அப்படியானால் ஏன் அவர்களைவிட்டு நீ ஓடி வந்தாய்?''

இவ் வினாவிற்கு விடைகூற எழிலி சிறிது தயங்கினாள். பிறகு தன் உணர்ச்சிகளை ஒருவாறு அடக்கிக்கொண்டு கோதையை நோக்கி,

"பெற்ற குழந்தை இறந்த துன்பத்தை நீங்கள் என்றேனும் அனுபவித்ததுண்டா?'' என்று கண்களில் நீர் துளும்ப வினவினாள். இவ்வினா வளவர், கோதை ஆகிய இருவர்உள்ளங்களிலும் வேலைப் பாய்ச்சியதுபோல் வேதனையைக் கொடுத்தது. அவர்களுடைய கடைசிமகன் மரித்து ஒரு திங்கள்கூட ஆகவில்லை.

"எங்கள் கடைசிமகன் இறந்ததனால் பிளவு பட்ட எங்கள் மனம் இனி ஒன்றுகூடாது. அதை

ஏன் கேட்கிறாய்!" என்று வியப்பும் வேதனையும் கலந்த குரலில் வினவினாள் கோதை.

"அப்படியானால், ஓர் அன்னையின் உள்ளத்தை உங்களால் நன்கு உணரமுடியும். இந்தச் சிறுவன் பிறப்பதற்குமுன் இரு குழந்தைகளை இழந்துவிட்டேனம்மா! இறைவன் பரிந்துவிட்ட இறுதிப்பரிசு இவன்தான். என் எதிர்கால வாழ்வு இவனை மையமாகக் கொண்டுதான் இனிச் சுழல வேண்டும். என் முன்னாள் தலைவர் இவனைமட்டும் ஓர் அடிமைவணிகருக்கு விற்க ஏற்பாடு செய்திருந்தார். அன்னையின் உள்ளம் அதனை எங்ஙனம் ஏற்கும்? இவனுடன் எவ்வாற்றானும் தப்பிவிடத் துணிந்தேன்; அப்படியே அவர்பாதுகாப்பிலிருந்து தப்பி வெளியேறினேன். யான் தப்பியதை யறிந்ததும் இவனை விலைக்கு வாங்கிய வணிகரும் அவருடைய ஆட்களும் என்னைப் பின்தொடர்ந்தனர். கடவுள் காட்டிய வழியைத் தேனாறு இடையே தடை செய்தது. அடிமைக் கொடுமைகளுக்கு ஆயுள்நாளெல்லாம் ஆளாவதைவிடத் தண்ணீர்த்தேவிதான் ஈருயிர்களைச் சாப்பிட்டு ஏப்பம் விடட்டுமே என்ற உறுதியில் பாலகனுடன் வெள்ளத்தில் குதித்தேன். அனைத்துயிர்க்கும் தாயல்லவா தண்ணீர்! வெள்ளம் சுமக்க, அலைகள் தாலாட்ட, நல்லூழ் உந்த, இக்கரையடைந்தோம்," என்று தன் வரலாற்றினைச் சுருக்கமாகக் கூறி முடித்தாள் எழிலி.

எழிலியின் சோகக்கதை கோதை, வளவர் ஆகிய இருவரது உள்ளத்தையும் தொட்டிருக்க-

வேண்டு மென்பதை அப்போது அங்கு நிலவிய அமைதி புலப்படுத்தியது. சிறிது நேரங் கடந்தது. " இனி எங்குச் செல்வதாக எண்ணம்?" என்று அமைதியைக் குலைத்துக்கொண்டே கோதை கேட்டாள்.

"தென்றல் நாட்டுக்கு. அது இன்னும் வெகு தொலைவில் உளதா?"

" தென்றல் நாடு இங்கிருந்து பல காவதங்களுக் கப்பால் உளது. எம்மால் இயன்றதைச் செய்து உங்களைக் காப்போம். இன்றிரவை அமைதியாகக் கழியுங்கள். நாளைக்காலையில் உங்கள் செலவினைத் தொடங்கலாம்" என்று சொல்லிவிட்டு, கோதை எழுந்து தன் அறையை நோக்கி நடந்தாள். அவ-ளைப் பின்தொடர்ந்த வளவர் கோதையை ஒரு சிறை யழைத்து,

" இன்றிரவே இவர்கள் இருவரையும் வெளி-யேற்றி யாகவேண்டும். அந்த வணிகன் எவ்வாற்-றானும் ஆற்றினைக் கடந்து விரைவில் இங்கு வந்து விடுவான். சட்டத்தை நிலைநாட்ட உதவவேண்டிய யானே, அதற்கு மாறாக, தப்பி வந்த அடிமைகளுக் குப் பாதுகாப் பளிப்பது தெரிய வரின் என்நிலை பழிப்பிற் கிடமாகும்" என்று தம் கருத்தைக் கூறினர்.

" வந்த அசதியும் அதிர்ச்சியும்கூட அடங்கி-யிராதே அவர்களுக்கு! அதற்குள்ளாகவா அவர்களை வெளியேற்றுவது!"

" ஆம். அவர்கள்பால் நமக்கு இரக்கமிருப்பது உண்மையாயின் நாம் அதனைச் செய்துதானாக வேண்டும். வேறு வழி யில்லை. இங்கிருந்து பத்துக் கல் தொலைவில், காடுகள் அடர்ந்த சூழலில் என் நண்பன் வீரன் இருக்கின்றான். ஒருவரும் அறியாமல் யானே நமது குதிரைவண்டியில் தாயையும் சேயை-யும் ஏற்றிச் சென்று அவனுடைய பாதுகாப்பில் விட்டு வருகின்றேன். அமுதனுக்குப் பயன் படக் கூடிய சில உடைகளும், வழிச்செலவுக்கு வேண்டிய பணமும் அவர்களுக்குக் கொடு. எழிலியிடம் விஷயத்தை எடுத்துக்கூறிப் புறப்படச் சொல். யான் சென்று குதிரைவண்டியைக் கொண்டு-வருகின்றேன்" என்று கூறிவிட்டு வளவர் வண்டி கொணரச் சென்றார்.

சிறிது நேரத்தில் வளவர் கொணர்ந்து நிறுத்-திய வண்டியில் எழிலியும் அமுதனும் ஏறிக்கொண்ட-னர். புறப்பட்ட நான்கு அல்லது ஐந்துநாழிகை கழித்து வண்டி வீரன்வீட்டு வாயிலின்முன் நின்றது.

வீரனும் ஒரு பண்ணை முதலாளி; அடிமை வாணிகத்தை அடியோடு வெறுப்பவன்; தன் பண்ணையில் வேலை செய்துவந்த அடிமைகளுக்கு விடுதலை யளித்த அருளாளன்; அன்பும் அஞ்சாமையும் கொண்ட தோன்றல்.

வளவர் வீரனிடம் எழிலியின் வரலாற்றினைக் கூறி அவளை அவனிடம் ஒப்படைத்துவிட்டு அந்த நள்ளிரவிலேயே மீண்டார்.

---

8. கூடினூர் பிரிந்தார்

கீழ்வானத்தில் தோன்றிய செஞ்சுடரின் நீண்ட ஒளிக்கரங்கள் நல்லான்குடிலிற் பாய்ந்து, வாயிலி-னருகி லமர்ந்து திருமறை யோதிக்கொண்டிருந்த நல்லான்முகத்தின்மீதும், அவனெதிரில் உட்-கார்ந்து அவன்உடைகளைத் தைத்துக்கொண்-டிருந்த வல்லிமீதும் வீசி, ஒருவர் உளக்கவலையை மற்றவருக்கு எடுத்துக்காட்டின. பிரிவுத்துன்-பத்தை யறியாத நல்லானின் இருகுழந்தைகளும் குடிசையினுள்ளே ஒரு பாயில் துயின்றுகொண்-டிருந்தன. நல்லானுக்குத் தன் மக்களிடத்தில் அளவு கடந்த அன்பு உண்டு. அவர்கள் இன்முகங்-களைக் கண்டும், மழலைமொழிகளைக் கேட்டும் தன் துன்பங்களை மறப்பான். திருமறையை யோதிக்-கொண்டிருந்த நல்லான், திடீரென அதனை மூடி வைத்துவிட்டு, உறங்கிக்கொண்டிருந்த தன் மக்கள்-பாற் சென்று அவர்கள் முகத்தை உற்று நோக்கி-னான்.

“வல்லி! நம் குழந்தைகளின் முகத்தை யான் காண்பது இதுவே கடைசிமுறை யாகும்.”

அதற்குமேல் நல்லானற் பேச இயலவில்லை. பாசம் தொண்டையை அடைத்தது. கண்ணீர் தாரை யிட்டுக் கன்னத்தைக் கறைப்படுத்தியது.

வல்லி தான் தைத்துக்கொண்டிருந்த உடை-யைக் கீழே வைத்துவிட்டு, “என்னல் நம் பிரிவினைத் தாங்க முடியவில்லை. என் இதயம் சுக்குச் சுக்காய்ப்

பிளந்துவிடும்போ லிருக்கிறது. நம் தலைவி தங்களை எவ்வாறேனும் மீட்டுவிடுவதாக எனக்கு அடிக்கடி ஆறுதல் கூறுகிறார்கள். ஆனால், கன்னல்நாட்டுக்கும் அதற்கப்பாலுள்ள வேனல் முதலிய நாடுகளுக்கும் கொண்டுசெல்லப்பட்ட அடிமைகளில் ஒருவராவது உயிருடன் திரும்பியதாகத் தெரியவில்லை. இரக்கமென் றொருபொருள் இலாத நெஞ்சினர்கள் அந்நாட்டவர்கள்; குரங்கின் கைப்பட்ட வாழைப்பழமாக உங்களைச் செய்துவிடுவார்களே!" என்று கூறி, வாய்விட்டுப் புலம்பினாள். அமைதியின் இருப்பிடமான அந்தக் குடிசை, அவள் புலம்பலை எதிரொலித்தது.

"இதுகாறும் நம்மை ஈண்டுப் பரிந்து புரந்த ஆண்டவன் ஆண்டும் என்னைக் காப்பான், அஞ்சாதே."

"தங்கள் சொற்கள் எனக்கு ஆறுதல் தந்தில. இறைவன் சோதனைகளுக்கும் ஒரு வரம்பு வேண்டாமா?"

"அந்த வரம்பு அவனுக்குத் தெரியும், வல்லி. அவன் செய்யும் சோதனைகளில் வெற்றி பெறுவதே நாம் இம்மையில் அடையவேண்டிய சாதனைகள். அவன் நம்மைச் செய்யுஞ் சோதனைகளை நாம் அவனை வழிபடுவதற் குரிய ஆராதனைகளாகக் கொள்ளல் வேண்டும்."

"ஆராதனைகளா, ஆறாத வேதனைகளா!"

"இறைவன் கருணையில் தேர்ந்த நம்பிக்கையில்லாத உன் பிஞ்சு உள்ளம் வேறுவிதமாக

நினைக்காதுதான். என்னைமட்டுந்தானே விற்றூர்கள். உன்னையும் நம் இரு குழந்தைகளையும் விற்கவில்லையே என்பதை நினைத்துப்பார். அதற்காகவேனும் இறைவனுக்கு நன்றி செலுத்து."

"என்னவிருந்தாலும் நம் தலைவர் உங்களை விற்றிருக்கக்கூடாது. உங்களை அவர் வாங்கிய விலைக்குப் பன்மடங்கு அதிகமாக நீங்கள் அவருக்கு உழைத்திருக்கின்றீர்கள்; உங்கள் தலைவர்பால் எவ்வளவு அன்பு காட்டினீர்கள். அவருக்கென எவ்வளவு உதிரம் உகுத்திருப்பீர்கள்!"

"வல்லி! என்மீது உனக்குள்ள அன்பு உன் அறிவை மறைக்கின்ற காரணத்தால் நீ இவ்வாறு பேசுகின்றாய். நாம் பிறவி அடிமைகள் என்பதை மறந்துவிட்டாய். நாம் செய்த உழைப்புக்கும் நம்மை வாங்கியவர் கொடுத்த விலைக்கும் லாப நஷ்டக் கணக்குக்களைப் போட்டுப் பார்க்கும் உரிமை நமக்கில்லை. நிற்க, குழவிப்பருவம் முதற்கொண்டு நம் தலைவரை யான் அறிவேன். அவர் நல்லுள்ளப் பாங்கு எனக்குத் தெரியும். தம்மால் தவிர்த்திருக்கக் கூடுமானல் என்னை அவர் விற்க உடம்பட்டிருக்க மாட்டார். இறைவன் திருவருள் எத்தனையோ வகைகளில் உருக்காட்டும். எல்லாம் நன்மைக்கே."

"நடக்கவேண்டியது நடந்துவிட்டது. இனிப் பேசுவதில் நன்மையில்லை. என் கண்கண்ட கடவுளுக்கு யான் படைக்கும் இந்த இறுதி உணவு இன்பம் தரவேண்டும்," என்று மொழிந்தவாறே

வல்லி தான் தயாரித்து வைத்திருந்த உணவினை நல்லான்முன் வைத்தாள்.

விழுங்கமுடியாத வருத்தம் தொண்டையை அடைத்திருக்கும்போது எங்ஙனம் உணவினை நல்லான் விழுங்குவான்! அவன்முன் வைக்கப்பட்ட உணவு அப்படியே யிருந்தது.

அப்போது அங்குற்ற முழுமதியம்மை "நல்லான்! என் நினைவுச்சின்னமாக உனக்கு எத்தனையோ பொருள்களை யீய எனக்கு ஆசை. ஆனால், உனக்கு யான் எதனை யளித்தாலும் அக் கொடியன் நன்னன் அதனைப் பறித்துக்கொள்வான். இம் மாபெரும் புவியெங்கும் தன் கண்களையும் காதுகளையுமுடைய அந்த இறைவன் திருமுன் இப்போது ஆணையிட்டுச் சொல்கின்றேன். உன்னை மீட்பதற்குரிய பணத்தைத் திரட்டி விரைவில் உன்னை யான் மீட்பேன். அதுவரையில் ஓயேன்; தலை சாயேன். என் கண்ணீரையே காணிக்கையாய்ச் செலுத்தி, உன்னை நன்னனிடமல்ல—ஆண்டவனிடம் அடைக்கலப்படுத்துகின்றேன்," என்று தன் உள்ளுணர்ச்சியைப் பெண்களுக்குரிய எளிய, ஆனால் அழுத்தமான, முறையில் வெளியிட்டுக்கொண்டிருந்தபோது நன்னன் அங்கு வந்து நின்றான். எழிலி தப்பியோடியதனால் அவன் அடைந்திருந்த ஏமாற்றத்தை நல்லான்மீது அப்போது அவன் எய்த சொல்லம்புகள் காட்டின.

"அடே அடிமை! உம்...புறப்படு...எவ்வளவு நேரம்!" என்று அவன் போட்ட கூச்சலைக் கேட்டு

வல்லி செத்தேவிட்டாள். முழுமதி பெரும் அதிர்ச்சி அடைந்தாள். தொடக்கத்திலே நல்லானுக்குக் கிடைத்த வரவேற்பு அவன் எதிர்காலவாழ்வு நன்னன்பால் எப்படி இருக்கு மென்பதை அங்குள்ளார்களை ஓரளவு உணரச்செய்தது.

நல்லான் தன் உடைமைக ளடங்கிய பெட்டியை வல்லி கொணர்ந்து கொடுக்க, அதனைத் தோள்மீது வைத்துக்கொண்டு, வாய்திறவாது தன் புதுத்தலைவனைப் பின்தொடர்ந்தான். சவக்குழியின் அமைதி அங்கு நிலவியது. நல்லானுடன் தோழர்க-ளாகச் சந்தனப்பண்ணையில் வேலை செய்தவர்-களும், அப்போது அங்கு நிகழும் துன்பச்செயல் இன்னதென் றுணராத குழந்தைகளும் தொடர, நல்லான் தன்னை ஏற்றிச்செல்லத் தயாராயிருந்த வண்டியில் ஏறினன். ஏறியபின், அங்குக் குழுமி யிருந்த அனைவரையும் நோக்கிக் கைகூப்பினன். வாய் பேசும் வலி யற்றது. அங்குச் சுற்றி யிருந்தோர்கள் அப்போது சொரிந்த கண்ணீர் ஒன்றுதான் அசையும் பொருளா யிருந்தது.

"ஏடா! நல்லானு உன்பெயர்? பெயரைப் பாரு! துடைப்பக்கட்டைக்குப் பட்டுக்குஞ்சம் என்று பெயர் இருப்பதுபோல்.......உம்......உன் கால்கைகளை வெளியே நீட்டு," என்று நல்லானை எள்ளி நகை-யாடிக்கொண்டே, நன்னன் வண்டியினுள் தான் மறைத்து வைத்திருந்த இரும்புவிலங்குகளை எடுத்து அவன் கால்கைகளில் மாட்டினன். தங்கள் ஞான-சிரியனுக்குத் தங்கள் கண்ணெதிரில் இழைக்கப்

 A-4381

பட்ட அக்கொடுமையைக் கண்டு அங்கிருந்த அடிமைகள் அனைவரும் கண்ணீர் விட்டனர்; விக்கினர்; விம்மினர். வேறு என் செய்வர்! அந்தக் காட்சியைக் காணப்பொறாத முழுமதியம்மை நன்னனை நோக்கி,

"ஐயா, நீங்கள் செய்வது பொருத்தமற்றது; தவறானது. நல்லானுக்கு விலங்கு தேவையில்லை. எங்கள் கண்ணெதிரில் நீங்கள் அவனை அவமானப் படுத்துவது பண்பல்ல. அவனை நீங்கள் அறியீர்," என்று படபடப்புடன் பேசினாள்.

"அம்மையே! யான் அடைந்துள்ள நட்டத்தை அறியீர்போல் பேசுகிறீர். உங்களால் நேற்று யான் ஆயிரம் வெள்ளி யிழந்தேன். அதற்குமேலும் இழக்க இடங்கொடேன்," என்று கூறிக்கொண்டே வண்டியை நன்னன் ஓட்டச்செய்தான். வண்டியின் சக்கரங்கள் சுழன்றதுபோல் அங்கு நின்றுகொண்டிருந்தவர்களின் உள்ளங்களும் துன்பச் சுழியில் சிக்கிச் சுழன்றன.

சந்தனப்பண்ணையினின்றும் புறப்பட்ட வாடகைவண்டி இடையிற் பலபல விடங்களில் நின்றுநின்று சென்றது. அந்த நாளில் புகைவண்டிகளோ, தாமியங்கிகளோ, வானவூர்திகளோ கிடையா. தரைச்செலவு குதிரைவண்டிகள் மாட்டுவண்டிகள் மூலமாகவும், நீர்ச்செலவு காற்றின் உதவியாற் சென்ற பாய்மரக்கப்பல்கள், துடுப்பாற் செலுத்தப்பெற்ற படகுகள் ஆகியவற்றின் மூலமாகவும் நடைபெற்றன. எல்லாவிதமான வசதி-

களும் அமைந்த, இரண்டடுக்குக்கள் கொண்ட, மரக்கலங்கள் மக்களையும் பெருஞ்சுமைகளையும் ஏற்றிச் செல்லப் பயன்பட்டன. அலைகடலின் நடுவே யிருந்த கருநாட்டின் கானகங்களில் தம் இச்சைப்படி திரிந்த அநாகரிகக் கருநிறக்குள்ளர்களை மந்தை மந்தையாக வேட்டையாடிப் பிடித்து வந்து, ஆடுமாடுகளைப்போல் கூட்டங்கூட்டமாகவும் தனித்தனியாகவும் விற்கும் அடிமைவாணிகம் என்னும் கொடிய வழக்கம் வாடைநாடு, கன்னல்நாடு, வேனல் நாடு, வன்னிநாடு முதலிய நாடுகளில் நடைபெற்றுவந்ததென்பதையும், தென்றல்நாடொன்றில்தான் அடிமைவணிகம் அகற்றப்பெற்று அங்கிருந்த அடிமைகள் அனைவரும் விடுதலை பெற்றுத் தம் இச்சைப்படி வாழ்ந்துவந்தனர் என்பதையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

வாடைநாட்டைச் சார்ந்த சந்தனப்பண்ணையினின்றும் புறப்பட்ட நன்னன் தன் சொந்த நாடாகிய கன்னல்நாட்டை யடையுமுன் இடையிலிருந்த பற்பல சந்தைகளுக்குச் சென்று மேலும் சில அடிமைகளையும் விலைக்குப் பெற்று, அவர்களையும் விலங்கிட்டு நல்லானுடன் பிணைத்துக்கொண்டு, சில நாட்களில் வானாற்றின் கரையினை அடைந்தான். கன்னல்நாட்டை அடையுமுன் பல கல் தொலைவு வானாற்றினூடே மரக்கலத்தில் செல்லவேண்டும். விலங்குகளையும் மூட்டைகளையும் அடக்கிவைக்கும் அடித்தளத்தில் தன் அடிமைகளை அடைத்துவிட்டு, உயர்தரமக்கள் தங்குவதற்குரிய மேற்றட்டில் நன்னன் அமர்ந்திருந்தான்.

அடிமைகளும் ஆற்றிவினர்களே. அவர்களுக்கும் உள்ளம் உண்டு, உணர்ச்சி யுண்டு; இன்பதுன்பங்க ளுண்டு; வெம்மையும் தண்மையு முண்டு; செயற்றிற னுண்டு; நுகர்ச்சியுணர்வுண்டு என்பதை உணராது, தந்நலத்தையே தம்வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு, நாகரிகத்திரையின் மறைவில் பொய்வாழ்வு நடத்திவந்த சில புலைச்செல்வர்கள்பால், இவ்வடிமைகள், சொல் படைத்திருந்தும் ஊமர்களைப்போல், உணர்வுறுப்புக்கள் படைத்திருந்தும் பொறியற்ற விலங்குகளைப்போல், நுண்ணறிவு பெற்றிருந்தும் அதனை வெளியிட உற்ற வாய்ப்புக்கள் அற்றவர்களைப்போல் அகப்பட்டுக்கொண்டு பட்ட இன்னல்களை நீக்க ஓர் அமரன் தான் பூமியில் தோன்றி யாகவேண்டும்.

அத்தகைய அமரனொருவன் மூட்டைகளுக்கும், மக்கள்வடிவு தாங்கிய மாக்களுக்கு மிடையே, அறம் சிறை புகுந்து தவமியற்றினனென, தன் இனத்தவரின் விடுதலைக்காகத் தவமியற்றுவதை யுணராத மரக்கலம் அவனையும் மற்றோரையும் சுமந்துகொண்டு வானாற்றில் விரைந்து சென்றுகொண்டிருந்தது.

9. 'பிரிந்தவர் கூடினல்.........?'

நகரங்களின் இரைச்சல், பகட்டு, பொய்த்தோற்றவாழ்வு, வேகம், தன்னலம் ஆகியவற்றினின்றும் விலகியது; அமைதிக்கு ஆக்கந் தருவது; பொறிக ளடக்கிய செந்நெறியாளர்கள் உறைவது;

வழிதப்பிச் செல்கின்றவர்களுக்கு வழிகாட்டுங் கலங்கரைவிளக்க மாயது; சாதி, சமய, இன, நிற வேற்றுமைகளை அகற்றி அன்பொன்றினையே வாழ்வின் குறிக்கோளாகக்கொண்டு தொண்டுபுரிவது '**நண்பர்கள் நிலையம்**' என்பது. அந்த நிலையத்தின் அறையொன்றில், வீரன் கொண்டு விட்டுச் சென்ற எழிலி உட்கார்ந்திருந்தாள். சுமார் அறுபது ஆண்டுகள் வயதுடைய, துவராடை பூண்ட, தாயொருத்தி எழிலியின் அருகில் அமர்ந்து கறிகாய்கள் நறுக்கிக்கொண்டிருந்தாள். இடையே அம் முதியவள் தான் செய்துவந்த வேலையை நிறுத்திவிட்டு எழிலியைப் பார்த்து,

"தென்றல்நாட்டுக்குச் செல்வதை நீ இன்னும் மறக்கவில்லையா எழிலி!" என்று வினவினாள்.

"ஆம் தாயே! நான் போய்த்தானகவேண்டும். அங்குச் சென்றால் என்றாகிலும் ஒருநாள் நான் என் கணவரைச் சந்திக்கக் கூடுமல்லவா?"

"இது நண்பர்கள் நிலையம். மானிட விலங்குகளால் வேட்டையாடித் துரத்தப்பெற்ற அடிமைகளுக்கு அரணளிக்குங் கோட்டை இது. அனைத்துயிர்களும் ஒன்றேயென்ற உண்மையினை ஒப்புக்கொண்டவர்கள் வாழும் இடம். மக்களுள் வேற்றுமை பாராட்டும் இழிகுணம் இங்கு இல்லை. எத்தனை நாட்கள் வேண்டுமாயினும் நீ இங்குத் தங்கலாம்."

"அம்மையே, உங்கள் பேரன்புக்கு நன்றி. ஆனால், நான் இங்கிருந்து வெளியேறுவதைவிட

வேறு வழி இல்லை. என் கண்மணியை அந்தப் பாதகன் பற்றிச்செல்வதுபோல் யான் நேற்றிரவு ஒரு கனவு கண்டேன்."

"எழிலி! நினைவின் மறுபக்கம்தான் கனவு. காணும் கனவுகளெல்லாம் உண்மை ஆவனவாயிருப்பின், பஞ்சைகளெல்லாம் பணக்காரர்களாயிருக்கவேண்டும்; இன்றேல், இந்த மண்ணூடு சுடுகாடாய் மாறியிருக்கவேண்டும். மன வேதனையின் முதிர்ச்சியில் தோன்றுங் கற்பனைகள்தாம் கனவுகள். அஞ்சாதே. எங்கள் பாதுகாப்பில் நீ இருக்கும் வரையில், எந்த முதலாளியும், அவனுக்கு உரம் கொடுக்கும் சட்டங்களும் தம் செயல்களை உன்மீது செலுத்தமுடியாது. இதுகாறும் நடவாதது இனியும் நடவாது."

அப்போது, நிலையத்தின் தலைவரான வள்ளலார் அங்கு வந்தார்.

"தந்தையே! அண்டை ஊரினின்றும் செய்தி ஏதேனும் வந்ததோ?" என்று பணிவாய் வினவினாள் மூதாட்டி.

"வந்துளது," என்று மூதாட்டிக்குப் பதில் அளித்துக்கொண்டே வள்ளலார் எழிலியை நோக்கி,

"உன் கணவன் பெயர் சின்னன் என்றுதானே சொன்னாய்?" என்று விரைவுடன் கேட்டார்.

"ஆமாம்! ஆமாம்! அவரைப்பற்றி ஏதேனும் செய்தி கிடைத்துள்ளதா, தந்தையே?" என்று ஐயமும் பயமும் கலந்த குரலில் எழிலி வினவினாள்.

"இன்றுஇரவு சின்னன் இங்கு வருவான்" என்று புன்முறுவல் பூத்த முகத்துடன் வள்ளலார் கூறிவிட்டு, அங்கிருந்து அகன்றார்.

இரவு வரும்வரையில், அந்த இடைநேரத்தை எழிலி எப்படிக் கழித்திருப்பாளென்பதை எழுதிக் காட்ட இயலாது. ஒவ்வொரு கணமும் ஒவ்வோர் ஊழியாய் எழிலிக்கு நீண்டது. நீண்ட பகற்போது ஒருவாறு கழிய இரவு வந்தது. ஆனால் இருட்டுட-னல்ல, எழிலியின் எதிர்கால வாழ்வெனும் தண்-ணொளியுடன்; செல்வழி காட்டிநிற்கும் கைகாட்டி-யாம் கணவனுடன் வந்தது. சின்னன் நண்பர்கள்-நிலயத்தில் நுழைந்தபோது அங்கு இன்பவேலை கரைபுரண்டோடியதென்று கூறல் வேண்டுமோ?

சின்னன் தன் பண்ணை முதலாளியிடமிருந்து தப்பியதுமுதல் தன் மனைவியைக் கூடியதுவரையில் ஒருவேளைகூட முழுஉணவு உண்டதில்லை; ஓரிரவு-கூட அமைதியாகக் கண்ணயர்ந்ததில்லை; ஓர் இன்-மொழியும் கேட்டதில்லை; நல்லவர்களைக் கண்ட-தில்லை. பகலெல்லாம் பதுங்கி, இரவெல்லாம் நடந்து, ஓடியும் ஒளிந்தும், எதிர்பாராதவகையில் நண்பர்கள்-நிலயத்தை அடைந்தான். மனித வரவேற்பினைச் சின்னன் முதன்முதல் பெற்றது இங்குத்தான். பிறந்ததுமுதல் கசையடிக்கும் வசைமொழிக்குமே பழக்கப்பட்ட சின்னனுக்கு, மனிதவிலங்குகளை யன்றி மனிதத்தெய்வங்களும் உண்டு என்பதைப் பார்த்தறியாத அவனுக்கு, எஜமானன்வீட்டு நாயும் தின்று எஞ்சிய மிச்சிலையே தின்று பழகிய அந்த

அடிமைக்கு, தன்முன்னின்ற காட்சி, அன்பும் அருளும் குழைந்து தவழும் அமரநிலை, பொதுவுடைமையும் பொதுப்பொறுப்பும் பின்னிக்கிடக்கும் மாட்சி, எத்தகையோரின் இதயமலரின் இதழ்களையும் மலர்விக்கும் வரவேற்பு—இவையாவும் கனவாகவே தோன்றின.

மறுநாட்காலை, சின்னான் வள்ளலார்பாற் சென்று அவரை வணங்கி, "ஐயனே! தங்க ளருளால் யான் என் தனயனையும் மனைவியையும் மீண்டும் பெற்றேன். சாவுப்பாதையிற் சென்றுகொண்டிருந்த என்னை வாழ்வுப்பாதையிற் செலுத்தி வாழ வைத்தீர்கள். தாங்கள்தாம் என் தாய்; தந்தை; எல்லாம். யான் இங்குத் தங்குவதனால் வீண்செலவும் தொல்லைகளும் தங்களுக்கு ஏற்படக்கூடும். ஆதலால், தென்றல்நாட்டுக்குச் செல்ல எங்கட்கு விடையருளல் வேண்டும். தங்களை எந்நாளும் மறவோம்," என்று நன்றிக்கண்ணீரைச் சொரிந்தவண்ணம் வேண்டினான்.

"அப்பா! அவசரப்படாதே! இன்று பகல் இங்குத் தங்கி இரவில் புறப்படலாம். இரவில் பிரயாணம் செய்தலே நன்று. பாதுகாப்பான அடுத்தஇடத்தில் உங்களைச் சேர்ப்பிக்க நம் நிலையத்தைச் சேர்ந்த ஓர் அன்பரை உங்களுடன் அனுப்புகிறேன்," என்று சின்னான்வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட வகையில் வள்ளலார் பதில் சொன்னார்.

---

10. மின்னல் கீற்று

வானூற்றில் சென்றுகொண்டிருந்த மரக்கலம் அதன் கரைக்கண் இருந்த பற்பல விடங்களிலும் தங்கி மக்களையும் சரக்குக்களையும் ஏற்றிக்கொண்டும் இறக்கிக்கொண்டும் சென்றது. அவநம்பிக்கையும் அகந்தையுமே உருவாகக்கொண்ட நன்னனுக்குக்கூட, நல்லானுடன் சில பகல்கள் பழகிய காரணத்தால் அவனுடைய உயர்குணம் தெற்றெனப் புலப்பட்டது. அதனால் அவன்கால்கைகளைப் பிணித்திருந்த விலங்குகளை அகற்றி அவனைக் கப்பலில் எங்கும் செல்லுமாறு விடுத்திருந்தான். நல்லான், கப்பலினுள் பற்பலவிடங்களுக்கும் சென்று வரும்போது கப்பலோட்டிகட்கோ, அல்லது பிரயாணிகட்கோ உதவி வேண்டின், முழுவிருப்புடன் செய்வான். அதனால் நல்லான், விரைவில் அனைவருக்கும் உற்ற நண்பனானான். ஒருவேலையும் செய்வதற்கில்லையானால் தனியிடத்திலமர்ந்து திருமறை யோதிக்கொண்டிருப்பான்.

அதே கப்பலின் மேற்றட்டில் செவ்வேள் என்னுஞ் செல்வர் ஒருவர் வன்னிநாட்டுக்குப் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். அவருடன் அவருடைய செல்வமகள் பத்துவயதுடைய பாவையும், தங்கை புனிதமும் பிரயாணம்செய்தனர். நல்லான் தனியாயமர்ந்து திருமறை யோதிக்கொண்டிருக்கும்போது பாவை அவன்பால் அடிக்கடி வந்து நின்றுகொண்டு அவனை உற்றுநோக்குவாள். பால்வடியும் பாவையின் முகமும், அவள் செவ்விதழ்களும், குறு-

நகையும், தென்றலில் நெளிந்தாடும் இளங்கொடி போன்ற அவள்மெல்லுடலும் நல்லானைப் பெரிதும் கவர்ந்தன. நாளடைவில் நல்லானுக்கும் பாவைக்குமிடையே நேசம் ஏற்பட்டது. குழந்தையுள்ளத்தைக் கவர்வதற்கான கதைகள் பல நல்லானுக்குத் தெரியும். அவர்கள் விரும்பும் விளையாட்டுப்பொருள்கள் செய்வதில் அவனுக்குத் தனியாற்றல் உண்டு. இவ்விரண்டிலும் பெருவிருப்பங் காட்டிய பாவைக்கும் நல்லானுக்கும் நட்பு முற்றியதில் வியப்பில்லை. ஒருநாள் பாவை நல்லானிடம் வந்து,

“ உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. உன் பெயர் என்ன ?” என்றாள்.

“ நல்லான்.”

“ நல்ல பெயர். உன்னை நான் நல்லான் என்று கூப்பிடலாமா ?”


“ ஓ! நன்றாகக் கூப்பிடலாம்.”

“ நல்லான்! நீ எங்குச் செல்கிறாய் ?”

“ நான் ஓர் அடிமை. என் முன்னாள் தலைவர் என்னை நன்னன் என்ற ஓர் அடிமைவணிகருக்கு விற்றுவிட்டார். அவர் என்னை எங்குக் கொண்டு போகிறாரோ, தெரியாது.”

“ அப்படியானால் என் தகப்பனாரிடம் சொல்லி உன்னை வாங்கச் செய்கிறேன். என் தகப்பனார் மிகவும் நல்லவர். நீ எங்களிடம் மகிழ்வாயிருக்கலாம்.”

“ நல்லது பாவாய்.”


ஏ கோதண்டராம்

இவ்வாறு பாவை நல்லானுடன் உரையாடிக்கொண்டே கப்பலின் ஓரத்துக்குச் சிறிது சிறிதாகப் பின்புறம் நகர, திடீரென்று கால் தவறித் தண்ணீரில் விழுந்துவிட்டாள். அருகிலிருந்தவர்கள் 'குழந்தை தண்ணீரில் விழுந்துவிட்டது! குழந்தை தண்ணீரில் விழுந்துவிட்டது!' என்று அலறினார்களேயன்றி விழுந்த குழந்தையை மீட்க விரையவில்லை. நல்லான் மின்னல் வேகத்தில் தண்ணீரிற் பாய்ந்து, பாவையை மீட்டுச் செவ்வேளிடம் ஒப்படைத்தான். கப்பலிலிருந்தவர் அனைவரும் நல்லானுடைய அன்பினையும் ஆற்றலையும் போற்றினார்கள்.

மறுநாள் கப்பல் வன்னிநாட்டின் தலைநகரில் தங்கிற்று. நல்லான் வழக்கம்போல் தனியிடத்தில் அமர்ந்து திருமறையோதிக்கொண்டிருந்தான். அப்போது நன்னனும் செவ்வேளும் பாவையும் அங்கு வந்தனர். பாவை தன் தந்தையைப் பார்த்து,

"நான் சொன்னபடி நல்லானை விலைக்கு வாங்குங்கள், அப்பா!" என்று கெஞ்சினாள்.

"பாவாய்! நல்லானை நான் நேற்றே நன்னனிடமிருந்து விலைக்கு வாங்கிவிட்டேன். இதோ பார் விலைப்பட்டியை!" என்று செவ்வேள் விலைப்பட்டியைப் பாவைமுன் நீட்டினார். நன்னன் சொன்னபடி நல்லான் தன் பெட்டியை எடுத்துக்கொண்டு, செவ்வேள், பாவை, புனிதம் ஆகியவரைப் பின்தொடர்ந்து கப்பலினின்று இறங்கிச் செவ்வேள் இல்லத்துக்குச் சென்றான்.

11. அமுதத் துளிகள்

செவ்வேள் வன்னிநாட்டைச் சார்ந்த செல்வக்குடியின் தோன்றல். பாவையுடைய அன்னை பல நற்குணங்கள் வாய்ந்தவள். அதனால் அன்னையின் நற்பண்புகள் மகளிடம் படிந்திருந்ததில் வியப்பில்லை. ஒத்த வுருவும் திருவும், குலமும் நலமும் வாய்ந்ததொரு நற்குடியிற் றோன்றிய 'நங்கை' என்னும் பெயருடைய மங்கையைச் செவ்வேள் மணந்து இல்லறம் நடத்திவந்தார். அவர்களது இல்லறச்சோலையிற் பூத்ததொரு பொன்மலர் தான் பாவை.

நங்கை இளம்பருவம் முதற்கொண்டே ஒரு நோயாளி. அவள் நோயில் பாதிதான் உண்மை; பாதி கற்பனை. உடல்நோயினும் உளநோய் ஒருவரை விரைவில் மாய்க்குமன்றோ? நோயின் வேதனையால் நங்கையின் முகம் எப்போதும் கடுகடுத்திருக்கும்; சொற்களில் பொறுமையின்மையும் வெம்மையும் தாண்டவமாடும். அவள் விரும்புவனவற்றைச் செய்யப் பணியாளர்கள் சிறிது காலம் தாழ்க்கினும் பெரிதும் சீற்ற மடைவாள். அப்படிப் பட்ட காலங்களில் அவள்முன் செவ்வேள் சென்றாலும் அவருக்கும் வசைப்பாட்டுக் கிடைக்கும். பாவைபாலும் பரிவுகாட்டமாட்டாள். செவ்வேள் பாவைபால் காட்டும் அன்பினைக் கண்டு அழுக்காறு கொள்வாள். தன்மீதே தன்கணவர் தம்அன்பு முழுவதையும் பொழியவில்லையே என்பதுதான் அதற்குக் காரணம். எவர்மீதும் குற்றம் சாற்றிக்கொண்டிருப்பதே அவளுக்கு வழக்கமாகிவிட்டது.

நங்கையை நலிவுறுத்திவந்த என்புருக்கிநோய் நாளடைவில் பாவையையும் பற்றிக்கொண்டது. நோயின் கொடுமையைக் குறைக்கவும், மனத்தை வேறுவழிகளில் திருப்பவும் செவ்வேள் தம்மகளை அடிக்கடி தரைச்செலவு, நீர்ச்செலவுகட்கு அழைத்துச்செல்லுவார். அத்தகைய நீர்ச்செலவு ஒன்று நடந்தபோதுதான் செவ்வேள் நல்லானை விலைக்குப் பெற்றது. தம் மனைவிக்கு உதவியாகவிருத்தற்பொருட்டே சிற்றூரொன்றி லிருந்த தம் உடன்பிறந்தாளாகிய புனிதத்தையும் அழைத்துவந்தார்.

புனிதம் தெய்வநம்பிக்கையும் அருள் உள்ளமும் படைத்தவள். சலியாவுழைப்பிலே இன்பம் காண்பவள். காட்சியுலகின் நிகழ்ச்சிகளை நேரிற் கண்டு அவைகட்குத் தக விஷயங்களை நேருக்குநேர் எதிர்க்கும் காரியவாதியேயல்லாமல், கற்பனையுலகிற் பறந்துகொண்டு புதிர்போடும் கனாக்காரியல்லள் புனிதம். அவள் பொறுப்புணர்ச்சியும் நேர்மைக் குணமும் படைத்தவள்.

செல்வச்சிறப்புக்கும் கற்பனை மாட்சிக்கும் எடுத்துக்காட்டாகச் செவ்வேள் இல்லம் இலங்கியது. தம் இல்லத்தை அடைந்தவுடன் செவ்வேள் நல்லானைத் தம் மனைவிக்கு அறிமுகம் செய்துவைத்தார். நங்கை பார்த்துவந்த வேலைகளையெல்லாம் புனிதத்திடம் ஒப்படைத்துவிட்டு ஓய்வு பெற்றுக்கொள்ளுமாறு அவளுக்கு யோசனை கூற, அதன்படி புனிதம் செவ்வேள் இல்லத்தின் கண்காணி யாயினள்.

நீர்விபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிய நல்லானிடம் பாவை முன்னிலும் அதிகமாகப் பழகினாள்; நாளிற் பெரும்பகுதியை நல்லானிடத்தில் கழிப்பாள். மாலை வேளைகளில் பாவை பாய்ச்சல்குதிரை விளையாடக் குதிரையாக நல்லான் உதவுவான்; சிலவேளைகளில் அவளைத் தூக்கிச்செல்லும் சுமைதாங்கியாகப் பயன்படுவான்; அன்னம் ஊட்டும் அன்னையாகச் சேவைசெய்வான்; இரவுவேளைகளில் பாவைக்குத் தூக்கம் வரும்வரையில் கதைகளைச் சொல்லும் நல்லாசிரியனுமிருப்பான். இவ்வளவுக்கும் ஈடாகப் பாவை நல்லானுக்குத் தன் கலப்பற்ற அன்பை ஈந்துவந்தாள். பாவைக்கு உற்ற துணைவனுமிருந்து அவளை மகிழ்விப்பதைவிட வேறுவேலை நல்லானுக்குச் செவ்வேள்இல்லத்தில் இல்லை. நல்ல உணவு; மென்மையான படுக்கை; அன்பு கனிந்த மொழிகள்; மதிப்புத் தரும் தலைவன்; விடுதலை பெற்ற சூழல். இவையாவும் செவ்வேள்விடுதியில் நல்லானுக்குக் கிடைத்திருந்தன! அடிமைவாழ்வெனும் கொடுங்கோடையிற் கன்றிய நல்லானுக்கு இவை அமுதத் துளிக ளாயின.

---

12. மழைவிட்டும் தூவானம் விடவில்லை

நண்பர்கள்நிலையத்தில் அடுத்தநாள் பகற்பொழுது சின்னனுக்கும் அவன்குடும்பத்தாருக்கும் அமைதியாகக் கழிந்தது. அன்று மாலை கழிந்து இருள் வந்ததும் சின்னன், தன் சிறுவனுடனும் இல்லாளுடனும் புறப்படத் தயாரானன். இந்த

அகதிகளைத் தக்க பாதுகாப்புடன் வெளியேற்றவும், இவர்களுக்கு வழித்துணையாக உதவவும், நிலையத் தலைவர் வள்ளலார், "தொண்டர்" என்ற பெய-ருடைய ஓர் அன்பரை அமர்த்தியிருந்தார். சின்னான் புறப்படச் சிறிதுநேரத்துக்குமுன், அவனைப்போல் வாடைநாட்டினின்று தப்பியோடிவந்துவிட்ட இரு-அடிமைகள்—ஓர் இளமகனும் ஒரு முதுமகளும்—நண்பர்கள்நிலையத்தில் தஞ்சம் புகுந்தனர். வள்ள-லார் அவ் விருவரையும் தொண்டர்பாதுகாப்பில் ஒப்படைத்துச் சின்னான் குடும்பத்தாருடன் அழைத்-துச்செல்லுமாறு பணித்தார். இருள் எங்கும் நன்கு சூழ்ந்தபின்னர், அகதிகள் ஐவரும் பாதுகாப்பி-னின்று வெளியே வந்து தமக்கென நின்ற மூடு-வண்டி யொன்றில் ஏறிக்கொண்டனர். தொண்டர் வண்டியைச் செலுத்த, அவ் ஊர்தியும் புறப்பட்டது. புறப்பட்ட வண்டி சிறிதுதூரம்கூடச் சென்றிராது. நிலையத்துப் பணியாளொருவன் தொண்டரிடம் ஓடி-வந்து "பத்துப்பேர்கள் இவ்வகதிகளைப் பற்ற வருவ-தாகத் தெரிகின்றது. எச்சரிக்கையுடன் செல்க" என்றான்.

"எத்தனைபேர்கள் வந்தாலும் என் கை வில் பதிற்சொல்லும், தொண்டரே! தாங்கள் எதற்கும் அஞ்சாது வண்டியைச் செலுத்துக" என்றுகூறி, வண்டியினுள் இருந்த சின்னான் தன் கையிலிருந்த வில்லை யெடுத்துக் காட்டினான்.

எவ்வித நிகழ்ச்சியு மின்றி இரவுச்செலவு கழிந்-தது. வண்டி ஆதவனெழும் வேளையில் இரு மலை-

களுக் கிடையில் அமைந்த வொரு குறுவழியாகச் சென்றுகொண்டிருந்தபோது, சின்னன் பின்புறம் நோக்கினன். முதலில் ஒரு புழுதிப்படலம் தெரிந்தது. அதைத் தொடர்ந்து விரைந்துவருங் குதிரைகளின் குளம்பொலி கேட்டது. பின்னும், சில கணங்களுக்குள் தங்களை நோக்கித் தாவிவருங் குதிரைவீரர்களும் தெரிந்தனர். சின்னன் விஷயத்தைத் தொண்டருக்குத் தெரிவிக்க, அவர் கூறிய யோசனைப்படி வண்டியினின்று ஐவரும் கீழே குதித்தனர். தொண்டர் வண்டியை ஒரு பெரும்புதரின் மறைவில் விட்டுவிட்டு, அவ் வைவருடன் புதர்களும் முட்களும் வெடிப்புக்களும் நிரம்பிய, வளைந்து வளைந்து செல்லுகின்ற, ஓர் ஒற்றையடிப்பாதை வழியாய்ச் செங்குத்தான வொருபாறையின்மீது ஏறிக்கொண்டார். நாணேற்றிய வில்லுடன் சின்னன் பாறையின்முன் நின்றான். அவன் அருகில் தொண்டர் நின்றார்; மற்றையோர்கள் ஒரு பாறையின் பிளவில் மறைந்துகொண்டனர்.

தப்பி யோடி வந்தவர்களைப் பின்தொடர்ந்து வந்த பதின்மரும் அவர்கள் மலைமீ தேறுவதைக் கண்டு, தாம் ஏறிவந்த குதிரைகளை ஒருபுறத்தே நிறுத்திவிட்டு, மலைமீ தேற முயற்சி செய்தனர். அப்போது சின்னன்வில்லினின்றும் வெளிக்கிளம்பிய அம்புகள் அவர்கள் முயற்சியைப் பயனுறாது செய்தன. வெவ்வேறு வழியாக அவர்கள் மேல்வர முயன்றபோது தொண்டரும் மற்றவர்களும் அவர்கள்மீது வீசிய கற்களும் புரட்டிவிட்ட பாறைகளும்

அவர்களுக்குப் படுகாயத்தை உண்டாக்கவே, உயிர் தப்பினுற் போதும் என்று அவர்கள் வந்தவழியே மீண்டு தம்மூர் திரும்பினர். வந்த ஆபத்து நீங்கி விட்டதென்பதை நன் கறிந்துகொண்டபின்னர், சின்னுனும் மற்றவர்களும் தம் பயணத்தைத் தொடர்ந்து, நடுப்பகல் நண்ணும் வேளையில் ஒரு சிற்றூரை யடைந்து அங்கிருந்த வொரு நண்பர்கள்நிலையத்தில் பாதுகாப்புப் பெற்றனர்.

---

13. அருள் உள்ளம்

செவ்வேள் இல்லத்துக்கு நல்லான் வந்து ஈராண்டுகள் ஓடிவிட்டன. புயல் ஓய்ந்து, அவன்வாழ்வில் தென்றலும் ஒளியும் வீசின. இதுகாறும் எங்கெங்கோ உழன்றுகொண்டிருந்த அவன் சிந்தனைகள் இப்போது வாடைநாட்டில் தான் விட்டுவந்த வல்லிபாலும், மக்கள்பாலும் சென்றன. தன்நலனை அவர்களுக்கு அறிவிக்கவும், அவர்கள் நலனைத் தான் அறியவும் விரும்பிய நல்லான் வல்லிக்கு ஒரு முடங்கல் வரையலானுன்.

நல்லானுக்கு எழுத்துப்பயிற்சி அதிகமில்லை. பழக்கத்தினுல் திருமறைச்சுவடியை ஒருவாறு தட்டுத்தடுமாறிப் படிக்கக் கற்றுக்கொண்டானே யன்றி, எழுதும் பயிற்சியைப் பெறவில்லை. ஆதலின் பாவையின் உதவியை நாடினுன். நல்லான் சொன்னபடிபாவை முடங்கலை வரைந்துமுடித்ததும்,

"உன்மனைவி இக் கடிதத்தைப் படித்தால் எவ்வளவு இன்பமும் ஆறுதலும் பெறுவாளோ!" என்று வினவினாள்.

"என் முன்னாள் தலைவி முழுமதியம்மையார் பணம் திரட்டியதும் என்னை மீட்பதாக உறுதி கூறியிருக்கிறார். அவர்மகன் அன்பனும் பணத்தையெடுத்துக்கொண்டு என்பால் வருவதாகக் கூறியிருக்கின்றான். என் முகவரியை அவர்களுக்கு அறிவித்தால்தானே அவர்கள் என்னை மீட்க முயற்சி செய்ய முடியும். என் மனைவிக்கும் இம்மடங்கல் எவ்வளவோ ஆறுதலை யளிக்கும்" என்று வருத்தத்தோடு கூறினான் நல்லான்.

எழுதப்பட்ட கடிதம் அஞ்சல்நிலையத்தில் சேர்க்கப்பட்டது. நீண்டகாலமாகத் தான் செய்யாதிருந்த வொருகடமையைச் செய்துமுடித்ததனால் நல்லானுக்கு மகிழ்ச்சியும் அமைதியும் உண்டாயின.

மாரிக்காலம் மறைந்து கோடைக்காலம் வந்தது. இந்நாளிற்போல் அந்நாளிலும் செல்வர்கள் வேனிலின் வெம்மையைத் தணித்துக்கொள்ளுதற்காகக் கடற்கரையூர்களுக்குச் சென்று தனிஇல்லங்களிற் சிலநாட்கள் தங்குவது உண்டு. அதுபோல, செவ்வேளும் தம் குடும்பத்தாருடன் ஒரு கடற்கரையூருக்குச் சென்று தங்கினார்.

ஒருநாள் மாலை, நல்லானும் பாவையும் மணலில் அமர்ந்து கடற்காட்சியைக் கண்டு களித்துக்கொண்டிருந்தனர். மாலைக்கதிரவன் தன் தங்கக்கரங்களைச்

சிறிதுசிறிதாக மடக்கிக்கொண்டு மேலைக்கடலில் மூழ்கிக்கொண்டிருந்தான்.

அப்போது பாவை நல்லானை விளித்து,

"அதைப் பார்" என்றாள்.

"எதை?"

"சூரியன் மறையுமிடத்தை. யானும் அங்கு விரைவில் போகப்போகிறேன்."

"அங்கா?"

"ஆம். ஆண்டவன் இருக்குமிடத்துக்கு. ஆதவனும் அங்குத்தானே செல்கின்றான்?"

பன்னிரண்டாண்டுகள் நிரம்பப்பெறாத வொரு சிறுமி மேற்கண்டவாறு கூறியதைக் கேட்டு வியப்புற்ற நல்லான் பாவையின் முகத்தைக் கூர்ந்து நோக்கினான். கயல்மீன்களைப்போல் பிறழும் அவள் நீலக்கண்கள் அமரவொளி வீசக் கண்டான். அதுகாறு மில்லாத வொரு துணுக்கம் அவன் உள்ளத்தில் தோன்றியது. கடந்த சிலநாட்களாகப் பாவைபால் காணப்பட்ட உடல்நலிவு, உணவுவேட்கையின்மை, விளையாட்டுக்களில் விருப்பமின்மை ஆகிய மாறுபாடுகளையும், அவள் அப்போது சொன்ன மொழிகளையும் இணைத்துப் பார்த்தான். பாவை கூறின மொழிகள் விளையாட்டுமொழிகள் அல்ல என்றும், பொருள் பொதிந்த சொற்களேயென்றும் அவனுக்குப் புலப்பட்டன. புனிதம் கடந்த சில நாட்களாகப் பாவைக்கு மருந்து கொடுத்துவருவதும் அவன்நினைவுக்கு அப்போது வந்தது. அந்த

உளநிலையில் அவன் தன் அருகிலிருந்த பாவையின் உடலைத் தீண்டியபோது அது மழுப்போல் கொதித்ததையும் உணர்ந்தான். அண்மையில் ஒருபுயல் வீசப்போவதாக அவன் அன்பு நெஞ்சம் கூறியது. வருந்துவதைத் தவிர நல்லான் வேறு என் செய்வான் !

பாவை நாளும் உடல்நலம் குன்றிவருவதைப் புனிதம் செவ்வேளுக்கு அடிக்கடி நினைவுபடுத்திக்கொண்டுதானிருந்தாள். தமக்கு இயல்பான மந்த குணத்துக் கேற்ப, செவ்வேள் “நாளடைவில் எல்லாம் நலமாகிவிடும்” என்று கூறிக்கொண்டே அசட்டையுடனிருந்துவந்தார். நங்கைக்கோ தன் நோயினைத் தவிர வேறொன்றிலும் கருத்துச் செல்லவில்லை. அசட்டை மிகுந்த அப்பனுக்கும், அக்கறையில்லாத அன்னைக்குமிடையே அகப்பட்ட பாவை விரைவில் படுக்கையில் படுக்க நேர்ந்ததில் வியப்பில்லை. படுக்கையிற் பாவை படுத்த பின்னரே செவ்வேளின் கண் திறந்தது. மருத்துவர் வந்தார். ஏதோ மருத்துவமும் நடந்தது.

பாவையைப் பொறுத்தவரையில் அவள் தன் பெற்றோரிடம்பேரன்புகாட்டினாள்; அதனோடு தங்கள் பண்ணையில் வேலை பார்த்து வந்த அடிமைகளிடமும் அன்பாயிருந்துவந்தாள். அடிமைகளுடைய இருண்ட வாழ்வினை எவ்வளவுதூரம் ஒளி பெறச் செய்யலாம் என்றவோர் எண்ணம் அந்தப் பிஞ்சு உள்ளத்தில் எப்போதும் இருந்துவந்தது.

ஒருநாள் நல்லான் பாவையின் படுக்கையருகில் அமர்ந்து திருமறையை வாய்விட்டுப் படித்துக்கொண்டிருந்தான். "ஆண்டவன் மக்களை நன்னெறிக்கு உய்க்க உலகில் தோன்றுகிறான். அவர்களுக்காகப் பல இன்னல்களைத் தான் ஏற்கிறான். சில வேளைகளில் தான் மடியவும் செய்கிறான்," என்ற சொற்றொடர்களை அவன் வாசித்துவந்தபோது, பாவை இடைமறித்து, "நல்லான்! திருமறையில் கூறியிருப்பதுபோல் யானும் மற்றவர்கட்காக உயிர் துறக்க விரும்புகிறேன்," என்றாள். இதைக் கூறியபோது அவள் உதடுகளில் புன்னகை அரும்பியது.

"பாவாய்! நீ சொல்வதன் பொருள் எனக்கு விளங்கவில்லையே!" என்றான் நல்லான்.

"விளங்கச் சொல்கிறேன், கேள். என்னைப்போன்று இளம்பருவத்தினரான எத்தனை அடிமைக்குழந்தைகள் தங்கள் பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டிருக்கின்றார்கள், தெரியுமா? எத்தனை மனைவிமார்கள் அவர்கள் கணவன்மார்களிடமிருந்து அகற்றப்பட்டிருக்கின்றார்கள், தெரியுமா? விலங்குகள்கூடத் தம் குட்டிகளுடன் கூடி வாழும் இயல்புடையனவாயினவே! மக்களுக்கா இவ்விதத் தண்டனை? நாகரிகமனிதசமூகத்தார் இந்த வாயற்ற பூச்சிகளாகிற அடிமைகளுக்கு இழைக்குங் கொடுமைகட்குக் கழுவாயாக யான் இறக்கப்போகின்றேன். என்சாவு அவர்கள்சிந்தனையைத் தூண்டட்டும். மூடிய அவர்கள்கண்கள் திறக்கட்டும்.

இவை நிகழ்ந்தால் என்மரணம் எனக்கு மகிழ்ச்சியைத் தரும்," என்று பாவை உருக்கமாகக் கூறிக்கொண்டு வரும்போது செவ்வேள் அங்கு வந்தார். பாவை அவரை நோக்கி,

"அப்பா! இந்த உலகில் யான் இன்னும் சில நாட்கள்கூட வாழ முடியுமென்று தோன்றவில்லை. உங்களையும் என் நண்பர்களையும் விட்டுப் பிரிய எனக்கு மனமில்லையாயினும் என்னைச் சூழ்ந்துள்ள அவலக்காட்சிகள் மரணத்தின் வாயிலுக்கு என்னை இழுத்துச்செல்கின்றன" என்று கூறிக்கொண்டே மேலும் சொல்லத் தொடங்கியபோது, செவ்வேள் "கண்ணே! உனக்கு வருத்தந் தரும் அந்த அவலக்காட்சிகள் யாவை?" என்று ஓய்ந்த குரலில் வினவினார்.

"அப்பா! நம் வேலையாட்கள் எல்லாரும் எவ்வளவு நல்லவர்கள்! என்னிடத்தில் எவ்வளவு அன்பு காட்டுகின்றார்கள்! ஆனால், அவர்கள் ஆடுமாடுகளினும் கீழாக நடத்தப்படுவதைக் காண என்னெஞ்சம் வெடித்துவிடும்போலிருக்கிறது. அவர்களுக்கு நீங்களாவது முழு விடுதலையை அளிக்கமாட்டீர்களா?"

"பாவாய்! அவர்களை யான் கண்ணியமாகத்தானே நடத்துகின்றேன். அவர்கள் நம் பண்ணையில் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றார்களே!"

"உண்மைதான்......ஆனால் உங்கள்காலத்துக்குப்பிறகு அவர்கள் கதி யாதாகும் என்பதைப்பற்றிச் சிறிதேனும் சிந்தித்தீர்களா? கொடுங்கோல-

னை ஒருவன் அவர்களது எதிர்காலத்தலைவனாய் வந்தால் அவர்களது வாழ்வு எத்தகையதாக மாறும்? நீங்களே அவர்களுக்கு விடுதலையை ஈந்துவிடின், என்ன?"

"அவர்களுக்கு விடுதலையைத் தர எனக்கு விருப்பம்தான். ஆனால் அதைச் செய்வது அவ்வளவு எளிதல்ல".

"நான் இறந்தபிறகாவது நீங்கள் உங்கள் நண்பர்களுக்கும் மற்றவர்களுக்கும் அடிமைகளை வைத்திருப்பதன் கொடுமைகளை எடுத்துக்கூறி, அடிமைவாழ்வே நம் நாட்டில் இல்லாதபடி செய்வீர்களா?"

"என் கண்ணே! நீ இறப்பதா! இனி, மற்றொருமுறை அப்படிப் பேசாதே; என் இதயம் நின்றுவிடும். நீதான் என் வாழ்வு."

"அப்பா! யான் இவ்வுலகவாழ்வை நீத்தவுடன் நீங்கள் நல்லானுக்கு விடுதலை யருளவேண்டும்."

"அதைச் செய்யத் தவறேன்."

"நான் போனபிறகு நீங்களும் என்னுடன் வருவீர்களா?"

"நீ சென்றபின் இவ்வுலகில் எனக்கு என்ன இருக்கிறது? உன்னுடனே வந்துவிடுவேன்," என்று துக்கம் நெஞ்சை யடைக்க, கண்ணீர் கண்களை மறைக்க, பாவையைச் செவ்வேள் மார்புறத் தழுவிக் கொண்டார். தந்தையின் அன்பணைப்பிலே பாவை அப்படியே கண்ணயர்ந்தாள்.

---

14. விளக்கு அணைந்தது

பாவையின் உள்ளொளி நாளும் சுடர்கான்று பெருகிவர, அதற்கு மாறாக அவள் உடல்நலம் சிறுகி அருகி வந்தது. சில நாட்களில் படுக்கைவிட்டெழவும் வலியாற்றாள். செவ்வேள் தங்கியிருந்த இல்லத்தை ஒருவித இருள் சிறிது சிறிதாக மூடிவருவதை அனைவரும் குறிப்பாக உணரலாயினர்.

ஒருநாள்மாலை, பாவை தன் தகப்பனாரை யழைத்துத் தன் அருகில் உட்காரவைத்துக்கொண்டாள். அதன்பின், அடிமைகள் உட்படத் தன் இல்லத்தில் உள்ளவர் அனைவரையும் தன்னிடத்துக்கு வரச்செய்தாள். சிலநாட்களாகப் பாவையைப் பாராதிருந்தோர்கள் அன்று அவள் உடல்நிலையைக் கண்டு திடுக்கிட்டனர். அங்கு வந்து குழுமினவர்கள் பாவையின் படுக்கையைச் சூழ்ந்து நின்றனர். அப்போது பாவை மிக முயன்றெழுந்து தன் தந்தையின் மார்பிற் சாய்ந்துகொண்டு, அடிமைப்பணியாளர்களை நோக்கி,

"என் அருமை நண்பர்களே! யான் எதன்பொருட்டு உங்களை அழைத்திருக்கின்றேன், தெரியுமா? யான் என் தலைவனைத் தேடி அவனிருக்குமிடத்துக்குச் சென்றுகொண்டிருக்கின்றேன். செல்லுமுன், நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் அனைத்தென்பும் உள்நெக ஆனந்தத் தேன் சொரியும் அந்த எந்தைபால் உங்களை அடைக்கலப்படுத்த விரும்புகின்றேன். அவனிடம்

யான் உங்களைப்பற்றிப் பன்முறை வேண்டிக்கொண்டிருக்கின்றேன். யான் சென்றபின்னரும் நீங்கள் அவனைப் பாடிப் போற்றவேண்டும். என்றாகிலும் ஒருநாள் அவன் உங்களுக்கு விடுதலையருள்வான்" என்று மொழிந்தவாறே கண்ணீர் சொரிந்தாள். அப்போது அந்த அடிமைமக்கள் கண்களினின்றும் பெருகிய கண்ணீர்தான் பாவைக்கு அவர்கள் செலுத்திய அன்புக்காணிக்கை. தன் உள்ளத்தில் பொங்கிய உணர்ச்சியை அடக்கமாட்டாத நல்லான், பாவையை நோக்கி, "பாவாய்! நீ தெய்வப்பாவை; சிறப்பெரியாள். நீ இப்போது புகன்ற மொழிகள் அமரஉலகுவரைக்கும் கேட்கும் மறைமொழிகள். ஆண்டவனருளால் நீ என்றும் அமர்ந்திருப்பாய்," என்று உருக்கத்துடன் உரைத்தான்.

"நீங்கள் அனைவரும் என்பால் அளவு கடந்த அன்பு காட்டினீர்கள். யான் சென்றபின்னரும் என்னை நீங்கள் மறக்காதிருக்கும்பொருட்டு என் உடைமைகளில் ஒவ்வொன்றை ஒவ்வொருவருக்குக் கொடுக்கப்போகின்றேன்" என்று சொல்லிக்கொண்டே, பாவை தான் அணிந்திருந்த காப்பு, வளையல், காதணி, கழுத்தணி, நெளி, ஆகியவற்றையெல்லாம் கழற்றி ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்று கொடுத்தபின்னர், அவர்கள்பால் விடைபெற்றுக்கொள்ளும் பாவனையில் தன் இருகைகளையும் கூப்பினாள். நல்லான் ஒருவனைத் தவிர, மற்ற அடிமைகள் யாவரும் தம்இளந் தலைவிக்குத் தம் மௌனாஞ்சலியை அளித்துவிட்டு அப்பால் அகன்றனர். உணர்ச்சி-

யால் பாவை அவ்வளவு பேசினளேயன்றி, உடல்-வன்மையாலல்ல; தன்னையும் மீறிப் பேசியதனல், பாவை கண் மீதூரப்பெற்று அப்படியே படுக்கையில் சாய்ந்தாள்.

இரவு பகல் எந்நேரமும் நல்லான் பாவையருகில் அமர்ந்து அவளுக்குத் திருமறையிலிருந்து சுவையான பகுதிகளைப் படித்துக்கொண்டிருப்பான். இடை-யிடையே புனிதம் வந்து மருந்து கொடுத்துவிட்டுப் போவாள். அவ்வளவு கருத்துடன் பாவையைப் பேணி வந்தும் அவளுடைய வாழ்வுத்திரை வெகு விரைவாகச் சுருண்டுகொண்டே வந்தது. தன்னல் இயன்ற உதவிகளைத் தன் பெண்ணுக்குச் செய்யக் கூடவில்லையே என்று நங்கைகூட மிகவருந்தினள்.

ஒருநாள், நல்லான் பாவையருகி லிருந்து அக-லாமலும், உணவுகொள்ளாமலும், விழித்தகண் மூடாமலும், அவள்மீது செலுத்திய பார்வையை அகற்ருமலும் சிலைபோல் உட்கார்ந்திருந்தான். அன்று வீசப்போகும் புயலுக்கு முன்னேடியாக அவள்முகம் தோற்ற மளித்தது. பின்னல் வரப்-போவது நல்லானுக்கு எங்ஙனம் முன்னல் தெரிந்-தது? ஓர் அன்புள்ளத்தை மற்ருேர் அன்புள்ளம் அளக்கும் அளவுகோலே வேறு. இன்னதென்று விளக்கக்கூடாத வேதனையொன்று தன் உள்-ளத்தை அன்று அழுத்துவதாக நல்லான் குறிப்-பாகப் புனிதத்திடம் கூறினன். புனிதம் தன் ஐயத்-தினை மந்தணமாகச் செவ்வேளிடம் அறிவித்தாள். எதிர்பார்த்ததாயினும், புனிதம் கூறியது ஆயிரம்

பேரிடிகளை ஒன்றுசேர்த்துத் தம் தலைரீது விசியது-போல் செவ்வேளுக்கு வேதனையை உண்டாக்கியது. பாவையின் இறுதி அவ்வளவு அண்மையில் வரும் என்று அவர் நினைக்கவேயில்லை. மருத்துவரொருவரை விரைவில் அழைத்துவருமாறு ஆளொருவனை யனுப்பிவிட்டுச் செவ்வேள் பாவையருகில் உட்-கார்ந்துகொண்டார். அதுகாறும் மூடிக்கொண்-டிருந்த பாவையின் கண்கள் திடீரென்று திறந்தன. "ஆண்டவனே!" என்ற சொல்லை ஒலித்துக்-கொண்டே பாவை இறுதியாகத் தன் கண்களை மூடிக்கொண்டாள்.

அவ்வளவுதான்! செவ்வேள் இல்லத்தை அது-காறும் ஒளிசெய்து வந்த அமரச்சுடர் அணைந்தது. அதுகாறும் ஊன் கூட்டில் சிறைபட்டுக் கிடந்த உயிர் அப்போது கட்டு நீங்கி எல்லை யற்ற இன்பப் பெருவெளியில் கலந்தது. எரிந்துபோன கரித்திரி தீபத்தில் பரிதாபக்காட்சி யளித்துக்கொண்டு கிடப்-பதுபோன்று பாவையின் பொன்னுடல் படுக்கை-யிற் கிடந்தது. அப்போது அங்கெழுந்த அழுகை-யையும் அரற்றலையும் எங்கும் விராவி நிற்குங் காற்று எல்லாத்திக்குக்களுக்கும் சுமந்து சென்றது. பின்-னும் இரண்டு மூன்று நாட்களில் செவ்வேளும் மற்றோரும் தம் பழைய இல்லத்துக்கு மீண்டனர்.

———

15. கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை

செவ்வேள் இல்லத்தை ஒருவிதமான சூன்யம் சூழ்ந்திருந்தது. பேசாத நிழற்படக் காட்சியில் தொடர்ந்து நிகழும் சம்பவங்கள் போல், அன்றாட-வாழ்க்கை அங்கு நடந்துவந்தது. செவ்வேள் உள்-ளத்தில், தம் ஒரே புதல்வியை யிழந்த துன்பம் குடி கொண்டு, அவரைத் தினமும் உருக்கி வந்தது. தம் உளநோயை மறப்பதற்குச் செவ்வேள் இப்போது முன்னிலும் அதிகமாகத் தம் நண்பர்கள் வீடுகளுக்-குச் செல்லத் தொடங்கினார்; அதிகமாகப் பேச-லானார்; மகிழ்ச்சி யூட்டும் நிகழ்ச்சிகளிற் கலந்து-கொண்டார்; உறக்கம் வரும் வரையில் ஏதேனும் ஒரு தொழிலில் ஈடுபட்டிருந்தார்.

பாவையைப் பிரிந்தபிறகு முன்னிலும் அதிக மாகத் தன்மீது தன் கணவர் அன்பைச் சொரியக் கூடும் என்று எதிர்பார்த்த நங்கைக்குச் செவ்-வேளின் போக்கு ஏமாற்றத்தையே அளித்தது. “என்கொழுநருக்கு என்பெண்ணைப் பறிகொடுத்த வருத்தமுமில்லை; நோயாளியான என்னைப்பற்றிய கவலையுமில்லை” என்று நங்கை நல்லானிடமும் புனிதத்திடமும் அடிக்கடி குறைகூறிவரலானாள்.

நங்கை தன் நாயகனைப் பற்றி அறிந்துகொண்-டது அவ்வளவுதான்! ஒருநாள் செவ்வேள் நல்லானைத் தம் அறைக்கு வருமாறு அழைத்து, “நல்லான்! இந்த உலகம் எனக்கு வெறிச்சென்-றிருக்கிறது.” என்றார்.

“ தலைவ ! அதை யான் அறியேன். இறைவனை வேண்டுங்கள். அவன் வழிகாட்டுவான்” என்றான் நல்லான்.

சமயப்பற்றுக் கொண்டவராகச் செவ்வேளைக் கூறிவிடமுடியாது. எனினும், பாவையின் நினைப்பும், நல்லானின் கூட்டுறவும், சிறிது சிறிதாகச் செவ்வேள் உள்ளத்தில் இறைவனைப்பற்றிச் சிந்திக்கச் செய்தன. பாவை மண்ணுலகை விட்டுச் சென்று வாரங்கள் பலவாயின. அவள்மறைவால் செவ்வேள்உள்ளத்தில் உண்டான பிளவு நாளும் அகன்றுவந்ததேயன்றிச் சிறுகவில்லை. காலத் தேவனின் மங்கலான அழைப்பொலி அவரது காதுகளில் விழுவதாக அடிக்கடி அவருக்குத் தோன்றியது. அடிமைகளின் விடுதலையைப்பற்றிப் பாவை தன்னிடம் கேட்டுக்கொண்டது எப்போதும் அவர் நினைவி லிருந்துவந்தது. சிறப்பாக நல்லானுக்கு முழுவிடுதலையையும் அளித்துவிடுவதற் குரிய வழி வகைகளைக் கூர்மையாக ஆராய்ந்துவந்தார். ஒரு நாள் அவர் நல்லானிடம்,

“ நல்லான் ! விரைவில் உனக்கு முழுவிடுதலை கிட்டப்போகிறது. வாடைநாட்டுக்குச் செல்லத் தயார்செய்துகொள்” என்றார்.

நல்லான்முகம் மகிழ்ச்சியால் பொலிவுற்றது.

“ இங்கு உனக்கு எவ்விதத்துன்பமும் ஏற்படவில்லையே !” என்று நல்லானை வினவினார் செவ்வேள்.

“ இல்லைத்தான். ஆனால் துன்பமில்லாமல் இருப்பது வேறு; விடுதலை பெற்றவனாய்

வாழ்வது வேறு அல்லவா? அடிமையாய் அமர-நாட்டின்பங்களை நுகர்ந்து வாழ்வதினும் விடுதலை மனிதனாய் வறுமையில் உழல்வது மேலல்லவா? பரிந்து பிற ரியும் பொற்கறியினும் தன் இச்சை-யாய்த் தான் ஈட்டியுண்ணும் அடகுணவு சிறந்ததல்-லவா? எல்லா நலன்களும் பொருந்தப்பெற்ற தங்-கள் மாளிகையின் மேல்மாடிக்கண் பஞ்சணையில் யான் படுத்தாலும் அது என் சிறுகுடிலின் கட்டாந்-தரையிற் படுத்துப் புரளும் இன்பத்துக் கீடாகுமா? யான் இங்ஙனம் கூறுவதனால் என்னை நன்றி கெட்டவனாக நினையற்க. ஆறறிவு படைத்த மனித-னுக்குச் சுதந்திரம் பிறப்புரிமையன்றோ?

மேற்கண்ட உரையாடல் நல்லானுக்கும் செவ்-வேளுக்கும் நிகழ்ந்துகொண்டிருந்தபோது நங்கை-யும் புனிதமும் ஆங்குப் போந்தனர். செவ்வேள் அவ்விருவர்பாலும் தாம் பண்ணையிலுள்ள அடிமை-கள் அனைவருக்கும் விரைவில் விடுதலையளித்துவிட முடிவுசெய்துவிட்டதாகக் கூறினார். செவ்வேளின் முடிவு நங்கையின் உள்ளத்தில் என்ன எதிரொலியை எழுப்பியதோ! புனிதத்துக்குப் பெரும் ஆறுதலை அளித்தது. மக்கள் மக்களாய் வாழவேண்டும் என்பது அந்தப் புனிதவதியின் உள்ளக்கிடக்கை.

வழக்கம்போல் அன்றுமாலையும் வெளியே சென்ற செவ்வேள் நேரமாகியும் திரும்பவில்லை. நல்-லான், தன் தலைவன் அறையண்டை யமர்ந்து திரு-மறை படித்துவந்தான். நங்கை தன் அறையில் படுத்திருந்தாள்; புனிதம் வீட்டு வேலைகளைக்

கவனித்துக்கொண்டிருந்தாள். அப்போது செவ்வேள் இல்லத்தின் வாயிலில் ஓர் ஆரவாரம் கேட்டது. புனிதமும் நல்லானும் வெளியே ஓடிவந்து பார்க்க, சிலர் செவ்வேளை ஒரு வண்டியிற் கிடத்திவந்து வீட்டின் தாழ்வாரத்தின் முன் இறக்கினர். செவ்வேளினது குடல் வெளிவந்துகிடக்க, வயிற்றினின்றும் குருதி ஆறுகப் பெருகிக்கொண்டிருந்தது. அவர் நினைவிழந்து கிடந்தார்.

அன்று மாலை, செவ்வேள் ஒரு வீதிவழியே சென்றுகொண்டிருந்தபோது, இருகுடியர்கள் தம்முள் சண்டைசெய்துகொண்டிருந்ததாகவும், அவர்களை விலக்கச் செவ்வேள் முயன்றபோது, அவ்விருவருள் ஒருவன் அவரைத் தன்கையிலிருந்த கத்தியால் வயிற்றில் குத்திவிட்டதாகவும் விஷயங்கள் தெரியவந்தன.

மருத்துவருக்குச் செய்தி தெரிவிக்கப்பெற்றது. அவர் வருவதற்குள் செவ்வேள் அத்தியாயம் முடிவுற்றது. செவ்வேள் இல்லத்தின் எதிர்காலம் எப்படியாயினும், கைக்கெட்டிய விடுதலைக்கனி வாய்க்கெட்டாமற்போனது நல்லானுள்ளிட்ட அடிமைகளின் தீயூழன்றோ !

---

16. நல்லாநின் நோக்கம்

செவ்வேள் இல்லத்தில், பாவைக்குப் பின்னர் அங்கிருந்த அடிமைகளுக்குப் பற்றுக்கோடாயிருந்தவர் செவ்வேள் ஒருவரே. அவர் மறைவுக்குப் பின்னர் அவர்கள் உள்ளத்தில் துன்பவுணர்ச்சியும் அவநம்பிக்கையும் குடிகொண்டன. தன்னலமும் செல்வச்செருக்கும் கொண்ட வொருபெண்ணின் கையில் தங்கள் எதிர்காலம் ஊசலாடிக்கொண்டிருப்பதை அந்த அடிமைகள் நன்கறிந்திருந்தனர்.

தன் தலைவன் தனக்குத் தருவதாக வாக்களித்த விடுதலைக்கு இடையூறு ஏற்பட்டுவிட்டதேயென்ற வருத்தம் நல்லானுக்கு முதலில் உண்டாகவில்லை. அதற்குப் பதிலாகச் செவ்வேள் ஆண்டவன் அடிகளைச் சார்ந்து இன்பவாழ்வில் அமர்ந்திருப்பார் என்ற எண்ணமே அவன் உள்ளத்தில் பூரித்து நின்றது. நங்கையின் நிலையற்ற குணத்தால் வெருட்சி யடைந்திருந்த அடிமைகளின் உள்ளத்தில் நம்பிக்கை யூட்டக்கூடிய ஆற்றல் தனக்கில்லை யென்பதையும் நல்லான் நன்கறிந்திருந்தான்.

ஒருநாள் நடுப்பகல், புனிதம் தன் அறையில் அமர்ந்து ஓர் அலுவலில் ஈடுபட்டிருக்கையில் நங்கையின் பணிப்பெண் ஒருத்தி புனிதத்திடம் ஓடிவந்து, “ தாயே! தாங்கள்தாம் என்னைக் காக்க வேண்டும். என் தலைவி என்னைக் கசையடி கொடுக்கப்படுமிடத்துக்கு அனுப்ப எழுதிக்கொடுத்திருக்கும் இச் சீட்டைப் படியுங்கள்” என்று, ஒரு சீட்டைப் புனிதத்துக்குக் காட்டினாள்.

அச் சீட்டினைக் கொண்டுவரும் அடிமைப்பெண்-ணுக்கு இருபது கசையடிகள் கொடுக்குமாறு கசை-யடிச்சாலைத்தலைவனுக்கு நங்கை அதில் பணித்-திருந்தாள். சிறுகுற்றங்கள் செய்யினும் அவற்றுக்-குத் தண்டனையாகக் கசையடி யடிக்குங் கொடிய வழக்கம் அக்காலத்தி லிருந்துவந்தது. அக் கொடுந்-தொழிலைச் செய்தற் கேற்ற கடும்உள்ளத்தவர்களே அந் நிலையங்களில் இருந்தனர். அடி பொறுக்க-மாட்டாது அப் பஞ்சைமக்கள் துடிப்பதைக் கண்டு அப் பாவிகளின் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளும். இத்தகைய மறநிலையங்கள் நாட்டின் பற்பல பாகங்-களில் இருப்பது புனிதத்துக்குத் தெரியும். ஆனல், தன் உடன்பிறந்தானின் மனைவியும் இத் தீயசெய-லுக்கு ஊக்கம் கொடுக்க முன்வந்ததைக் கேட்டு அவள் திடுக்கிட்டாள். பதினெட்டாண்டுகள் நிரம்-பாத ஒரு பேதைப்பெண்ணுக்கு இருபது கசையடி-களா! புனிதத்தால் பொறுக்கமுடியவில்லை. நங்கை-யிடம் விரைந்தோடி அப்பெண்ணை மன்னிக்கு-மாறு மன்ருடினுள்.

“அந்தத் தடிச்சியை மன்னிக்கமுடியாது. இரு-பது கசையடிகளைப் பெற்றுக்கொண்டால் செத்தா-விடுவாள்? மற்ற அடிமைகளுக்கு ஓர் எடுத்துக்-காட்டாயிருக்க அவள் இருபது அடிகள் பெற்றுத்தா-ஞகவேண்டும்,” என்றுகூறி, நங்கை புனிதத்தின் தலையீட்டைத் தள்ளிவிட்டாள். நங்கையின்கீழ் அடிமைகளின் எதிர்காலவாழ்வு எவ்வாறிருக்கும் என்பதற்கு இச் சிறுநிகழ்ச்சி தக்க சான்றன்றோ?

பெண்ணையும் கணவனையும் இழந்த நங்கை தன் பண்ணையையும் அடிமைகளையும் விற்றுவிட்டுத் தன் தந்தைவீட்டுக்குச் சென்றுவிட முடிவுசெய்து அதற்கான ஏற்பாடுகளை விரைவாகச் செய்யத் தொடங்கினாள். தமக்கு வாய்க்கப்போகும் எதிர்காலத்தலைவர்களேனும் கருணையுள்ளம் படைத்தவர்களாக விருக்கமாட்டார்களா என்ற நம்பிக்கையில் நங்கையைவிட்டுச் செல்ல அடிமைகள் சிறிதும் வருந்தவில்லை.

நல்லான் புனிதத்திடம், "அம்மையே! செவ்வேள் எனக்கு விடுதலையளிப்பதாக உறுதி கூறியது உங்களுக்குத் தெரியுமல்லவா? நீங்கள் என்பொருட்டுத் தலைவியிடம் பரிந்துபேசி என்விடுதலையைப் பெற்றுத்தரவேண்டும்" என்று வேண்டினன்.

நல்லான்விடுதலையின் பொருட்டுப் புனிதம் மேற்கொண்ட பெருமுயற்சிகள் யாவும் பயனற்றுப் போயின என்று சுருக்கமாகச் சொல்லிவிடுதலே சாலும்.

"நல்லானுக்கு விடுதலை தர முடியாது. நம் அடிமைகளில் அவனே அதிகவிலை பெறக்கூடியவன். என் கணவரையும் பெண்ணையும் இழந்த யான், என் உடைமைகளையும் இழக்கவேண்டுமா? புனிதம்! நீ என் உரிமையில் இனித் தலையிட வேண்டாம்," என்று நல்லானுக்காகப் பரிந்து பேசிய புனிதத்திடம் சற்றுக்கடுமையாகவே நங்கை கூறிவிட்டாள். அதனேடு, நல்லானும் மற்ற அடிமைகளும் தப்பி யோடிவிடுவார்களோ என்ற

ஞாயத்தால், மறுநாளே அவர்களை விற்றுவிடத் திட்டமிட்டு அவ்வாறே நல்லானையும் மற்ற அடிமை-களையும் அடிமைவிற்பனைக்கிடங்குக்கு அனுப்பி-விட்டாள்.

விற்பனைக்கென அடிமைகளை அடைத்து வைத்திருக்குங் கிடங்குகளை நல்லான் அதற்குமுன் கண்டதேயில்லை. பட்டியில் ஆடுமாடுகளை அடைத்-திருப்பதுபோன்று அடிமைஆண்களையும் பெண்-களையும், சிறுவர் சிறுமிகளையும் குழவிகளையும் அங்கு அடைத்திருந்தனர். வெட்டுகின்றவன் வாளேந்தி நிற்க, பலிபீடத்துக்குமுன் நிறுத்தப்பட்டிருக்கும் பேதைஆடு அடுத்த கணத்தில் தன் உடல் இருகூறு-களாகத் துண்டுபடப்போவதை யுணராது, தன் கழுத்தில் போடப்பட்டிருக்கும் இலைமாலையைக் கடித்து மகிழ்வதுபோல, அங்கிருந்த அடிமைகள் தமக்கு நேரப்போகுங் கதியினை யறியாது, ஆடிக்-கொண்டும், பாடிக்கொண்டும் போதுபோக்கிக்-கொண்டிருந்தனர். நல்லான் தன்பெட்டியுடன் ஒருமூலையில் உட்கார்ந்து மங்கிய வொளியில் திரு-மறையை ஒதிக்கொண்டிருந்தான். நல்லானுக் கருகில் ஒருமுதாட்டியும், பதினெட்டாண்டுள்ள ஒரு பாவை-யும் துன்பமே வடிவாய் அமர்ந்திருந்தனர். அவர்க-ளது தூயஉடையும், பண்பட்டபேச்சும், மற்றை-யோரினின்றும் மாறுபட்ட ஒழுக்கமும், தன்னைப் போல் அவர்களும் மனிதப்பண்புடைய எஜமானர்-களின்கீழ் வாழ்ந்து, தன்னைப்போல் தீயூழ் காரணமாகக் கிடங்கிற்கு விற்பனையின் பொருட்டுக்

கொணரப்பட்டவர்களென்று நல்லானுக்குப் புலப்பட்டது. அவர்கள் இருவரும் ஒருவர்வருத்தத்தை மற்றவர் மாற்ற முயன்றுகொண்டிருந்தனர்.

"அம்மா! என் தொடையில் உன் தலையை வைத்துக்கொண்டு சிறிது பொழுதேனும் உறங்கு. இரவெல்லாம் நீ கண்மூடவில்லையே!" என்றாள் இளையவள்.

"சொக்கி! என் கண் எப்படி மூடும்? நம் வாழ்வில் நாம் கூடியிருக்கும் இறுதிநாள் இதுவே ஆகலாம்."

இந்தச் சொற்களை அம் முதியவள் சொன்னபோது அவள்கன்னங்களிற் கண்ணீர் பாய்ந்தோடியது. அன்று மாலை, அடிமைவணிகன் ஒருவன் சொக்கியைப் பார்த்த பார்வை, பாவம்! அப்போது அவள்நினைவுக்கு வந்ததுபோலும். தான் அருமையாக வளர்த்த அந்த அழகுப்பதுமையின் எதிர்காலம் எவ்வா றிருக்கப்போகின்றதோ! இறைவனைப்பற்றியும் திருமறை யோதுவதுபற்றியும் அவள் சொக்கிக்குப் போதித்தாளே! சொக்கி தன்னைப் பிரிந்தபின்னரும் இறைவழியைப் பின்பற்றி நடப்பாளோ! தன்மகளின் இளமையெழிலைப்பற்றி அவள் எவ்வளவு பெருமையுடனிருந்தாள்! அந்த வனப்பல்லவா இப்போது அவளைத் தன்னிடமிருந்து பிரிக்கும் வாளாக வந்துளது! பாதுகாப்பற்ற எதிர்காலம் இருளடர்ந்ததாகவே கிழவிக்குத் தோன்றியது. உள்ளம் நெகிழ்ந்து இறைவனை வேண்டுவதைத் தவிர, அப்போது வேறுவழி அவளுக்குத்

தெரியவில்லை. இதற்குமுன் எத்தனை யடிமைகள் உள்ளம் உருகி அவனை வேண்டியிருக்கின்றார்கள்! உலகனைத்தும் காதுடைய அவனுக்கு அவர்கள் மொழி கேட்டிராதா!

நீண்ட இரவு ஒருவாறு முடிந்து பொழுது புலர்ந்தது. அடிமைகளின் உரிமைக்காரர்கள் விற்பனையின் பொருட்டுத் தாங்கள் கொணர்ந்துள்ள அடிமைகளைத் தனித்தனியே நிற்குமாறு பணித்தனர். அடிமைகளை ஏலம்விடும் நேரம் அணுகுவதற்கு முன்னரே, வணிகர்கூட்டம் பெருகிவிட்டது. அவ்வணிகர்களிற் சிலர், ஆடுமாடுகளைச் சோதிப்பதுபோல், அடிமைகளை அவர்களது நாக்கை நீட்டச் சொல்லியும், பற்களைக் காட்டச்செய்தும், ஓடவிட்டும், இருவர் இருவராக மற்போ ராற்ற ஏவியும் சோதனை செய்தனர். ஆங்குக் குழுமியிருந்த வணிகர்களில் யாவன் தன் புதிய தலைவனாக வருவானோ என்ற சிந்தனையுடன் நல்லான் ஆங்கு நடந்தவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

நேரம் வரவே ஏலம் தொடங்கிற்று.

வணிகர்கூட்டத்தி லிருந்த வொரு தடியன், அழுக்கு மலிந்த வுடலில் அழுக்குடைகளை யணிந்திருந்த தசைமலையன், ஆரவாரஞ் செய்துகொண்டு நல்லானருகில் வந்து அவனை உற்றுநோக்கினான்; அவன் பற்களைக் காட்டுமாறு பணித்தான்; குதித்துக்காட்டுமாறு ஏவினான்; சட்டையைக் கழற்றச் செய்து அவன்தோளையும் மார்பையும் அளவெடுத்தான். நல்லான் அணிந்திருந்த தூயவுடைகளும்

அவனுடைய அடக்கமான சொற்களும் தன் இயல்புக்கு முற்றிலும் மாறானவைகளாயிருந்த காரணத்தால் தன்னை அவை ஏளனம் செய்வதாக எண்ணிக்கொண்ட அம் முரடன் 'உம்' என்று உறுமிக்கொண்டே நல்லானை ஏலத்தில் விடச்செய்து, யாவரினும் அதிக விலை கொடுத்து அவனைப் பெற்றுக்கொண்டான். அந்த முதியவளை வேறொருவன் ஏலத்தில் எடுத்தான். அதற்கடுத்துச் சொக்கியின் முறை வந்தது.

"ஐயா! என் பெண்ணையும் தாங்களே விலைக்குப் பெற்றுவிடுங்கள்" என்று தன்னை வாங்கிய வணிகனிடம் சொக்கியின் தாய் வேண்டிக்கொண்டாள்.

"உன்பெண்ணை விலைக்கு வாங்க எனக்கும் விருப்பந்தான். ஆனால் இப்போது என்னிடம் போதிய பணமில்லை" என்றான் அவன். அதைக் கேட்ட தாயுள்ளம் துடித்த துடிப்பை எவ்வாறு உரைப்பது! பதைத்தாள்; கெஞ்சினாள்; அலறினாள். இவையாவும் காற்றுடன் கலந்தனவேயல்லாமல், அவற்றைக் கவனிப்பார் அங்கொருவருமில்லை. கடைசியாக நல்லானை விலைக்குப் பெற்ற கடுவனே—அதுதான் அவன் அழகான பெயர்—சொக்கியையும் விலைக்குப் பெற்றுக்கொண்டான்.

அவரவரும் தாம் விலைக்கு வாங்கிய அடிமைகளைச் சங்கிலியால் பிணைத்துத் தத்தம் இடங்களுக்கு இழுத்துச்சென்றனர். இறைவன் பிணைத்த எத்தனையோ அன்புள்ளங்களை—தாயிடமிருந்து சேயை—

கணவனிடமிருந்து மனைவியை—நாகரிக வாழ்வினர் என்று மார்தட்டிக்கொள்ளும் மனிதர்கள் பிரித்து மகிழுங் கொலைக்காட்சி வாடைநாடு, கானல்நாடு, பாலைநாடு போன்ற நாடுகளில் நாடோறும் நிகழ்ந்து வந்தது. ஒருவரை யொருவர் பார்த்து அழுது-கொண்டும் விம்மிக்கொண்டும் இருக்கும்போது சொக்கியும் அவள் தாயும் எதிர்த்திசைகளில் இழுத்-துச் செல்லப்பட்டனர்.

---

17. இருள் உலகம்

சொக்கி, நல்லான், மற்றும் தான் விலைக்கு வாங்கிய அடிமைகள் ஆகியவர்களுடன் கடுவன் அன்று நடுப்பகல் தன் பண்ணையை அடைந்தான். அங்கு அவன் செய்த முதல்வேலை இதுதான்.

நல்லானுடைய பெட்டியை எடுத்துவரச் செய்-தான். அதனுள் இருந்த—நல்லானுக்குச் சொந்த-மான—ஆடைகளைத் தான் எடுத்துக்கொண்டான். பாவை தன் நினைவுச்சின்னமாக நல்லானுக்குக் கொடுத்திருந்தவொரு பொன்னுழியை எடுத்துத் தன் விரலில் அணிந்துகொண்டான். நல்லான் அணிந்-திருந்த வெள்ளுடைகள் இரண்டையும் கழற்றச் செய்து தான் உடுத்துக்கொண்டு, அவற்றுக்குப் பதில் தான் தரித்திருந்த அழுக்கேறிக் கிழிந்து-போன சட்டையையும் அரையாடையையும் கொடுத்-தான். நல்லான்பெட்டியைக் கடுவன் ஆராய்ந்து-வரும்போது திருமறைநூல் அவன் கண்ணில் பட்டது.

"இது என்ன சுவடி?" என்று கடுவன் நல்லானை வினவினன்.

"அது திருமறைநூல்."

"ஓ! நீ இறையன்பு உடையவனா?... உம்... இனி இந்தச் சுவடியைத் திறக்கக்கூடாது. நான்தான் இனிமேல் நீ கும்பிடவேண்டிய இறைவன். என் இல்லம்தான் நீ சுற்றிவர வேண்டிய கோயில். கசையடிகளே யான் உனக் கீயும் வரம். என் வாயினின்று வெளிவருங் கட்டளைகளே மறைமொழிகள். மண்வெட்டி, அரிவாள் போன்றவைகளே உன் பூசைக்கருவிகள். நீ இவ்விடத்தினின்றும் தப்பியோட முயற்சிசெய்தால், அதோ கட்டப்பட்டிருக்கும் இருவேட்டைநாய்களும் நீ எந்த வுலகத்துக்குச் சென்றாலும், உன்னைப் பற்றிக்கொணர்ந்துவிடும். பின்னர் நீ அவைகளுக்கே இரையாவாய்," என்று வெற்றிமிடுக்குடன் எச்சரிக்கை செய்தான்.

"நீ என் உடைமை. என்னை நம்பித் தீமையை எதிர்த்து நில். எதற்கும் அஞ்சாதே," என்று திருமறையில் நல்லான் அடிக்கடி படித்திருந்த மொழிகள் அப்போது நல்லான்நினைவுக்கு வந்தன. ஆயினும், அவன் ஒன்றும் பேசாதிருந்துவிட்டான்.

கடுவன் அடுத்தபடியாகச் சொக்கியை அழைத்துவரச்செய்து, அவளை யெரித்துவிடுபவன்போல் தீக்கனலப் பார்த்தான். அந்தப் பார்வையைக் கண்டு, வெருண்டு சொக்கி பின்செல்ல, "நீ என்னைச் சிரித்துக்கொண்டே பார்க்கவேண்டும். யான்

உன்னை ஏதாவது வினவினால், யாழின் நரம்புகள் ஒலிப்பதுபோல் இனிமையாகப் பேசவேண்டும். இல்லையேல், இதனால் பரிசு கிடைக்கும்'' என்று தன் முட்டியைக் காட்டினான்.

கடுவன் போதித்த இந்த முதல்நாள்பாடத்-துடன் நல்லான், சொக்கி ஆகிய இருவரும் மற்ற அடிமைகளுடன், தங்களுக்கென்று விடப்பட்டிருந்த குடிசைகளுக்குச் சென்றனர்.

---

18. முல்லை

நல்லான் ஒரு பிறவித்தொழிலாளி. தனக்குக் கொடுக்கப்பட்ட எந்த வேலையையும் விரைவாகவும் செம்மையாகவும் விருப்புடன் செய்து முடிப்பான். நல்லானின் தொழிற்றிறமையும் நல்லொழுக்க-மும் கடுவனிடம் அழுக்காற்றை உண்டாக்கின. அதனால் அவன் மிகஇழிவான வேலைகளையெல்லாம் செய்யுமாறு ஏவினான். எந்தத் தொழிலையும் இறைவனுக்குச் செய்யுந் திருப்பணியாகவே மதித்த நல்லான் தாங்கமுடியாத வேலைகளினால் உள்ளம் உடையவில்லை. தீயில் சுடச்சுடத் தங்கம் தூய்மை-யும் ஒளியும் மிகுவதுபோல், நல்லானின் பொறுமை-யும் நற்பண்புகளும் மிகுந்தன. கன்னெஞ்சினனை கடுவனும் நல்லானின் பெருந்தகைமைகளைக் கண்டு உள்ளத்தில் உவந்தானேனும், அதை வெளிக்-காட்டிக்கொள்ள அவன்கயமை இடந்தரவில்லை. நல்லானை நினைத்தாலே கடுவனின் உள்ளத்தில்

மரியாதை கலந்த வோர் அச்சம் எழும். நல்லானை எதிரிட அவனுக்குக் கூச்சம். அதனால் நல்லான் தன்எதிரே வாராதவாறு ஏவிக்கொண்டேயிருப்பான். நல்லான் இளகிய நெஞ்சமுடையவனாயிருப்பது கடுவனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அவனுடைய உள்ளத்தை இறுகச்செய்ய எனனென்னவோ முயற்சிகள் செய்தான். ஒன்றாலும் பயன் உறவில்லை. பதவியை உயர்த்தினாலாவது தன் பண்டைக்குணத்தை மாற்றிக்கொள்ளமாட்டானா என்ற கருத்தில் கடுவன் நல்லானை அடிமைகளின் கண்காணி யாக்கினான்.

கடுவனின் பருத்தித்தோட்டம் பல காணிப் பரப்பு உடையது. காலைமுதல் மாலைவரையில் அடிமைகள் பருத்தியைப் பறித்துக் கூடைகளில் அடைத்து நிரப்பவேண்டும். மாலை வந்ததும், அன்று தாம் பறித்த பருத்தியை எடைபோட்டுக் கண்காணியிடம் சேர்க்கவேண்டும். ஒவ்வோர் அடிமையும் நாளொன்றுக்கு 'இவ்வளவு எடை எடுத்தாகவேண்டும்' என்ற விதி உண்டு. அந்த எடையில் சிறிது குறைந்தாலும், குறைந்தவர் கசையடிகள் பெற்றாகவேண்டும்; இராவுணவு இராஉணவாகிவிடும்.

பருத்தித்தோட்டத்தில் வேலைசெய்து வந்த பெண்களுக்கிடையில், அதுவரையில் தான் பாராத பெண்ணொருத்தி வேலை செய்வதை ஒருநாள் நல்லான் கண்டான். எழிலும் ஒளியு முடைய அவளுக்கு மூப்பதாண்டுகட்குமேல் விராது. மெலிந்து

ஒசியும் அவள்பட்டுடலைச் சுற்றியிருந்த அந்த மெல்லிய ஆடை பூங்கொடியை மூடியிருக்கும் இளந்தளிர்போல் தோன்றியது. ஆனால், இளமையின் எல்லை தாண்டியிராத அவள் முகத்தில் முதுமையின் குறியாகிய கவலைக்கீற்றுக்கள் காணப்பட்டன. வெருண்டவள் போன்று அடிக்கடி அப்புறமும் இப்புறமும் பார்த்துக்கொண்டே பருத்தியைப் பறித்துக் கூடையில் போட்டுக்கொண்டிருந்தாள். இடையிடையே பெருமூச்சு விடுவதும், ஓய்ந்துபோய்க் கீழே உட்காருவதுமா யிருந்த அவள், உடல்நலமின்றி அல்லற்படுகிருளென்பதைக் கண்காணித்துக்கொண்டிருந்த நல்லான் விரைவிற் கண்டுகொண்டான். தான் பறித்துச் சேர்த்திருந்த பருத்தியிலிருந்து சில கைகள் எடுத்து அவள்கூடையில் போட்டான். நல்லான் அவ்வாறு செய்வதைச் சற்றுத் தொலைவிலிருந்து கவனித்துக்கொண்டிருந்த மட்டி என்னும் கடுவன்கையாள்களுள் ஒருவன் விரைந்து அங்கு வந்து அவ் விள நங்கையை எட்டி உதைத்தான். அவ்வளவில் அவள் கீழேவிழுந்து மூர்ச்சையானுள். அத்துடன் சீற்றம் தணியாத அம்முரடன் தன் கையிலிருந்த சாட்டையால் நல்லான் முகத்திலும் முதுகிலும் பலமுறைகள் சாடிவிட்டுக் கறுவிக்கொண்டே அப்பாலேகினன்.

சிறிது நேரங் கழித்து மூர்ச்சை தெளிந்த அவ் விளம்பெண், எழுந்திருக்கமுடியாமல் எழுந்து தன் பழைய வேலையைச் செய்யத்தொடங்கினுள். அப்போது அவளிருந்த மெலிந்த நிலையைக் கண்ட

நல்லான் மீட்டும் அவ ளருகிற் சென்று உதவி செய்ய முயற்சி செய்வதைக் கண்ட அவள்,

" ஐயா ! வேண்டாம். அருள் கூர்ந்து தாங்கள் எனக்கு உதவிசெய்வதை நிறுத்திக்கொள்ளுங்கள். கடுவன் இதை யறிந்தால் தங்கட்குக் கடுந்தண்டனை கொடுப்பான்," என்று நல்லானை வேண்டிக்கொண்டாள்.

" தங்கையே ! எந்தத் தண்டனையையும் என்னுல் தாங்கிக்கொள்ள முடியும். ஆனுல் உன்னுல், உன் உடலிருக்கும் மெலிந்த நிலையில், இவ்வேலையைச் செய்ய முடியாது."

"இந்த இடத்தைப்பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாதுபோலிருக்கிறது. அவரவர் வேலையை அவரவரே செய்துகொள்ள வேண்டும். ஒருவர் மற்றவருக்கு உதவி செய்யக் கூடாது. இங்கு உங்களை நீங்கள் காத்துக்கொள்வதே பெருஞ் செயலாயிற்றே !"

ஒருசெடியின் மறைவிலிருந்து இந்த உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த மட்டி தன் கையிலிருந்த சாட்டையைச் சுழற்றிக்கொண்டும், பற்களை நெறுநெறுவென்று கடித்துக்கொண்டும் மீட்டும் அவளை அடிக்க ஓடினுன்.

" நாயே ! உன் உயிரின்மேல் பற்றில்லையானுல் என்னை நீ மீட்டும் தீண்டு" என்று புற்றினின்று புறப்பட்ட பைந்நாகம்போற் சீறினுள் அவ் வெழிலாள்.

அவள் சொற்களில் வெளிப்பட்ட துணிவும், கண்கள் கக்கிய கனலும் மட்டியைப் பின்னடையச் செய்தன. மண்டையில் அடிவாங்கிய நாய் குரைத்துக்கொண்டோடுவது போன்று, பிதற்றிக்கொண்டே அவ்விடத்தினின்று அகன்றான்.

மாலை வந்தது. அடிமைகள் ஒவ்வொருவராகத் தாம் பறித்துவைத்திருந்த பருத்தியை எடை போடக் கடுவன் முன் வைத்தனர். மட்டியும் அவன் துணைவனான மடையனும் பருத்தியை எடை போட்டு வரும்போது, முல்லை—அதுதான் அப் பூங்கொடியின் பெயர்—தன் பருத்திக்கூடையை எடை போடுவதற்காக முன்வைத்தாள்.

முல்லையைக் கண்ட மட்டிக்குச் சீற்றம் பொங்கியெழவே, "தலைவ! முல்லை எனக்குத் தொல்லை கொடுக்கிறாள். தன்கடமையைச் சரிவரச் செய்வதில்லை. நல்லான் அவளுக்கு உதவி. தான் பறித்து வைத்திருக்கும் பருத்தியிலிருந்து அவளுக்குக் கொடுக்கிறான்" என்று குற்றம் படித்தான்.

"ஓ! அந்தக் கருநாய் நல்லானா? அவன் அங்ஙனம் செய்யக் கூடியவனே! அவர்களிருவருக்கும் என்ன பரிசு தரவேண்டுமென்று எனக்குத் தெரியும். அந்த நல்லானே அந்த நல்லாளுக்கு இந்தச் சாட்டையால் இருபது கசையடிகள் கொடுக்க வேண்டும். அதன் பின்னர் யான் அவனுக்கு அதே பாடத்தைப் படித்துக் காட்டுவேன்" என்று சொல்லிக் கொண்டே கடுவன், நல்லானிடம் ஒரு சாட்டையைக் கொடுத்து, "நல்லான், நீ உன் தலைவன்பால்

அன்புடையையாயின் யான் ஏவுகிறபடி முல்லைக்கு இருபது கசையடிகள் கொடு," என்று பணித்தான்.

"தலைவரே! அந்தப் பணியை ஆற்ற யான் அறியேன். என் வாழ்நாளில் அதனைச் செய்ய யான் பழகிக்கொள்ளவில்லை. மன்னித்தருள்க. வேறு எப்பணி யிட்டாலும் செய்வேன்" என்று நல்லான் பணிவாகப் பகர்ந்தான்.

நல்லானின் பதில் கடுவனின் தலைமையைக் கேலிசெய்வது போல் அவனுக்குப் படவே, "பளீர்" என்று, காது செவிடுபடும்படி நல்லான்கன்னத்தில் ஓர் அறை அறைந்து, "முடியுமா, முடியாதா இப்போது? யாம் ஏவும் எப்பணியையும் நீ செய்துதானாகவேண்டும்" என்று மீட்டும் தன் கட்டளையை விடுத்தான். அந்தப் பேயறையால் நல்லானின் பல் ஒன்று ஒடிந்து குருதி பெருக்கெடுத்தோட அதனைத் துடைத்துக்கொண்டே நல்லான்,

"ஐயா! இரவும் பகலும், என்னுயிருள்ளளவும் தங்களுக்காக யான் உழைக்கக் காத்திருக்கின்றேன். தங்கள்நலனைப் பேணுவதினும் இன்பம் எனக்கு வேறில்லை. ஆனால், இப்போது தாங்கள் ஏவும் பணி நேர்மையற்றது. ஆதலால் அதைச் செய்ய என் உள்ளம் மறுக்கிறது. என் மறுப்பைக் கீழ்ப்படியாமையாகக் கருதாமல், அருள் கூர்ந்து என்னை மன்னித்தருள்க," என்று வேண்டினான்.

நல்லானின் வாயினின்றும் வெளிப்போந்த உண்மையும் உறுதியும் பணிவுங்கொண்ட சொற்கள்

முரடனை கடுவனையும் ஒரு கணநேரம் கல்லாக்கியது. உண்மையின் வீரஎழுச்சிக்குமுன் கோழைத்தனம் மண்டியிடாமல் என் செய்யும்?

உண்மையில் கடுவன் ஒரு பேடி; தன்னைச்சுற்றி நான்குபேராவது நின்றுற்றான் நாயகம் செய்வான்; தனிவீரத்துக்குமுன் "கீச்சுக்கீச்" என்பான். தன் கையாள்களான மட்டியும் மடையனும் தன் அருகில் நிற்பதை நினைவுபடுத்திக்கொண்டு,

"அடா! கருவிலங்கே! நீயா எனக்கு நீதி புகட்டுகிறாய்! யான் ஏவியதைச் செய்வது என் அடிமைக்கு நீதியா, அடிமை புகல்வதை ஏற்பது ஆளுபவனுக்கு நீதியா! அடிமை அறங் கூறத் தலைவன் தாழ்ந்து நிற்பதுதான் நீ கற்ற நீதியா? தன் கடமையில் தவறிய இத் தடிச்சியைத் தண்டிப்பதில் என்ன அநீதி யிருக்கிறது, சொல்" என்று வெகுண்டான்.

"முல்லை உடல்நலங் குன்றிக் கடுங்காய்ச்சலால் தளர்வுற்றிருக்கிறாள். பிறரை யடிக்க என் கை எழாது. தாங்கள் என்னைக் கொன்றாலும் அதனைச் செய்யேன். அவளை அடிக்க ஏவுமுன் என்னைக் கொன்று விடுங்கள்" என்றான் நல்லான்.

நல்லானின் திட்டவட்டமான மொழிகள் கடுவனிடம் எஞ்சியிருந்த நம்பிக்கையையும் சிதறவடித்தன. அறத்தின் அறைகூவலுக்குமுன் வஞ்சனையின் உருட்டல் மாண்டது. நல்லானை அவன்

கொண்ட உறுதியினின்று இம்மியளவும் அசைக்க-வியலாதென்பதை நன்கறிந்துகொண்ட கடுவன்,

"பத்ரோ! உன்னைப் பெற யான் எவ்வளவு பணம் அழுதேன், தெரியுமா? நீ என் உடைமையல்லவா? யான் ஏவியதைச் செய்வது உன் கடமையல்லவா?" என்று கெஞ்சும் பாவனையில் மீண்டும் கேட்டான்.

"அழியும் என் உடலைத்தான் தாங்கள் விலைக்கு வாங்கினீர்கள்; அதற்குத் தாங்கள் உரியவர்களே. அழியும் இவ்வுடலுக்குள் என்றும் அழியாத ஆன்மா ஒன்று உளது. அதைத் தாங்கள் வாங்கவில்லை; தங்க-ளால் வாங்கவும் இயலாது. மாயும் இந்த உடலின் தலைவராகிய தங்களுக்கு யான் பட்ட கடமையினும், மாயாத ஆன்மாவின் தலைவருக்கு யான் பட்டுள்ள கடமை சாலப் பெரிது. இவ் விருகடமைகளையும் பின்பற்றும்போது முரண்பாடு காணுமேல், தெய்வத் தலைவனுக்குரிய கடமையையே பின்பற்ற வேண்டும். அதுவே தருமமும் கருமமு மாகும். அன்றே என் ஆவியையும் உடைமைகளையும் என் ஆண்டவனுக்கு அளித்துவிட்டேன். இந்த உடலைத் தாங்கள் தங்கள் விருப்பப்படி பயன்படுத்திக் கொள்ளலாம்."

தன் தலையை இறக்கிவிட்ட நல்லானிடம் மேலும் பேச அறியானாய்க் கடுவன், மட்டியையும் மடையனை-யும் நோக்கி அவர்கள் கைத்தினவு தீரும் வரையில் நல்லானைப் பார்த்துக்கொள்ளுமாறு பணித்து-விட்டு, தோல்வி வெறுப்புடன் அங்கிருந் தகன்றான்.

———

19. முல்லை யார்?

கசையடிபட்டவிடங்களிலெல்லாம் குருதி பீறிட்டுக்கொண்டு பெருக, விரல்கள்பட்ட இடங்களெல்லாம் வீக்கம் காட்ட, தூசும் புழுதியும் பம்பிய ஒரு குடிசையில், நல்லான் கட்டாந்தரையில் படுத்து முனங்கிக்கொண்டிருந்தான். அவன் உடல் கொல்லுலைபோல் கொதித்தது. அந்த இரவிலும் வெளியே வீசிய அனல்காற்று அவன் வேதனையை மிகுவித்தது. போதாக்குறைக்குக் கொதுகுகளின் கடி வேறு.

நல்லானிடம் மற்ற அடிமைகளுக்கு அன்பும் மரியாதையும் அதிகமுண்டு. எனினும், கடுவனுக்கும், மட்டி, மடையன் ஆகிய இரு கயவர்களுக்கும் அஞ்சி, ஒருவரும் நல்லானைத் தேற்ற அவன் குடிசையை அணுகவில்லை. அந்த முன்னாள் இரவுவரையில், எல்லா அடிமைகளும் நல்லான் குடிசைக்கு முன் வந்து கூடுவார்கள். அவர்களுக்கு அவன் திருமறையிலிருந்து சில பகுதிகளைப் படித்துக்காட்டுவான். சித்தம் சிறிது தெளிந்தவர்களாய், சிந்தனை சிறிது பெற்றவர்களாய், அவர்கள் உளமகிழ்ச்சியோடு தத்தம் குடிசைகளுக்குத் திரும்புவார்கள். நல்லான் அந்த அடிமைகளுக்கு ஒரு ஞானத்தந்தையாக விளங்கினானேயன்றி, வேவு பார்க்கும் வேலைக்காரனாகவோ, கண்ணோட்டம் இல்லாக் கண்காணியாகவோ இல்லை.

மிகுந்த களைப்பினாலும், உள்ளும் புறமும் ஏற்பட்ட வறட்சியினாலும், நல்லானுக்கு நீர்வேட்கை

ஏற்பட்டது. அவனால் எழுந்திருக்கவியலவில்லை; நகரக்கூட முடியவில்லை. அருகிலும் யாருமில்லை.

"ஆண்டவனே! இன்றே என் இறுதிநாளாக இருக்கக்கூடாதா! அப்படி இருந்தால் என் கொள்கைக்காக யான் இறந்தேன் என்ற வெற்றியெண்ணத்துடன் சாவேன்" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு, தரையிற் புரண்டுகொண்டிருந்தான்.

அந்த இருளின் அமைதியில் தன்னை நோக்கி வருங் காலடிச்சத்தம் நல்லான் காதுகளில் விழுந்தது. தன் வேண்டுகோளுக்கிரங்கி மீளாவுலகுக்குத் தன்னை அழைத்துச்செல்ல வருங் காலக்கடவுளின் காலடிச் சத்தமா அது? அல்லது, பஞ்சாய்ப் பறந்து, புழுப்போல் நெளிந்து, அடிமைப்படுகுழியில் உழலும் அடிமைகளுக்கு விடுதலை நல்க வரும் வீரத்தியாகியின் காலடிச்சத்தமா அது? ஒன்றும் புலப்படாத நிலையில், தன்னை நாடிவரும் ஒலியை உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தான்.

"உடம்பு எப்படி இருக்கிறது?" என்று ஒரு குரல் வினவியது. அந்தக் குரலில்தான் எவ்வளவு பரிவும் அன்பும்!

"முதலில் குடிக்க நீர்வேண்டும்" என்றான்.

அருகிலிருந்த தன் குடிசையிலிருந்து ஒரு மண்கலயத்தில் குளிர்ந்த நீரைக் கொண்டுவந்து நல்லான் வாயில் ஊற்றினாள் அவள். மடமடவென்று ஒரு கலத்து நீரையும் பருகினான் நல்லான்.



4381

1148

" நான்தான் முல்லை. இன்று எனக்காகத் தாங்கள் ஏற்றுக்கொண்ட தண்டனை என் உள்ளத்தை உடைத்துவிட்டது. அந்தப் பாவிகள் கண்களில் படாதவாறு இப்போதுதான் வர முடிந்தது. புழுதியில் படுத்துப் புரளவேண்டாம். இதோ, யான் கொண்டுவந்திருக்கும் இந்தப் பாயில் படுத்துக்கொள்ளுங்கள். புண்களுக்கு மருந்தும் கொண்டுவந்திருக்கின்றேன்."

" முல்லை, நீ நல்லை! அந்த மாடத்தி லிருக்கும் விளக்கை ஏற்று. அங்கிருக்கும் என் திருமறைச்சுவடியை எடு. சிறிது படிக்கிறேன். அதிலிருக்கும் அமுதமொழிகள்தாம் என் உடற்புண்ணுக்கும் உளப்புண்ணுக்கும் சிறந்த மருந்து."

முல்லை விளக்கை ஏற்றினாள்; பாயை விரித்தாள்; வைக்கோலால் ஒரு தலையணை செய்து நல்லான் தலைக்கு வைத்தாள். மறுபடியும் தன் குடிசைக்குச் சென்று ஒரு கலயநீர் கொண்டுவந்து நல்லானருகில் வைத்துவிட்டு,

" ஐயா! நீங்கள் இன்று காட்டிய ஆண்மை பாராட்டற்குரியது. உங்கள் சொல்லும் செயலும் நீதிக்கு வரம்பாகும். ஆனால், கடுவன் ஒரு பேய்மகன். பேயிடம் வேதம் படிப்பதனால் பயன் படுமா? அவன் உங்களைவிட உடல்வன்மை யுடையவன். நீங்கள் அவனை எதிர்க்காதீர்கள்" என்று இரக்கக்குரலில் வேண்டினாள்.

" அநீதியை எதிர்க்காமல் என்னால் வாழ இயலாது. நீதிதான் என்வாழ்வின் நங்கூரம்; மூச்சு.

எனக்கு வரும் சோதனைகளில் ஆண்டவன் என்னைக் கைவிடமாட்டான்.”

“ஆண்டவனை நீங்கள் அழைப்பது பேதைமை; அடிமைகளின் அலறல்களைக் கேட்க அவனுக்குச் செவிகளில்லை. அடிக்கடி அவனைக் கூவியழைக்கும் நாம் தாம் இறுதியில் மடிகிறோம். அவனைச் சிறிதும் சிந்திக்காத அந்தச் செல்வர்கள் நாளும் கொழுக்கிறார்கள்.”

“முல்லை! நீயா இங்ஙனம் பேசுகிறாய்! ஆம்... நீதான் பேசுகிறாய். தாங்கமுடியாத துன்பச்சுமை உன் உள்ளத்தை உடைத்துவிட்டது; இரக்கம் என்பதே அறியாத மனிதவிலங்குகளுடன் பல்லாண்டுகளாகப் பழகி அவர்களது கொடுமைகளுக்கு நீ ஆளானதனால், நம்பிக்கையொளி உன் உள்ளத்தில் அணைந்துவிட்டது. பட்டை தீட்டத் தீட்டத்தான் மாணிக்கம் சுடரும்; கனிவுப்பருவத்தை நாம் அடைந்தவுடன் கடவுளின் கருணை பிறக்கும்.”

“அந்தக் கனிவுப்பருவத்தைக் காண்பதற்குள் இந்தப் பாவிகள் கையில் நாம் சாகவேண்டியதுதான். என் வரலாற்றினைச் சுருங்கச் சொல்லுகின்றேன். அதிலிருந்து என் வெறுப்புக்குக் காரணத்தை ஒருவாறு நீங்கள் தெரிந்துகொள்ளலாம். உயரொழுக்கமும் இறையன்பும் மிக்க பெற்றோர்களுக்குத்தான் யான் பெண்ணாய்ப் பிறந்தேன். அடிமைகளாயினும், யான் செல்வத்தின் மடியில் சிறப்பாகத் தவழ்ந்தேன். வாழ்வின் வளங்களெல்லாம் என் காலடியிற் கிடந்தன. உயர்ந்த மக்கள்

படிக்கும் பள்ளியில் யான் கல்விபயின்றேன்; இசை கற்றேன். இன்பவானில் பறந்துகொண்டிருந்த என்னைத் திடீரென ஏற்பட்ட என் தந்தையின் மரணம், சேறும் சகதியும், காடும் மேடும், தூரும் புதரும் நிரம்பிய இத்தரையில் தள்ளியது. அதேபொழுது கருணைவள்ளலான எம் தலைவருக்கு ஏற்பட்ட நட்டங்கள் என்னையும் என் அன்னையையும் வேறொருவனுக்கு விற்கச்செய்தன. அந்தப் புதுத்தலைவர் என்னைமட்டும் வைத்துக்கொண்டு என் அன்னையை வேறொருவருக்கு விற்றுவிட்டார். அவரது பண்ணையில் யானிருந்தபோது, என்பால் அன்புகாட்டிய ஒருவரை யான் மணந்து அவருடன் வாழ்ந்து வருகையில், எங்கள் வாழ்வை மலர்விக்க ஓர் ஆண்மகவும், அதற்கடுத்தாற்போல் ஒரு பெண் மகவும் தோன்றின. நான்கு ஆண்டுகளும், மூன்று ஆண்டுகளும் நிரம்பப்பெறுமுன், பெற்ற அன்னை அலற, தந்தை துடிக்க, பிள்ளைக்கனியமுதின் இன்சுவையறியாத அப் பாவி, என் இரு குழந்தைகளையும் விற்றுவிட்டான். அப்போது யானும் என் கணவரும் விட்ட கண்ணீரைக் கண்டு கடவுளும் உள்ளம் கரைந்திருப்பார். பின்னும் ஈராண்டுகட்குப் பிறகு எனக்குப் பிறந்த வேறோர் ஆண்குழந்தையை, அடிமைகளின் எண்ணிக்கையில் ஒரெண்ணை அதிகப் படுத்த விரும்பாத யான், யான் பெற்ற செல்வம் பிறரால் சிதைக்கப்படுவதைச் சகியாத யான், அவனைப் பெற்றெடுத்து எந்தக் கைகளினுல் தாலாட்டிப் பாலூட்டிச் சீராட்டிப் பேணினேனே அந்தக் கைகளினுல் அமரவுலகுக் கனுப்பிவிட்டேன்.

இக்கொடுஞ்செயலைச் செய்த யான், அன்னை என்ற புனிதச் சொல்லால் அழைக்கத்தக்கவளா என்று நீங்கள் வினவலாம். கரைகாணாத துன்பக்கடலில் மூழ்கித் தினம்தினம் மடிவதைப்போன்று வேதனைகள் தாங்கும் நிலையி லிருந்துகொண்டு சிறுதுசிறி-தாக உயிர் தேய்ந்துதேய்ந்து அழிவதினும், அரை-நொடிப்பொழுதில் அனைத்துவித அல்லல்களுக்கும் விடுதலை யீவது அன்பின் செயலல்லாமல் வேறென்? என்னிலையில் எந்தத் தாய் இருந்தாலும், யான் செய்ததனையேதான் செய்திருப்பாள். கொலைகாரி யென்று என்னை மதிப்பிட்டுக் குறைகூற வரும் இந்த நாகரிகச் சமூகம் அடிமைவாணிகத்தின்பேரால் பச்சைக்குழந்தைகட்கு இழைக்கப்படுங் கொடுமை-களைப் போக்க என்ன வழிகள் வகுத்துளது? பதில் கூற அதற்கு வாயேது? 'விதி' என்று கூறித் தப்பித்துக்கொள்ளப் பார்க்கும். அடிமைப்பட எங்களுக் கிருக்கும் விதி, யாங்கள் பெற்ற மக்களைக் கொல்லுங்காலத்தில்மட்டும் விலகிவிடுமா? ஆண்ட-வனுக்குக் கொரு விதி, அடிமைக் கொரு விதியா? அந்தச் செயலை—அது அறச் செயலா, மறச்-செயலா?—யான் செய்தபோது, யான் அடைந்த வேதனையையும், அழுத அழுகையையும், சொரிந்த கண்ணீரையும் யாரேனும் கண்டிருப்பின், அதனைத் தியாகத்தின் சிகரம் என்றே பாராட்டியிருப்பார்கள்.

இந்த நிகழ்ச்சி நடந்து ஓராண்டு முடிவதற்குள் என் தலைவன் இறக்க, அவன் மனைவி என்னையும் என் கணவரையும் பிரித்து, என் கணவரை ஒருவணிக-ருக்கும் என்னை இக் கொடும்பாவி கடுவனுக்கும்

விற்றுவிட்டாள். கண்ணீரில் வளர்ந்த என் சோக வரலாறு இது !"

முல்லையின் கண்ணீர்வரலாறு நல்லானை அவனது மரணத்துன்பங்களையும் மறக்கச்செய்தது.

" முல்லை, சுயநலமக்களின் அகராதியில்மட்டும் எழுதப்பட்டுள்ள 'அடிமை' என்ற சொல் உண்மையில் இறைவன்படைப்பிலில்லை. கோழை எவனோ, அவன்தான் உண்மையில் அடிமை; ஆண்மையுடையவனே ஆண்டவன். வாழ்வில் யான் கண்டவுண்மை இதுதான். இறைவன் கருணையை வேண்டிக் கண்ணீர் விடு. விரைவில் விடுதலை கிட்டும்," என்று சொல்லிக்கொண்டே மேலும் நல்லான் பேசத் தொடங்குகையில், பேச அவன் படும் பாட்டைக் கண்ட முல்லை,

'ஐயா! நீங்கள் மிகவும் களைத்திருக்கின்றீர்கள். சிறிது கண்ணயருங்கள். யான் பின்னர் வருகின்றேன்," என்று கூறி விடைபெற்றாள்.

---

20. விடுதலை

சின்னனும் எழிலியும் தங்கியிருந்த 'நண்பர்கள்-நிலைய'த்தின் கிளையில்லத்திலின்று தென்றல்நாடு வெகு அண்மையிலிருந்தது. அடிமைகள் துன்புறும் அடிமைநாடுகட்கும் விடுதலை பெற்ற சுதந்திரமக்கள் வாழும் தென்றல்நாட்டுக்கும் இடையே பன்னீர்-ஏரியிருந்தது. ஏரியென்ற பெயரால் அது வழங்கப்-

பெற்றாலும், அளவில் பன்னீர் ஏரியினை ஒரு சிறு கடல் என்றே கூற வேண்டும். பன்னீர் ஏரியின் வடபால் தென்றல்நாடு; தென்பால் அடிமைநாடுகள். இவ் விருநிலப் பகுதிகளையும் நீர் பிரித்திருந்தும், கப்பல்போக்குவரத்து பிணைத்திருந்தது. சுதந்திர-மக்கள்தாம் ஒரு பகுதியினின்று மற்றோர் பகுதிக்கு எவ்விதத் தடையுமின்றிச் செல்லலாமேயன்றி, அடிமைகள் விடுதலைமுறியும் அடையாளச்சீட்டும் இன்றிச் செல்ல இயலாது.

நண்பர்கள்விளையில்லத்தில் தங்கிய அகதிகள் ஐவரும், புனைவேடத்தில், இருகூறுகளாகப் பிரிந்து, பன்னீர் ஏரியைக் கடக்கத் திட்டம் வகுக்கப்பெற்றது. சின்னான், எழிலி, அமுதன் ஒருகூறு; மூதாட்டியும் அவள்மகனும் வேறுகூறு. தென்றல்நாட்டுக்குச் செல்லும் மாதினியார் என்ற பெயருடைய செல்வச் சீமாட்டி ஒருத்தியுடன் சின்னான்குடும்பம் கப்பலேற வேண்டுமென்பது ஏற்பாடு. இரண்டு நாட்கள் முயற்சியின் விளைவாக அமுதன் சீமாட்டியின் பெண்ணாகவும், தலைமயிர் கத்தரிக்கப்பெற்ற எழிலி ஓர் இளைஞனாகவும், சின்னான் தளர்ந்தவொரு முதியவனாகவும் மாற்றப்பெற்றனர்.

"எழிலி! விடுதலையலைகள் இப்போது நம் கால்-களில் மோதுகின்றன. ஒருகால் நாம் எதிரிக-ளால் பிடிக்கப்படுவோமெனின், அதன் பின்னர் என்னால் உயிர் வாழ முடியாது," என்றான் சின்னான்.

"அஞ்சற்க; இதுகாறும் துணைசெய்த திரு-வருள் இனியும் நமக்குத் துணை செய்யும். என்னுள் இருந்து ஒரு பெரும் ஆற்றல் என்னை இயக்குவதை யான் நன்குணர்கிறேன். இன்று மாலைக்குள் நாம் சுதந்திரமக்க ளாவோம்" என்று உறுதி கூறினள் எழிலி.

"எழிலி! உன் மேற்சட்டைகளையும், மீசையை-யும் தலைப்பாகையையும் பார்த்தால், ஒரு கட்டிளங் காளைக்கு எடுத்துக்காட்டாய் நீ காணப்படுகிறாய்" என்று சின்னன் சிரித்துக்கொண்டே எழிலியின் புனைவேடத்தைப் புகழ்ந்தான்.

அப்போது அங்கு வந்த மாதினியார், ஓர் இளம் பெண், ஒரு கட்டிளையன், ஒரு சிறு ஆண்குழந்தை ஆகிய மூவர்கொண்ட ஒரு குழுவினைக் கப்பலில் ஏறவிடக்கூடாதென்று துறைமுகக் காவலாளர்-களுக்குக் கட்டளை வந்துளதாகக் கேள்விப்படுகின்-றேன்" என்றார்.

"இந்த மாறுவேடத்தில் நம்மைக் கண்டறிய நம்மைப் படைத்தோனல்கூட இயலாதே!" என்று தன் உறுதி புலப்படப் புகன்றான் சின்னன்.

புறப்பட வேண்டிய வேளை வந்ததும் நால்வரும் துறைமுகத்தை யடைந்தனர். மாதினியார், தென்றல்-நாட்டுக்குச் செல்ல நால்வருக்கும் பயண உரிமைச் சீட்டுக்களை வாங்கினர். பெண்ணுக்கிய அமுதனைக் கைகளில் தாங்கிக்கொண்டு முன்னே மாதினியார் செல்ல, தடியூன்றித் தள்ளாடித் தள்ளாடி வரும்

சின்னான் பிறவனை எழிலி இளைருன் கைபிடித்து அழைத்துப்போக, சாமான்களைச் சுமந்த கூலிகள் இருமருங்கும் அணைந்து வர, எந்த விதமான ஐயப்பாட்டுக்கும் இடமின்றி நால்வரும் கப்பலில் ஏறிக்கொண்டனர். கப்பல் புறப்படும்வரையில் சின்னான், எழிலி ஆகிய இருவரது உடல்களிலும் உயிரே யில்லை; கையில் வந்தது வாயினுட் புகாமற் போய்விடுமோ என்ற ஐயம் ஒரு கணம்; அகப்பட்டுக்கொண்டால் தங்கள் எதிர்கால வாழ்வு யாதாய் முடியும் என்ற அச்சம் மற்றொருகணம்; தங்கள் முயற்சி வெற்றிபெற்றால் எவ்வளவு இன்பம் தங்களை வரவேற்று நிற்கும் என்ற எண்ணம் வேறு கணம்; இத்தகைய எண்ணச்சுழல்கட் கிடையே உழன்றுகொண்டிருந்த அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் கப்பலும் குறித்தநேரத்தில் புறப்பட்டது.

தென்றல்நாட்டின் கரையைக் கப்பல் நெருங்க நெருங்க எழிலி, சின்னான் ஆகிய இருவரது உள்ளங்களிலும் அடிமைஉணர்ச்சி குன்றிக்குன்றி மறைய, அவர்கள் தாண்டிச்செல்லும் நீரின் அலைகள்போல் விடுதலைஉணர்வுடன் கூடிய இன்பஅலைகள் ஓங்கி வீசின. தென்றல்நாட்டின் துறைமுகத்தில் கப்பல் நின்றபோதுதான் கணவன், மனைவி ஆகிய இருவர்உள்ளங்களிலும் ஐயவுணர்வு அடியுடன் நீங்கியது; மகிழ்ச்சியுணர்ச்சி நிரம்பியது. கப்பலினின்றும் இறங்கியவுடன் சின்னானும் எழிலியும் ஆற்றிய முதற்பணி தங்களைக் காத்தருளிய இறைவனுக்கு நன்றி செலுத்தியதே.

நால்வரும் ஒரு வண்டியி லேறிக்கொண்டு மாநி-னியார் இல்லத்துக் கேகினர். விருந்தோம்பலின் உயர்வினை நன்குணர்ந்திருந்த மாநினியாரின் இல்லத்தில் முன்னாள் அடிமைகள் மூவரும் சில பகல் தங்கியிருந்து, தங்கள் எதிர்காலவாழ்வுக்கு வழி-கோலும் முயற்சியில் ஈடுபட்டனர். வானில் பறக்கும் தடையற்ற பறவைகளும், தம் இச்சைப்படி கானில் மலர்ந்து கமழும் மலர்களுமே இனிமேல் சின்னான் குடும்பத்துக்கு நிகராகும்.

---

21. இன்பத்தின் தோற்றம்

கடுவனின் கொடுந்தண்டனைகளுக்கு இலக்-கானபோது, தன் இறுதிநாள் வெகு அண்மையில் இருப்பது நல்லானுக்குத் தெற்றெனப் புலப்பட்டது. பொய்க்கூட்டினின்றும் விடுதலை பெற்று, மெய்-யின்ப முற்று இறைவன் திருமுன் தான் செல்லப் போவதை நினைத்து மட்டிலா மகிழ்வு எய்தினான்.

ஆனல் ?

ஆனல் என்ன ?......நல்லான் எதிர்பார்த்ததற்கு மாறாக முல்லையின் இன்பமொழிகளும், பேணிப்பும் அவன் உளப்புண்களையும் உடற்புண்களையும் ஆற்ற-வே ஒருவாறு தேறினன். எவ்வாற்ருனும் நல்லானை மடக்கி ஒடுக்கிவிட உறுதிகொண்ட கடுவன், நல்லான் முழுக்குணம் அடைவதற்குமுன், கடும் பணிகளை ஆற்றுமாறு ஏவினன் ; முன்னையினும் அதிகமான கண்காணிப்புக்கு நல்லானை உட்படுத்-

றினன். கற்பனைக்குற்றங்கட்காக நல்லான்மீது வசைமாரிகள் பொழிந்தான். இக்கொடுமைகளுக்கு ஈடு கொடுக்கமாட்டாமல் நல்லானின் உள்ளமும் உடலும் மீட்டும் தளர்வுறலாயின. குன்றை அசைத்தாலும் அசைக்கலாம்; ஆனால் இறைவன்பால் நல்லான் கொண்டிருந்த நம்பிக்கையை அசைக்கமுடியாது. அத்தகைய நம்பிக்கையும் ஒருகணம் இப்போது நல்லானிடம் தளரப் பார்த்தது. தான் தன்மனைவிக்கு எழுதிய கடிதம் அவள்பாற் சேர்ந்திருந்தால், முழுமதியம்மை தன் வாக்கின்படி தன் மகனை அனுப்பி, அதற்குள் தன் விடுதலையைப் பெற்றிருத்தல் கூடும். அது நிகழவில்லை. தன்னைச் சூழ்ந்துள்ள காரிருளில் தான் தினமும் ஆழ்ந்து வருவதாக நல்லான் எண்ணினன். ஆண்டவ னருள் தன்னை அகற்றிவிட்டதோ! அநீதியும் கொடுமையும்தான் உலகினை ஆளவேண்டுமோ! அருள், அன்பு என்னும் மொழிகள் வெறும் கற்பனைமொழிகள்தாமோ? என்ற ஐயங்கள் அவன்உள்ளத்தில் அடிக்கடி எழுந்து மறைந்தன. கொடுமையின் ஆற்றல் அத்தகையது.

நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கு மிடையே ஊசலாடிக்கொண்டிருந்த நல்லான் ஒருநாள் மாலை தன் குடிசையில், விளக்கருகில் அமர்ந்து திருமறை யோதிக்கொண்டிருக்குங்கால், கடுவன் அங்கு வந்து,

“நல்லான், நீ போற்றும் இறைவன் இது வரையில் உன்னைக் காக்க வரவில்லையானல், இனியும் வாரான். கடவுள்என்பதும் கருணைஎன்பதும்

வெறும் கற்பனை. உன் கையி லிருக்கும் அந்தச் சுவடியைத் தீயி லெறிந்துவிட்டு யான் ஏவிய பணிகளைச் செய். உன்னை என்நம்பிக்கைக் குரிய பணிமக்கள் அனைவருக்கும் தலைவ னாக்குகிறேன். இப்பண்ணை நல்கும் எல்லாவித இன்பங்களையும் என்னைப்போல் நீயும் நுகரலாம். உன் கண்ணோட்டத்துக்கு எத்தனையோபேர்கள் காத்துநிற்கச் செய்வேன். உன்னை ஏற்றவும் இறக்கவும் வல்ல இறைவன் யானே என்பதனை அறி" என்றான்.

கடுவனின் செருக்கு மொழிகள் அதுகாறும் ஓய்ந்துகிடந்த நல்லானின் உள்ளத்தைச் சவுக்கடி கொடுத்து எழுப்பின.

"ஐயா! ஒருகால் இறைவன் என்னை மறந்தாலும், யான் அவனை மறக்க வியலாது. கடவுளும் கருணையும் கற்பனை யாயின், அவைபோன்றே இன்பமும் துன்பமும் மனத்தின் கற்பனைகளே. நீங்கள் நல்வாழ்வு வாழ்வதாக நினைப்பதும், நான் அல்வாழ்வில் தாழ்வதாக நினைப்பதும் அந்த உள்ளத்தின் கற்பனைகளேயன்றி வேறில்லை. அப்படி யில்லையாயின், உங்களுக்கு இன்பம் பயப்பவை எனக்கும் அல்லவா இன்பம் பயக்கவேண்டும்? உங்களுக்குத் துன்பம் தருவன எனக்கும் துன்பம் தரவேண்டுமன்றோ."

"நல்லான்! நீ ஒரு பேதை; தானும் அறியாது, சொன்னாலும் கேளாத மூடன். உனக்கு முன்னையினும் அழுத்தமாகப் பாடம் கற்பிக்கவேண்டியிருக்கிறது," என்று கடுவன் சீறிக்கொண்டே,

செருப் பணிந்திருந்த தன்காலால் நல்லானை உதைத்துத் தரைமீது சாய்த்துவிட்டு வெறுப்புடன் அப்பாற் சென்றான்.

தன்னையும் மீறி அன்றுபகலெல்லாம் உழைத்த உழைப்பாலும், கடுவனின் கொடுமொழிகளாலும் மெலிந்துகிடந்த நல்லான் அப்போது தரைமீது சாய்ந்தான். உறக்கம் அவன்கண்களை இறுக மூடியது. விண்கொளா விரியொளியி னிடையே, கண்கொளாக் கவின் நிறைந்த வோர்அற்புதன் அவன்கனவில் தோன்றினான். அற்புதனின் தோளில் ஒருபுனிற்றிளம் ஆன்கன்று வீற்றிருந்தது. மண்டலஞ் சுடருந் திங்கள்வதனமும், குண்டலம் சுடரும் காதுகளும், குறுநகைப்பவளவாயும், கருணை பொழியுங் கண்களும் அவ்வற்புதனுக்கு அங்கங்களாயிருந்தன. 'வருக' என்று வலக்கரம் அழைக்க, 'அஞ்சல்' என்று இடக்கரம் காட்ட, தன்முன் காட்சியளிக்கும் அத் தெய்வவடிவினைத்தான், நல்லான் காண விழைந்தான்; அதற்கெனவே உயிர்வாழ்ந்தான். அன்பே தகளியாக, ஆர்வமே நெய்யாக, இன்புருகு சிந்தை இடுதிரியாக, ஞானச்சுடர்விளக்கு ஏற்றி நாளும் தவம்புரிந்த நல்லானுக்கு அன்றோ தவம் பலித்தது.

"அப்பா! வரலாமோ உன்திருமுன்?" என்று தன் இருகைகளையும் நீட்டிகொண்டே உறக்கத்தினின்றும் எழுந்த நல்லான் 'தொப்' என்று கீழே விழுந்தான். விழுந்தபோது அவன்கண்கள் விழித்தன. அவ்வளவில் அவன் கண்ட தெய்விகக்

காட்சி மறைந்தது. ஆனாலும், அவன் அந்நாள்வரையில் நுகர்ந்திராத வோர்அமைதி அவன்உள்ளத்தை நிறைத்தது. இன்பவுலக வாயிலின் இறுதிப்படியில் தான் காலை வைத்துவிட்ட வுறுதி அவனுக்கேற்பட்டது. அவன்சொற்களில் அன்றுமுதல் என்றுமில்லா வோர் அழுத்தமும் வேகமும் மிளிர்ந்தன; முகத்தில் இறையொளி சுடர்கான்றது; எந்தத்தீமையையும் எதிர்த்துநிற்கும் ஆற்றல் முன்னிலும் அதிகப்பட்டது. திருமறையை அடிக்கடி யோதினன்; மகிழ்ச்சிக்கண்ணீர் சொரிந்தான். நல்லானை வதைக்கக் கடுவன் வகுக்குந் திட்டங்கள் அதிகப்பட அதிகப்பட, நல்லானின் ஆட்டங்களும் பாட்டங்களும் அதிகப்பட்டன. தன் வசைமொழிகளும் கசையடிகளும் நல்லானிடம் தோல்வி யுற்றதைக் கண்ட கடுவன் தனக்கும் அவனுக்கும் இடையே, கண்ணுக்குப் புலனகாத, எஃகினும் வலிய, தடை யொன் றிருப்பதைப் பைய வுணர்ந்தான். நல்லானை யாது செய்வதென்பதே கடுவனின் இன்றைய வினு.

ஒருநாள் நள்ளிரவு. நல்லான் உறங்காமல் கண்விழித்துக்கொண்டிருந்தான். அப்போது தன்னை நோக்கிவருங் காலடிச்சத்தம் அவன்காதுகளில் விழுந்தது. படுக்கையினின்று எழுந்து உட்கார்ந்தான்.

“ஐயா! நல்லவரே! நீங்கள் விரும்பினல் இன்றிரவே — இல்லை — இப்பொழுதே — உங்களுக்கு

விடுதலை கிட்டும். மயக்கமருந்து கொடுத்துக் கடுவனை யான் அவன் அறையில் கிடத்திவிட்டு வந்திருக்கின்றேன். தன் அறிவு இழந்து அவன் இப்போது படுக்கையில் சாய்ந்துகிடக்கிறான். அவன் படுக்கையறையும் திறந்து கிடக்கிறது. இதோ! கத்தி கொணர்ந்திருக்கிறேன். யானே அந்த மூர்க்கனை முடித்துவிடலாமென்று முதலில் நினைத்தேன். என்ன விருந்தாலும் யானொரு பெண்தானே. அதற்கு வேண்டிய ஆண்மை வரவில்லை. ஆதலால் உங்களைத் தேடி வந்தேன். தீமையை அகற்றுவது கடமை. விரைவி லெழுந்துவந்து அப் பாவிக்கு விடுதலை யளியுங்கள். பலஉயிர்கள் உங்களை வாழ்த்தும்" என்றாள் முல்லை. அந்த நள்ளிரவில் அங்கு வந்தவள் அவள்தான்.

"முல்லை, நீ சொல்வது தவறு. தீமையினின்று ஒருநாளும் நன்மை பிறக்காது."

"உங்களுக்கு அதனைச் செய்ய உரமில்லையானால், யானே அதனைச் செய்துமுடிக்கின்றேன். என் உயிரைப்பற்றி எனக்குக் கவலையில்லை. என்னால் பிறரேனும் நன்மை பெறட்டும்" என்று கூறிக்கொண்டே அங்கிருந்து புறப்பட எழுந்த முல்லையை நல்லான் தடுத்து,

"சகோதரி! இறைவன் தீயோர்களால் தானும் துன்புறுத்தப்படுவதை விரும்பினான்; இன்றும் விரும்புகிறான். நீயும் பிறருக்காகத் துன்பத்தை ஏற்றுக்கொள்; ஆனால் பிறரைத் துன்புறுத்தாதே. அந்த நிலையில்தான் வெற்றி யுளது. விரும்பினால்

நீயும் சொக்கியும் இவ்விடத்தினின்று தப்பியோடி-விடுங்கள். அதற்கு வேண்டுமானால் யான் துணை செய்கிறேன்" என்றான்.

சிறிது சிந்தனை செய்தாள் முல்லை. கடுவன் தங்களை வேட்டையாடி, எவ்வாறேனும் மீட்டுவிடக்-கூடும் என்று முதலில் அதனை மேற்கொள்ளத் தயங்கினாள். அடுத்தபடியாக அதற்கு மாறான எண்ணம் உதித்தது. வெற்றி பெற்றால் விடுதலை; இன்பச் சுதந்திரம். விடுதலைநாதம் முல்லையின் உள்ளத்தில் ஒருகணம் மீட்டியது.

"முயற்சி செய்கிறேன்" என்றாள் முல்லை.

"இறைவன் அருள் உண்டு" என்று ஆசி கூறி அனுப்பினான் நல்லான்.

---

22. தியாக சிகரம்

கடுவன்தான் பேடியாயிற்றே. தனியே இருட்டில் செல்ல அவனுக்கு அச்சம். பலசாலியான ஒருவனிடம் தனிமையில் பேசப் பேரச்சம். பேய் பிசாசுகளின் கதைகளை அவன்முன் சொன்னால் போதும். அவன் உயிரே போய்விடும். அவன் பணிப்பெண்ணான முல்லைக்கு அவன்கோழைத்தனம் நன்கு தெரியும்.

கடுவன்படுக்கையறைக்கு மேலே ஒரு பெரிய பரண் இருந்தது. பயன்படாத பொருள்கள்

அங்குப் போடப்பட்டிருந்தன. பல்லாண்டுகளாக அதனுட் சென்று பார்த்தவர்கள் யாருமில்லை. ஒரு சமயம் ஓர் அடிமைப்பெண் அப்பரணிலிருந்து தவறிவிழுந்து மாண்டுவிட்டாள். இந்த ரகசியம் முல்லைக்கும் கடுவனுக்கும்தான் தெரியும். இறந்தவளுடைய ஆவி பேய்வடிவில் அப் பரணில் வசித்துவருவதாகச் சொல்லி, முல்லை கடுவனைச் சிலவேளைகளில் பணியவைத்ததுண்டு. இடையே சிலநாட்களாகப் பேயைப்பற்றிய பேச்சை முல்லை நிறுத்தியிருந்தாள். இப்போது அந்தப் பேச்சைத் தந்திரமாக நுழைத்துத் தன் விடுதலைக்கு வழிகோலக் காலம் கருதியிருந்தாள்.

இடையில் ஒருநாள் கடுவன் வெளியூருக்குச் சென்றிருந்தான். அப்போது முல்லை ஒருவரும் அறியாமல் அவன் படுக்கையறையின் கதவினை மாறுசாவி போட்டுத் திறந்து உள்ளே சென்று பரண்மீ தேறி, சுவரில் ஓர் ஓட்டை செய்து, கழுத்துக்குறுகலான கண்ணாடிப்புட்டி யொன்றினை யெடுத்து அதன் அடிப்பாகத்தை உடைத்துக் குழாய்போல அதனைச் செய்து அந்த ஓட்டைக்குச் சமமாகப்பொருத்திவிட்டுக் கீழே யிறங்கிவந்து, அறையிலுள் இருந்த பொருள்களையெல்லாம் தாறுமாறாக எறிந்துவிட்டு, முன்போல் அறைக்கதவினைப் பூட்டிக்கொண்டு சென்றுவிட்டாள்.

ஊரினின்று மீண்ட கடுவன் தன் அறையினுட் சென்று பார்த்தபோது, பொருள்கள் தாறுமாறாகக் கிடப்பதைக் கண்டும், பரணிலிருந்து ஒருவிதமான

ஓசை விடாமல் தொடர்ந்து ஒலிப்பதைக் கேட்டும் அஞ்சி, பணிப்பெண்ணான முல்லையை யழைத்துக் காரணத்தை வினவினான்.

"ஒருகால், இது அந்தப் பழைய பேயின் திருவிளையாடல்களாக விருக்கலாம். இந்நாள்வரையில் கேட்கப்படாதிருந்த இவ்வொலி வஞ்சம் தீர்க்க விரும்பும் அப் பெண்பேயின் உறுமலாகத்தான் இருக்கவேண்டும்" என்று கூறி, தானும் பெரிதும் அஞ்சுகின்றவள்போல் முல்லை நடித்தாள். குறுகலான வாயினைக் கொண்ட வொருகுழாயின் வழியாகக் காற்று வேகமாக வரும்போது அவ்விதமான வொலி எழும் என்பதை யறியாத மூடனான கடுவன் முல்லை கூறியன உண்மை யென்றே நம்பிவிட்டான். அதனால் அன்றுமுதல் அவ்வறையில் படுப்பதை விட்டான்; தன் பொருள்களை அவ்வறையினின்றும் அகற்றி வேறோர் அறையில் வைத்துக்கொண்டான்.

சிறிது சிறிதாகப் பரண்மே லிருக்கும் பிசாசினைப்பற்றி, முல்லை, வீட்டிலுள்ள எல்லா அடிமைகளுக்கும் சொல்லி, யாரும் அவ்வறையை அணுகாவாறு செய்துவிட்டாள்.

சிலநாட்களாக முல்லை வீட்டிலுள்ளார் எழுந்திருக்குமுன் படுக்கையைவிட்டு எழுந்திருப்பாள். பலநாட்களுக்கு உதவக்கூடியஅளவு உணவு, உடைகள், பணம் முதலியவற்றைச் சிறிது சிறிதாகப் பரண்மேல் வைத்துவிட்டுக் கீழே இறங்கிவிடுவாள்.

திட்டத்தை நிறைவேற்றும் நாள் வந்தது. அன்று முழுதும் முல்லையும் சொக்கியும் கடுவன் ஐயப்படாவாறு, அவன் கண்களில் பட இங்குமங்கும் செல்வதும் பல்வேறு வேலைகளைச் செய்வதுமாயிருந்தனர். முன்னரே செய்யப்பட்டிருந்த ஏற்பாட்டின் படி, வெளியூருக்குச் சென்ற கடுவனுடன் மட்டியும் மடையனும் சென்றனர். வாய்த்த சமயத்தை நழுவவிடாமல் முல்லையும் சொக்கியும் இரு கூடைகளைத் தலையில் வைத்துக்கொண்டு, பருத்திக்காட்டுக்குச் செல்பவர்கள்போல் பாவனை காட்டி நன்கு இருட்டியபிறகு வீட்டுக்கு மீண்டு, பரண்மீ தேறிப் பதுங்கிக்கொண்டனர். அன்றிரவே அவர்களிருவரும் தப்பியோடியிருக்கலாம். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யாததற்குக் காரணம் தாங்கள் தப்பியதை யறிந்தவுடனே, கடுவன் பல பக்கங்கட்கும் தன் ஆட்களை யனுப்பித் தேடச்செய்யின் தாங்கள் அகப்பட்டுக்கொள்ளக்கூடும் என்ற அச்சம்தான்; தப்பியபின் சிலநாட்கள் இடையீடு இருப்பின், தங்களைப்பற்றிக் கடுவன் மறத்தலும் கூடும் என்ற எண்ணமுங்கூடத்தான்.

சொக்கியும் முல்லையும் தப்பியோடிவிட்ட செய்தி விரையில் கடுவன்பண்ணையில் பரவியது. கழிபெருஞ்சீற்றம் கொண்ட கடுவன் அவ் விருவரையும் தேடப் பெருமுயற்சிகள் செய்தான்; பல பக்கங்கட்கும் ஆள்களையும் வேட்டைநாய்களையும் அனுப்பித் தேடுமாறு ஏவினன். ஒன்றும் பயன் படவில்லை.

தங்களைத் தேடுவதற்காகச் செய்யப்படும் முயற்சிக ளனைத்தையும் முல்லையும் சொக்கியும் பரணிலிருந்து ஓட்டைவழியாகப் பார்த்துச் சிரித்துக்கொண்டேயிருந்தனர். எனினும், சொக்கிக்கு மட்டும் உள்ளத்தில் அச்சம்தான்.

" பரண்மீது ஏறித் தேடமாட்டார்களா ?" என்று முல்லையைச் சொக்கி வினவினள்.

" இந்தப்பக்கமே யாரும் தலைநீட்டமாட்டார்கள். அதைப்பற்றி நீ அஞ்சாதே. அவ்வளவு பயத்தை நான் அவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறேன்," என்று பதிலளித்தாள் முல்லை.

முல்லையைத் தேடு படலம் பயனற்றதாய் முடியவே, அடங்காத சீற்றமும் ஏமாற்றமு மடைந்த கடுவன், " அந்த நல்லானை இங்குப் பிடித்திழுத்து வாருங்கள். அவனுக்குத் தெரிந்திருக்கும் அவர்கள் தப்பியது. எவ்வாற்றானும் அவனிடமிருந்து உண்மையை வருவித்துவிடுகிறேன்," என்று மட்டிக்கும் மடையனுக்கும் கட்டளையிட்டான்.

நல்லானுக்குத் துன்பம் விளைவிப்பதென்றால் மட்டிக்கும் மடையனுக்கும் விருந்துண்பதுபோல் இருக்கும். நல்லானை அவர்கள் பிடித்துக்கொண்டு வந்து கடுவன்முன் நிறுத்தினர்.

" அடே! இன்று உனக்கு என்ன நடக்கப் போகிறது, தெரியுமா ?" என்று இடியிடித்ததுபோல் வினவினன் கடுவன்.

" மரணத்தைவிட அதிகமிராது " என்று அமைதியாகப் பதிலளித்தான் நல்லான்.

“நன்றாகத்தான் பதில் சொல்கிறாய். உனக்குச் சிறிது மூளைகூட இருக்கிறது. அந்த மூல்லையும் சொக்கியும் எங்கே? சொல். சொல்லாவிடில்......”

நல்லான் பேசாமல் நின்றுகொண்டிருந்தான்.

“சொல்லப்போகிறாயா, இல்லையா?” என்று கத்திக்கொண்டே நல்லான்கன்னத்தில் பேய் அறைவதுபோல் கடுவன் ஓர் அறை அறைந்தான்.

“எனக்கு அவர்கள் இருக்குமிடம் தெரியும். ஆனால் உயிர்போனாலும் அவர்களைக் காட்டிக்கொடுக்கமாட்டேன்.”

“நல்லான்! இன்று என்உள்ளம் உறுதிப்பட்டுவிட்டது. நீ எப்போதும் என்னை எதிர்த்தே வந்திருக்கிறாய். ஒன்று, இன்று நீ உண்மையை உரைத்தாக வேண்டும்; இன்றேல் மரணக்கணக்கில் உன்னைப் பதிவுசெய்துகொள்ளவேண்டும். உன் உடம்பில் ஒரு சொட்டுக் குருதி யிருக்கும்வரையில் உன்னை வதைக்கப்போகிறேன்.”

“யான் சிந்துங் குருதி உங்கள் உடலையும் ஆன்மாவையும் காக்குமேல், மகிழ்ச்சியுடன் அதனை ஈவேன். இந்த உடல் உங்களுடையதன்றோ? பெருவிலை கொடுத்து அதனைப் பெற்றீர்களே! நீங்கள் அதனைப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால், உடலினுள் இருக்கும் ஆன்மா ஆண்டவனுக்கு உரியது; அழிவற்றது. அதனைத் தீண்ட உங்களால் ஆகாது.”

வியப்புற்றவனுய்க் கடுவன் நல்லானை நோக்கி-ஞன். தெய்வமனிதனெருவன் தன் முன்னின்று வாதாடுவதுபோல் அவனுக்கு ஒருகணம் தோன்றி-யது. நல்லான் கூறியவற்றைக் கேட்க அவன் உள்-ளிருந்த பேய் இணங்கவில்லை. இருஅடிமைப்பெண்-களை இழந்த நட்டவுணர்ச்சியும், நல்லானைத் தன் வழிக்குக் கொண்டுவரமாட்டாமையா லுண்டாகிய அவமானவுணர்ச்சியும், கடுவனின் ஆத்திரத்தை அதிகப்படுத்தவே தன் வன்மையையெல்லாம் ஒன்றுதிரட்டிக்கொண்டு, நல்லானது முதுகிலும் முகத்திலும் கன்னத்திலும் பலமுறைகள் அடித்-தான் ; கை சலிக்கும்வரையில் சவுக்கால் வீசினன். முடிவில் களைத்துப்போய்க் கால்களால் அவனை உதைத்துக் கீழே தள்ளிவிட்டு, "செத்துப்போ" என்று உறுமிக்கொண்டே வெறுப்புடன் நின்ருன்.

நல்லான் நினைவிழந்து கீழே விழுந்தான். அவன் உடலிலிருந்து அப்போது பெருகிய குருதி-யால் அந்தஇடம் முழுதும் செந்நிறமாயது. அந்தக் காட்சியைக் கண்ட மட்டியும் மடையனுங்கூட அஞ்சி நின்றனர். சிறிதுபொழுது சென்றபின்,

"தலைவரே! நல்லான்நாள் இன்றுடன் முடிந்து-விட்டது!" என்ருன் மட்டி.

"தொலையட்டும்" என்ருன் கடுவன். "இதற்கு-மேல் உங்களால் என்னை ஒன்றும் செய்ய இயலாது. உங்களை மனமார மன்னிக்கின்றேன்," என்று தடுமாறிக்கொண்டே சொன்னன் நல்லான். அவ்-

வளவில் நல்லான் தலை தரைமேல் சாய்ந்தது. அவனிடமிருந்து மேற்கொண்டு பேச்சு வரவில்லை.

நல்லான் மாண்டுவிட்டதாக எண்ணிக்கொண்டு கடுவன் அவ்விடத்தினின்று அகன்றான். பின்னால்நின்ற மட்டி,

"நல்லான்! உன்னை யானும் கொடுமைப்படுத்தினேனல்லவா? அதற்காக வருந்துகிறேன். என்னை மன்னித்துவிடு" என்றான். அப்போது அவன் கண்களில் கண்ணீர் ததும்பியது.

"ஆண்டவனே! எங்களை மன்னித்துவிடு," என்றான் மடையன். தியாகசிகரமான நல்லானைக் கண்டு எதற்கும் அசையாத அவ் விருவுள்ளங்களும் உருகியதில் வியப்பில்லை.

மட்டியும் மடையனும் நல்லானைக் குடிசைக்குத் தூக்கிச்சென்று, அவனது படுக்கையிற் படுக்க வைத்தனர்; காயங்களைக் கழுவி மருந்திட்டனர்; பருக நீர் கொடுத்தனர். சிறிதுபொழுது நல்லானுடன் இருந்துவிட்டுத் தத்தம் குடிசைகளுக்கு ஏகினர்.

---

23. கண்ணீரின் முடிவு

இந்த நிகழ்ச்சி நடந்த இரண்டாம்நாள் நடுப்பகல் ஓர் இளைஞன் கடுவன் இல்லத்துக்கு வந்தான். அவன் தான் சொக்கனார்மகன் அன்பன்.

நல்லான் தன்மனைவிக்கு எழுதிய அஞ்சல் திபூழின் காரணமாக இடையே தங்கித்தங்கிப் பல-

திங்கள் கழித்து வல்லிபாற் சென்றது. அக் கடிதம் அங்குச் சேர்ந்தபோது, சொக்கனர் கடுங்காய்ச்சலாற் படுக்கையிற் கிடந்தார். தம்கணவரைப் பேணுவதில் தன்முழுக்கவனத்தையும் செலுத்திவந்ததனல், முழுமதி நல்லானிடமிருந்துவந்த கடிதத்தைக் கவனிக்கமுடியவில்லை. பின்னும் சிலநாட்களில் சொக்கனர் காலமாக, நல்லானை விடுவிக்கும் எண்ணம் முழுமதியின் உள்ளத்திலிருந்து மறைந்துவிட்டது. முழுமதி தன் பண்ணைவிஷயங்களையும், காலஞ்-சென்றுவிட்ட கணவருடைய கொடுக்கல் வாங்கல் விஷயங்களையும் ஒருவாறு முடித்துக்கொண்டு, பிற-விஷயங்களில் அக்கறை காட்டப் பல திங்கள்கள் ஆயின. ஆனல் அன்பன்மட்டும், நல்லானுக்கு முழுமதியம்மை கொடுத்திருந்த வாக்குறுதியைப் பற்றி அடிக்கடி அவளுக்கு நினைவுபடுத்திக்கொண்-டிருந்தான். கடைசியாக ஒருநாள் முழுமதி தன் மகன் அன்பனை அழைத்து, அவனிடம் நல்லானை மீட்பதற்குரிய பணத்தைக் கொடுத்துச் செவ்வேள் இருந்த வன்னிநாட்டுக் கனுப்பினள்.

பலநாட்களுக்குப்பின்னர் வன்னிநாடு அடைந்த அன்பன் செவ்வேள் மாண்டதும் நல்லான் கடுவ-னுக்கு விற்கப்பட்டுவிட்டதையும் அறிந்துகொண்டு, பின்னும் பலநாட்கள் கடந்து கடுவன்பண்ணைக்கு வந்து சேர்ந்தான்.

“நீங்கள்தான கடுவன் என்பவர்?” என்று, தன் இல்லத்தின் தாழ்வாரத்தில் கட்டிலொன்றில் அமர்ந்திருந்த கடுவனையே வினவினன் அன்பன்.

"ஆம்."

"நல்லானை யான் மீட்க வந்துளேன்."

நல்லான் என்ற சொல், தணிந்திருந்த சீற்றத்தை மீட்டும் கடுவன் உள்ளத்தில் எழுப்பியது.

"நல்லானை விலைக்கு வாங்கிய தீயூழ் என் தலையில் விழுந்தது. அதனைப்போன்ற பயனற்றதொரு வியாபாரத்தை என்வாழ்நாளில் யான் செய்ததேயில்லை. அவனால் எனக்குப் பெருத்த நட்டம். என்பாலிருந்த இருஅடிமைப்பெண்கள் தப்பியோட அவன் உதவிசெய்தான்; அவர்களிருக்குமிடத்தைக் கூற மறுத்துவிட்டான். சீற்றங்கொண்டு, சாகும்வரை அவனை யடித்தும் பயனில்லை. அவன் உயிருடன் இருக்கின்றானோ, செத்தானோ, தெரியாது."

"அவன் இப்போது எங்கே! எங்கே! விரைவாய்ச் சொல்லுங்கள்" என்று படபடப்புடன் வினவினான் அன்பன். கடைசியாகக் கடுவன் கூறிய மொழிகளே அதற்குக் காரணம்.

"அதோ தெரிகின்றதே, அந்தக் குடிசைக்குச் சென்று பாருங்கள். அவன் உயிருடனிருந்தால், அது உங்கள் நல்லூழ்."

அதற்குமேல் அங்கு நிற்க அன்பன்கால்கள் விரும்பவில்லை.

எழுவதற்கும் இயலாமல், பேசுவதற்கும் வலியின்றி, தன்குடிசையில் நினைவற்றுக் கிடந்தான் நல்லான். எப்போதாவது நினைவு வரின், இறைவன்-

திருப்பெயரைச் சொல்வான். நல்லானிடம் அன்பு கொண்ட அடிமைகள் கடுவன் அரியாவண்ணம் அவன்குடிசைக்கு வந்து பருக நீர் கொடுப்பார்கள்; ஆறுதல்மொழி கூறிச் செல்வார்கள். அன்றிரவு, அனைவரும் உறங்கியபின் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாது, முல்லையும் சொக்கியும் பரணி-லிருந்து இறங்கி நல்லான்குடிசைக்கு வந்து நல்லான்அருகில் அமர்ந்துகொண்டு அவனுக்குப் பணிவிடை செய்தனர். அவர்களை ஓடிவிடுமாறு நல்லான் பன்முறை வேண்டிக்கொண்ட பின்னரே, அவர்கள் அகன்றனர்.

அன்பன் நல்லான்குடிசைக்கு வந்தபோது அவன் கண்ட காட்சி பதினாயிரம் பேரிடிகள் ஒரு-சேர அவன் தலையில் வீழ்ந்ததுபோன்ற வேதனை-யை அளித்தது. இப்புறம் அப்புறம் திரும்பக் கூட வலியற்றுக் கண்களை மூடிக்கொண்டு கிடந்-தான் நல்லான். நுண்மையாக வந்துகொண்டிருந்த மூச்சு அவன் சாகவில்லை யென்பதைக் காட்டியது.

"நல்லான்! நல்லான்!" என்று கூவிக்-கொண்டே தரைமீது விழுந்தான் அன்பன்.

"உம்ம்......... யார்?" என்று பேசமுடியாமல் வினவினான் நல்லான்.

"நல்லான்! என்னைத் தெரியவில்லையா உனக்கு! ....இதோ பார்! நான்தான் அன்பன்; உன் அன்பன்; உன் அன்புக்கரங்களில் தவழ்ந்து விளை-யாடிய அன்பன்; உன் பொற்கரங்களால் தாலாட்டப்பெற்ற பாக்கியவான் அன்பன்."

"அன்பரே! இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். நீங்கள் என்னை மறந்துவிடவில்லை. அதுதான் யான் விரும்பியது. இனி அமைதியுடன் என் உயிர் ஏகும். அதற்காகவே இந்த உயிர் இதுவரையில் இந்த உடலில் ஊசலாடிக்கொண்டிருந்தது."

"நல்லான்! நீ சாகக்கூடாது. நீ சாவது அறம் சாவதற் கொப்பாகும். உன்னை மீட்டுப்போகவே வந்திருக்கின்றேன்."

"அன்பரே! இனி அது நடைபெறாது. காலம் கடந்து வந்தீர்கள். நீங்கள் என்னை மீட்பதற்குள் ஆண்டவன் என்னை மீட்டுவிட்டான். இப்போது பேரின்ப வுலகுக்குச் சென்றுகொண்டிருக்கிறேன். வெற்றிச் சங்கொலி என் காதுகளில் நன்கு விழுகின்றது."

"நல்லான்! 'இறக்கிறேன்' என்று மறுபடியும் சொல்லாதே. என்னால் தாங்கமுடியவில்லை. இந்த நரகில் ஏழைபோல் நீ சாகக்கூடாது."

"இதுகாறும்தான் யான் ஏழையா யிருந்தேன். இனி, யான் செல்வருட் செல்வன். இறைவன் என்னை ஏற்றுக்கொண்டுவிட்டான். இறுதிப் போரில் வெற்றி எனக்கே."

அன்பன் கண்களில் கண்ணீர் வடிந்தது. பேச அறியானாய்ச் சற்றுநேரம் அசைவற்று உட்கார்ந்திருந்தான்.

"அன்பரே! என் வணக்கத்தைத் தங்கள் பெற்றோருக்கு அறிவியும்; என் அன்பினை என் மனைவி மக்களுக்குத் தெரிவியும். 'நல்லான் எல்லா

ரையும் அன்புடன் விரும்பினான். நல்லவனாக வாழ்ந்தான்' என்று இவ்வுலகம் என்னைப்பற்றிக் கூறினால் போதும்".

அப்போது கடுவன் அங்கு வந்தான்.

"இரக்கமற்றவனே! அறத்தின் ஆணிவேரைக் கல்லி எறிந்துவிட்டாயே! உலகிலுள்ள மக்களனைவரும் நல்லான் ஒருவனுக்கு ஈடாவரோ!" என்று அன்பன் இரைந்தான்.

"அவரைப் பழிக்காதிர்கள். அவர்தாம் இன்பவுலகின் கதவினை எனக்குத் திறந்தவர்" என்று குறுக்கிட்டுக் கூறினான் நல்லான். அவ்வளவில் அவன்பேச்சு நின்றது; மூச்சு அற்றது; கண்கள் மூடின. பிளிறலும், கர்ஜனையும், முழக்கமும், அலறலும் போன்ற மூரொலிகளுக்கிடையே இசைத்துவந்த மெல்லிய அந்தத் தெய்வகீதம் ஓய்ந்தது. அதுகாறும் மண்ணை விண்ணாக்கி வந்த அந்த மனிதன், மனிதன் என்ற சொல்லின் முழுப்பொருளுக்கும் பொருளாக விளங்கிய அப் புனிதன், அமரநிலை எய்தினான். இறந்தபின்னரும் நல்லான்முகத்தில் ஒருவிதத்தெய்விகவொளியும் சாந்தமும் தவழ்ந்தன.

பன்னூறு மைல் படர்ந்துசெல்லும் ஒரு பாதையும் ஓரிடத்தில் முடிந்துதானாகவேண்டும். இடியும் மின்னலும், காரிருளும் கனமழையும் கொண்ட நீண்ட இரவும் சிறுகச் சிறுகக் கரைந்து வைகறையாய் வெளிவந்துதானாகவேண்டும். அடிமைப்படுகுழியில் பிறந்து, மணங்கமழும் மலர்ப்பாத்தியில் சிறிதுகாலம் பயின்று, உற்றாரையும் பெற்ற

மக்களையும் மனைவியையும் பிரிந்து, பிரிவெனும் கடும் பாலையில் உழன்று, இடையில் தண்சுனைப் பொய்கையில் சில கணங்கள் தங்கி, மீட்டும் மாளா வேதனையெனும் மீளா இருட்குகையில் வீழ்ந்து, உடலும் உள்ளமும் ஒடிந்தும் இறைப்பொழுதும் இறைவனை மறவாமலும், கடமையினின்று வழுவாமலும். பகைவனிடத்தும் அன்புகாட்டிய ஒரு பண்பாளனின், சான்றோரினும் மிக்க ஓர் ஆன்றோனின், வாழ்க்கைச்செலவு அதனோடு முடிவுற்றது.

ஒரு பெருமலை புரண்டது; அறவாழி அலையோய்ந்தது; சவக்குழியின் மௌனம் அங்குக் குடிகொண்டது.

"இவ்வுடலை எடுத்துச் செல்ல எவ்வளவு பணம் தரவேண்டும்?" என்று அங்கு நிலவிய அமைதியைச் சிதைத்துக்கொண்டே அன்பன் கடுவனை வினவினான்.

"செத்த பிணத்துக்கு யான் பணம் வாங்குவதில்லை; வெறுமனே நீ எடுத்துச் செல்லலாம். உனக்கு விருப்பமான இடத்தில் புதைக்கலாம்," என்று கடுப்புடன் புகன்றான் கடுவன்.

அதற்குமேல் கடுவனுக்கும் அன்பனுக்கும் உரையாடல் நிகழவில்லை.

அன்பன் அங்கிருந்த இருஅடிமைகளின் உதவியால் நல்லான்சவத்தைத் தான் கொண்டுவந்திருந்த வாடகைவண்டியில் ஏற்றினான்; அவனுடைய உடைகளாலேயே அவனது புனிதவுடலை மூடினான்.

நல்லானின் உடலைச் சுமந்துகொண்டு வண்டியும் புறப்பட்டது.

சந்தனப்பண்ணைக்கு நல்லான்சவத்தை எடுத்-துச்செல்லவேண்டுமென்பது அன்பனின் அவா. ஆனால் அவன் வரும் வழியில், தூயோர்உள்ளம்-போல் தெளிந்த நீரோடையும், அன்பர்கள்மனம்-போல் குளிர்ந்த சோலையும், மலரும் மணமும், அமை-தியும் தூய்மையும் செறிந்த வொரு சூழல் அவன் கருத்தினைக் கவரவே நல்லான் தகுதிக்கு ஏற்ற பிறி-தோரிடம் மண்ணில் கிடைப்பது அரி தென்று அன்பன் கருதி, வழிப்போக்கர்களின் உதவியினைக் கொண்டு ஒரு குழி எடுத்து நல்லான்சவத்தை அதிற் கிடத்தினான். மண் மண்ணுடன் சேர்ந்தது. குழி தரைமட்டமாக்கப்பெற்றது.

ஆங்கிருந்து அகலுமுன் அன்பன், நல்லான் சவக்குழிக்குமுன் மண்டியிட்டு, "இந்தப் புனித நாளில், இந்தப் புனிதன் ஆவிமுன், எங்கும் நிறைந்-திருக்கும் இறைவன் திருமுன், யான் செய்துகொள்-ளும் உறுதி இது. ஆறறிவு படைத்த மனிதனை மற்றோர்மனிதன் அடிமைகொள்ளும் விலங்-கொழுக்கத்தை இம்மண்ணினின்று ஓட்டுவேன்; அதற்கெனவே என் உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றும் இனிப் பயன்படும். எஞ்சிய என் வாழ்வின் திருப்பணி அஃதொன்றே," என்று வாயாரப் புகன்றான்.

நல்லானின் வாழ்வும் மரணமும் இரக்கவுள்ளம் படைத்தவர்களாகத் தங்களைக் கூறிக்கொள்ளு-

கின்றவர்களுக்கு ஓர் உரைகல்; சீர்திருத்தக்காரர்களுக்கு ஒரு துலாக்கோல்; பொய்ந்நாகரிகத்துக்கு ஓர் எச்சு.

நல்லானைப் புதைத்த இடத்தைக் குறிக்குஞ் சின்னம் எதுவுமில்லை. அது அவனுக்கு வேண்டாம். அவன்புகழுக்கு எல்லை கோலுவது எளிதன்று. இறைவனின் திருவருளை வெளியிடும் வாயில்கள் செல்வமும் செருக்குமல்ல; ஆடம்பரமும் அதிகாரமுமல்ல; அன்பும் தியாகமுமே. இவ்விரண்டும் உலகில் இருக்கும்வரையில் நல்லானைக் குறிக்க எந்தச் சின்னமும் தேவையில்லை.

தன்வினை தன்னைச் சுடுமல்லவா? வாழ்ந்த போது நல்லானைப் பலகொடுமைகளுக் காளாக்கி மரணத்தின் வாயிலிலே அவனைக் கொணர்ந்து விட்ட கடுவனை, நல்லான் மாண்டபிறகு, ஓர் அச்சம் பற்றிக்கொண்டது. அதன் காரணமாக அவன் மனவமைதி குலைந்தது. உளவமைதியைத் தேடச் சில நாட்கள் வெளியூர் செல்ல முடிவு செய்து கடுவன், மட்டி, மடையன் ஆகிய இருவருடன் சென்றுவிட்டான். அதுவரையிற் பரணில் மறைந்துகொண்டிருந்த முல்லையும் சொக்கியும் வாய்த்த அமயத்தை நழுவவிடாது, மாற்றுடை பூண்டு, அவ்விடத்தினின்று வெளியேறிப் பன்னீர் ஏரியைக் கடந்து, தென்றல்நாடு அடைந்து விடுதலை பெற்ற மக்களாயினர்.

நல்லானை மீட்கச்சென்ற அன்பன் வறிதே மீண்ட செய்தி முழுமதியம்மைக்குச் சொல்லொணாத்

துயரை விளைத்தது, கணவன் 'வரும், வரும்' என்று காத்திருந்த வல்லி, நல்லானுக்கு வாய்த்த முடிவினைக் கேட்டு உயிர்ச்சவமானாள்.

இதற்குமேலும் இத் துன்பியல் வரலாற்றை நீட்டவேண்டுவதின்று.

நல்லான் சவக்குழியின் முன் தான் செய்த சூளுரைப்படி, அன்பன் ஒருநாட்காலை, தன் பண்ணையில் வேலை பார்த்து வந்த அடிமைகளை விளித்து, அன்றுமுதல் அவர்கள் விடுதலைபெற்ற மக்களாகிவிட்டனர் என்று கூறி, அதற்குச் சான்றாக அவர்கள் ஒவ்வொருவருக்கும் விடுதலை முறியை ஈந்தான். திடீரென விடுதலைபெற்ற அவர்கள் செய்வ தறியாது திகைத்தனர். அன்பன் அன்பனைப்பினின்றும் பிரிந்து செல்ல அவர்கள் மறுத்து அங்கேயே வாழப் போவதாகக் கூறினர். அப்போது அன்பன்,

" அன்பர்களே! நீங்கள் என்னை விட்டுப் பிரிந்து செல்வதை யானும் விரும்பவில்லை. சந்தனப் பண்ணையில் உங்களுக்கு என்றும் இன்பமான இடம் உண்டு; உங்கள் உழைப்பினாலன்றோ இப்பண்ணை இத்தகைய வள முற்றது. முன்னர் நீங்கள் என்-உடைமைகளாய், அசையாப் பொருள்கள்போன்றும், ஆடுமாடுகள் போன்றும், என் விருப்பு வெறுப்புக்களுக் காளாயிருந்து வந்தீர்கள். இனி நீங்கள் உங்கள் விருப்பு வெறுப்புக்களுக் கேற்ப, உங்கள் இச்சைபோல் நடந்துகொள்ளும் உரிமை

பெற்றுவிட்டீர்கள். என் பொருளாதார நிலை, இனி உங்கள் வாழ்வினைக் கட்டுப்படுத்தாது. உங்கள் உழைப்புக்குத் தக்கபடி, நாட்கூலியோ, திங்கட் கூலியோ, நீங்கள் பெறுவீர்கள். நீங்கள் இப்போது பெற்றுள்ள இந்த விடுதலைக்குக் காரணனாயிருந்த நல்லானே உங்கள் வீரன். அந்த அமரனின் நினைவுச்சின்னமாக, அவன் பாதப்பொடியால் புனிதமுற்ற அந்தச் சிறுகுடில் நம் அனைவருக்கும் ஒரு புனிதக்கோயில்; அவனே நம் உள்ளத்து வைத்து நாம் போற்றவேண்டிய கடவுள். அந்தக் குடிலை நாம் அணுகும்பொழுதெல்லாம், அடிமைகளின் விடுதலைக்காக அவன் செய்த மாபெருந் தியாகங்கள் நம் உள்ளத்தே தோன்றி நம்மைத் தூய்மைப் படுத்துமாக" என்று கூறி முடித்தபோது, அங்குக் குழுமியிருந்த அடிமைகள் அனைவரும் "**நல்லான் வாழ்க! நல்லான் வாழ்க!! நல்லான் வாழ்க!!!**" என்று மும்முறை முழக்கஞ்செய்து நல்லான் வாழ்ந்துவந்த குடிலை நோக்கி வணக்கம் செலுத்தினர்.

PRINTED AT RAJAH POWER PRESS, MADRAS-14.